# வைகறை வெளிச்சம்

விலை ரூ. 20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 12 Issue - 02

பிப்ரவரி 2019 - ஜமாத்துல் அவ்வல் - ஜமாத்துல் ஆகிர் 1440




## பா.ஜ.க.வின் ஊழல்கள்

### கொள்ளை போகும் இந்தியா!



## மின்னணு வாக்கு இயந்திரங்கள்

### தேர்தலும் தோற்றுப் போகும் மக்களும்!




### உலக ஹிஜாப் நாள்

- இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை - பாரதியார்
- நைஜீரியாவின் அறிவு களஞ்சியம் ஆயிஷா லெமு



### தலைமைத்துவமில்லாத உம்மத்தும்! இஸ்லாமிய இயக்கங்களின் கடமையும்!!

بسم الله الرحمن الرحيم

# பா.ஜ.க.வின் ஊழல்கள் – கொள்ளை போகும் இந்தியா!

கவர் ஸ்டோரி - 04 பக்கம்

அவர்கள், தங்களிடம் ஞானம் (வேதம்) வந்த பின்னர், தங்களுக்கிடையேயுள்ள பொறாமையின் காரணமாகவேயன்றி அவர்கள் பிரிந்து போகவில்லை; (அவர்கள் பற்றிய தீர்ப்பு) ஒரு குறிப்பிட்ட தவணையில் என்று உம்முடைய இறைவனின் வாக்கு முன்னரே ஏற்பட்டிருக்காவிடில், அவர்களிடையே (இதற்குள்) நிச்சயமாக தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும்; அன்றியும், அவர்களுக்கு பின்னர் யார் வேதத்திற்கு வாரிசாக்கப்பட்டார்களோ நிச்சயமாக அவர்களும் இதில் பெரும் சந்தேகத்தில் இருக்கின்றனர்.(42:14)


26 நைஜீரியாவின் அறிவு களஞ்சியம் ஆயிஷா லெமு

31 எது முதலில்?

36 வாக்குப்பதிவு இயந்திரம் ஹேக்கர் மீது புகார்!

38 மின்னணு வாக்கு இயந்திரங்கள் செய்யித் சுஜாத் - இன் நியாயங்கள்

42 தேர்தலும் தோற்றுப்போகும் மக்களும்!

45 சிலுவைப் போர் 2.0

50 குஜராத்தில் வீரப் பெண்மணி!

52 இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?

56 உலக ஹிஜாப் நாள் பிப்ரவரி - 01



# வைகறை வெளிச்சம்

பிப்ரவரி 2019 - ஜமாத்துல் அவ்வல் - ஜமாத்துல் ஆகிர் 1440

ஆசிரியர்

மு.குலாம் முஹம்மது,M.A., Journalism & Communication

துணை ஆசிரியர்

கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,


All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only


http:/www.facebook.com/vaigaraivelicham

தனி இதழ்: ரூ.20.

ஆண்டுச் சந்தா

உள் நாடு: ரூ.240.

வெளி நாடு: ரூ.3000.

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

VAIGARAI VELICHAM

52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.

+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darulislam.in



# பா.ஜ.க.வின் ஊழல்கள்

## கொள்ளை போகும் இந்தியா!

பா.ஜ.க, லஞ்சம் வாங்காத ஊழல் செய்யாத உலக உத்தம கட்சி, என உலகம் முழுக்க பொய் பேசி வருகிறார் பிரதமர் மோடி. ஆனால் அவர் கட்சியும், அவரும் ஊழல் செய்தே திளைத்தவர்கள். பாஜக செய்யும் ஊழலில் நாட்டின் பணம் மட்டுமல்ல, இந்த நாட்டின் சாமான்ய மக்களின் உயிரும் ஆயிரக்கணக்கில் பலியாயிருக்கிறது. அந்த ஊழல்களின் பட்டியல்களில் சில;

> “போர் விமானம் முதல் பல்ப் வரை ஊழல் செய்வதில் குறையே வைப்பதில்லை பாஜக”

**2003 - 40 ஏக்கர் நில மோசடி - மோடியின் குஜராத் ஊழல்.**

குஜராத் மாநிலத்தின் குட்ச் நகரத்தில் உள்ள 40 ஏக்கர் நிலத்தை Alumina Refinery Limited என்ற தனியார் நிறுவனத்திற்கு, மோடி முதலமைச்சராக இருந்த போது வழங்கினார். இதில் சட்ட விதிகள் மீறப்பட்டிருக்கிறது என்று உச்சநீதிமன்றம் கூறியிருக்கிறது.

2003ஆம் ஆண்டில், எந்த காரணத்திற்காக நிலம் கொடுக்கப் பட்டதாக சொல்லப் பட்டதோ அந்த பணியினை பத்தாண்டுகள் ஆகியும் தொடங்க கூடவில்லை. இந்த நிலத்தின் மதிப்பு 2008ம் ஆண்டில் 4.35 கோடி. ஆனால் இதில் நான்கில் ஒரு பங்கை மட்டும் பெற்றுக் கொண்டு நிலம் தனியார் நிறுவனத்துக்கு வழங்கப் பட்டிருக்கிறது. (Economic Time 24/01/2014)

**2005 - HUDCO ஊழல்**

முன்னாள், மத்தியில் பாஜக ஆட்சியில் இருந்த

போது நகர்புற மேம்பாட்டு அமைச்சராக இருந்த ஆனந்த் குமார் மீது, மத்திய லஞ்ச ஒழிப்பு துறை HUDCO மூலம் 14,500 கோடி ரூபாய் ஊழல் செய்ததாக குற்றம் சாட்டிருக்கிறது.

Housing and Urban Development Corporation (HUDCO) மூலம் ஒரே நாளில் 50 தனியார் நிறுவனங்களுக்கு ரூ.5000 கோடி ரூபாய் கடனாக கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனந்த் குமார் அமைச்சராக இருக்கும் போது தனிப்பட்ட செலவான மொபைல் பில் உட்பட பல நடவடிக்கைகளை அரசு நிதியில் இருந்து தான் செய்து வந்தார் என்றும் இவர் மீது குற்றம் சாட்டப் பட்டிருக்கிறது. (The Hindu 30/08/2005) (Economic Times 17/07/07)

### 2006 - கூட்டுறவு ஊழல் - சத்திஸ்கர்

சத்திஸ்கரில் உள்ள கூட்டுறவு வங்கி, Indira Priyadarshini Mahila Nagrik Sahkari Bank ஊழலில் ஈடுபட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டு, 2006ம் ஆண்டு முக்கிய குற்றவாளியாக சின்ஹா மற்றும் வங்கியின் நிர்வாகஸ்தர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதில் கைது செய்யப்பட்ட முக்கிய குற்றவாளியான சின்ஹா விற்கு நார்கோ அனாலிஸ் (உண்மை கண்டறியும் சோதனை) டெஸ்டின் போது எடுத்த காணொளி ஊடகங்களில் வெளிவந்தது.

அந்த காணொளியில் சத்திஸ்கர் முதலமைச்சர் ராமன் சிங்கிற்கும் அவரது அமைசரவையில் உள்ள மூத்த அமைச்சர் இருவருக்கும் கோடிக்கணக்கில் லஞ்சம் கொடுத்தாக சின்ஹா கூறுகிறார்.

### 2007 - ஆகஸ்டா விமான ஊழல் வழக்கு

ஆகஸ்டா 109, VIPக்கள் பயணிக்கும் பிரத்யேக ஹெலிகாப்டர் 2007ம் ஆண்டு சத்திஸ்கர் அரசால் வாங்கப்பட்டது. வேறு எந்த நிறுவனங்களையும் கலந்துரையாடாமல் ஆகஸ்டா என்ற தனி நிறுவனத்திற்கே இந்த டெண்டர் கொடுக்கப் பட்டது. இதற்கான 30% கமிஷன் பணம் தவறான முறையில் 1.57 மில்லியன் டாலர் முன்னதாகவே கமிஷன் என்ற பெயரில் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த ஊழலை முன்னின்று செய்தவர்கள் சத்தீஸ்கரின் முதலமைச்சராக இருந்த ராமன் சிங்கும், அவரது மகன் அபிஷேக் சிங்கும் தான் என்று தெரிய வந்தது. CAG அறிக்கைப்படி, இந்த ஒப்பந்தம் மூலம் ரூ.65 கோடி பணம் அரசாங்க நிதிக்கு இழப்பை தந்திருக்கிறது என்கிறது. (The wire 14/02/18) (TOI 16/11/17)

### 2008 - மத்திய பிரதேச வறட்சி ஊழல்

2008ம் ஆண்டு மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு உத்திரபிரதேசம் மற்றும் மத்திய பிரதேச பகுதிகளில் வறட்சியில் நிலவும் மாவட்டங்களின் வளர்ச்சிக்காக மொத்தமாக ரூ.7400 கோடி ரூபாயை ஒதுக்கியது. அதில் மத்திய பிரதேச அரசுக்கு 3760 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டது.

பிறகு, மத்திய பிரதேசத்தில் அப்போது ஆட்சியில் இருந்த பாஜக, இந்த தொகையில் ரூ.2100 கோடி ரூபாய் அவர்களின் முன்னேற்றத்திற்காக செலவிடப்பட்டதாக கூறியது.

ஆனால் உண்மை என்னவென்று கோப்ரா போஸ்ட் என்ற பத்திரிக்கை ஆய்வு செய்து வெளியிட்டது. அதில் வறட்சியில் இருந்த மக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து அவர்களுக்கு எந்தவொரு முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகளும் செய்து தரவில்லை, அதற்கு மாறாக அவர்கள் அதிகாரிகளின் மூலமாக மேலும் அதிகமாக துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள் என தெரிய வந்தது.

வறட்சி நிலைமையில் பேரழிவை சந்தித்து வந்த மக்களின் முன்னேற்றத்திற்காக வழங்கப்பட்ட நிதியை ஊழல் செய்து பங்கீட்டுக் கொண்டது மத்திய பிரதேச பாஜக அரசு.

(TOI 26/03/18) (the wire 23/11/18)

### 2009 - மோடி - குஜராத் பெட்ரோலியம் ஊழல்

Gujarat State Petroleum Corporation Ltd (GSPC) என்ற நிறுவனம் 1979களிலிருந்து குஜராத் அரசின் கீழ் இயங்க கூடியது. கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு சம்பந்தமான பணிகளை செய்யக் கூடிய நிறுவனம் இது.

2002ஆம் ஆண்டிலிருந்து கிருஷ்ணா கோதாவரி நதி படுகையில் (KG Basin) எரிவாயுவுக்கான சோதனையை நடத்தி வந்தது.

26, ஜூன் 2005ஆம் ஆண்டு குஜராத் முதலமைச்சராக இருந்த மோடி, GSPC இந்தியாவின் மிகப்பெரிய எரிவாயு இருக்கும் வளத்தை கோதாவரி நதிப் படுகையில் கண்டு பிடித்திருப்பதாகவும். இது ஒன்றே இந்தியாவுக்கான தேவையை நிவர்த்தி செய்யும் என்றும் கூறினார். அத்துடன் 1500 கோடியை முதலீடு செய்வதன் மூலம் 2007ம் ஆண்டு இங்கு எரிவாயு உற்பத்தி தொடங்கும் என்று அறிவிப்பு செய்தார்.

ஆனால் 2009க்கு பிறகு இதற்கான அனுமதி பெற்றதும், தொடங்குவதற்கு 8465 கோடி தேவைப்படும் என்று சொல்லப்பட்டது. இது 2005ல் மோடி சொன்ன தொகைக்கு 90% அதிகமானது. 1500 கோடியிலிருந்து 8500 கோடிக்கு மாறியது. தற்போது வரை GPSC நிறுவனம் எந்தவொரு தயாரிப்புகளையும்



தொடங்கவில்லை. ஆனால், 2015 வரை மட்டும் பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகளிடமிருந்து 19716 கோடி கடனாக வாங்கியிருக்கிறது. 2015ம் ஆண்டு வட்டி மட்டும் 1800 கோடி கடனாக வங்கிகளில் இருந்தது.

3000 கோடி மட்டுமே செலவு செய்திருப்பதாக கணக்கு காட்டியிருக்கும் நிறுவனம் இதர செலவுகளில் மற்றதை சேர்த்திருக்கிறது. இதன்மூலம்குறைந்தது 15,000 கோடிக்கு மேல் இதில் ஊழல் நடந்திருப்பது தெரிய வருகிறது.

(Firstpost 09/12/17) (Ndtv 09/05/16)

**மீன் பிடி ஊழல்**

மோடி குஜராத் முதலமைச்சராக இருக்கும் போது அவரது அமைச்சர் புருஷோத்தம் சொலான்கி 400 கோடி ரூபாய் ஊழலை மீன்வளத்துறையில் செய்திருக்கிறார் என்று குற்றம் சாட்டப்படுகிறார். 2009ம் ஆண்டு மீன்வளத்துறை அமைச்சராக இருந்த போது 58 குளங்களில் மீன்பிடிக்க அனுமதி தரும் டெண்டரில் 200 கோடி ரூபாய் ஊழல் செய்திருக்கிறார் என வழக்கு நடந்து வருகிறது.

**2010 - மகா கும்ப மேளா ஊழல் - உத்தரகாண்ட்**

மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு 2010ம் ஆண்டு உத்தரகாண்டில் நடக்கும் கும்ப மேளாவிற்கு 565 கோடியை ஒதுக்கீடு செய்தது. ஆனால் மாநிலத்தில் இருந்த பாஜக அரசு இதிலிருந்து 200 கோடியை தனியே எடுத்து விட்டு 300 கோடியை மட்டும் வைத்து நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்தது. இதனால் செய்யப்பட்ட ஏற்பாடுகளில் எல்லாம் அரைகுறை நிலையிலேயே இருந்தது தெரிய வந்தது.

பிறகு தகவல் அறியும் சட்டத்தின் மூலம், இந்த கும்ப மேளா நிகழ்ச்சிக்கு பாஜக மாநில அரசு 380 கோடி தான் செலவு செய்தது என்றுதெரியவந்தது. மீதமான 180.07 கோடி பற்றி எவ்வித தகவலும் இல்லை.(India Today 01/04/2015)

ஆன்மிகத்தை கூறி அரசியல் நடத்தி வரும் பாஜக எதிலுமே நேர்மையாக இருப்பதில்லை. பல லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளும் ஆன்மிக விழாக்களிலேயே ஊழல் செய்திருக்கிறது.

**ரெட்டி சகோதரர்கள் ஊழல் - சுஷ்மா**

ரெட்டி சகோதரர்களின் ஊழலுக்கு பாஜக அரசும், இன்றைய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சராக இருக்கும் சுஷ்மாவும் எந்தளவு பக்க பலமாக இருந்தார்கள் என்பது வெட்ட வெளிச்சமானது.

காவல்துறை அதிகாரிகள் முதன் முதலில் ரெட்டி சகோதரர்களின் வீட்டுக்குள் நுழையும் போது தான் ரெட்டி சகோதரர்களை பற்றி நாடு தெரிந்து கொண்டது. பல ஏக்கர் பரப்பளவில் வீடு, வீட்டினுள் மட்டும் 50அறைகள், குண்டு துளைக்காத பாதாள அறை, மூன்று ஹெலிகாப்டர்கள், வீட்டை சுற்றி பாதுகாப்புக்கு மட்டும் 100 பேர், வீட்டினுள் இருக்கும் தங்க நாற்காலியின் விலை மட்டும் 2.2 கோடி ரூபாய் என எவரும் மலைத்து போகும் வசதிகளுடன் வாழ்ந்து வந்தனர் ரெட்டி சகோதரர்கள்.

கர்நாடகத்தில் உள்ள பெல்லாரியின் இரும்பு சுரங்கங்கள் சூறையாடப்பட்டதிலிருந்து தான் ரெட்டி சகோதரர்கள் இந்தளவுக்கான வளர்ச்சியை அடைந்திருக்கிறார்கள் என்பது கர்நாடக மக்கள் அனைவரும் அறிந்ததே. பண அதிகாரம் மட்டுமல்ல அரசியல் அதிகாரம் கூட அவர்களிடமே இருந்தது. கர்நாடகாவில் முதன்முறையாக பாஜக'வின் இந்து ராஜ்ஜியம் அமைய "ஆபரேஷன் தாமரை"யை நடத்தி கொடுத்தவர்கள் இவர்கள் தாம்.

ரெட்டி சகோதரர்கள் ரூ.16000 கோடி சுரங்க ஊழல் முறைகேடுகளை வெளிக்கொண்டு வந்தார் கர்நாடாவின் அப்போதைய லோக் ஆயுக்தாவின் நீதிபதி சந்தோஷ் ஹெக்டே. 16 மாத தனிப்பட்ட அவரது போராட்டங்களுக்கு பிறகே குற்றச்சாட்டின் பெயரில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வந்தது.

இப்பேர்பட்ட ஊழல் பேர்வழிகளின் அரசியல் ரட்சகர் இன்றைய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ். ஆண்டுதோறும் அவர்கள் வீட்டில் நடக்கும் சிறு சிறு நிகழ்வுகளிலும் தவறாது கலந்து கொள்பவர். அவ்வளவு நெருக்கம் பாராட்டியவர்.

இறுதியில் சுரங்க ஊழல் வெளிவந்து 2011ம்

ஆண்டு ஜனார்தன ரெட்டி சிறையில் அடைக்கப்படும் போது தான் ரெட்டிகளை கைவிட்டார் சுஷ்மா. அதுவரை சுஷ்மா அவர்களுக்கு தேவையான அனைத்தையும் செய்து கொடுத்து வந்தார். காரணம், ரெட்டி சகோதரர்கள் ஓசையில்லாமல் 'ஆபரேஷன் சுஷ்மா' என்று சுஷ்மாவை பிரதமராக கொண்டு வரும் முயற்சியை செய்து வந்தனர்.

பாஜக ஊழல் வாதிகளுக்கு எதிரான கட்சியென்றுவேஷம்போட்டுக்கொண்டாலும், அவர்களின் சேவை முழுவதும் இந்த ஊழல்வாதி களுக்காகத் தான் இருக்கும். (திஇந்து19/06/15)

**உத்தரகாண்ட் சிடுர்கியா ஊழல்**

முதலமைச்சர் ரமேஷ் போஹரியால் நிசாங்க், சிடுர்கியா பயோகெமிக்கல் நிறுவனத்திற்கு நில ஒதுக்கீடு செய்ததில் முறைகேடு நடந்திருக்கிறது. இந்த நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்ட 30ஏக்கர் இடம் 400கோடி ரூபாய் செலவில் ரிஷிகேஷ் வீட்டு திட்டமாக மாற்றப்பட்டது.

**உத்தரகாண்ட் நில ஊழல்**

பாஜக முன்னாள் முதலமைச்சர் ரமேஷ் போக்ரியால் 400 கோடி நில ஊழலில் ஈடுபட்டுள்ளார். நிலம் கொடுக்கப்பட்ட நடைமுறையில் பல முரண்பாடுகள் இருப்பதாகவும் சட்ட விதி மீறல்கள் இருக்கிறது.

தனியார் மனை விற்பனை நிறுவனத்திற்கு நிலம் ஒதுக்கீடு செய்வதில் இந்த ஊழல் கையாளப் பட்டிருக்கிறது.(India Today 26/06/10)

**2012 - குஜராத் நிலநடுக்க நிவாரண நிதி ஊழல்**

குஜராத் மாநிலத்தில் 2001 நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட பள்ளிகளை சீரமைக்க வழங்கப் பட்ட 21.01 லட்சம் வழங்கப்பட்டது. இந்த நிதியில் குஜராத் மாநிலத்தில் பாஜக எம்.எல்.ஏ சங்கர் சௌதாரி ஊழல் செய்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் எம்.எல்.ஏ சங்கர், அந்த பணத்தை 10% வட்டியுடன் சேர்த்து திருப்பி கட்ட வேண்டும் என்று உத்தரவிட்டது. (Indian Express 07/07/12)

**2013 - குஜராத் GIFT சிட்டி ஊழல்**

மோடி குஜராத் முதலமைச்சராக இருக்கும் போது குஜராத்தின் காந்திநகர் பகுதியில் GIFT city என்ற ஒரு வளர்ச்சி மிகுந்த நகரம் உருவாக்கப்படும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் L&T, Ford, Essar, போன்ற நிறுவனங்கள் கலந்து கொண்டன.

இதில் குஜராத் மந்திரி சபை நிலம் வழங்குவதில் பெரிய ஊழல் செய்ததாக CAG அறிக்கை தருகிறது. ரூ.2700 கோடி ரூபாய் பெருமானம் உள்ள நிலத்தை



குஜராத் அரசு, தனியார் நிறுவனங்களுக்கு வெறும் ரூ.1க்கு கொடுத்திருப்பதாக CAG அறிக்கை அளித்திருக்கிறது.

2700 கோடி ரூபாய் நிலம் வெறும் 1 ரூபாய்க்கு! இந்த மோசடிகளை செய்தவர்கள் எல்லாம் ஊழலுக்கு எதிரானவர்களா? (Indian Express 03/04/13)

**2014 - பாதுகாப்பு துறை எக்ஸ்போ ஊழல் (கோவா)**

முன்னாள் பாதுகாப்பு துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர், தனது சொந்த மாநிலமான கோவா மாநிலத்தில் உள்ள பெட்டுல் என்ற இடத்தில் உள்ள 150ஏக்கர் கடற்கரை பகுதியை பாதுகாப்பு அமைச்சகத்துக்கு ஒதுக்குவதாக கூறியது பெரும் சர்ச்சையை கோவாவில் உருவாக்கியது.

ஏனென்றால், கோவாவின் முதலமைச்சராக பாரிக்கர் இருக்கும் பொது கோவாவின் நிலத்தை மத்திய அரசுக்கு தர முடியாது என்று கடுமையாக பேசியிருந்தார்.அவரே அதனை மீறுகிறார் என்றும் கோவாவில் நிலம் கொடுக்க முடியாது என்று கோவாவில் போராட்டம் தொடர்ந்தது.

ஆனால் பின்னாளில் கோவாவில் ஆட்சியமைத்த பாஜக, மனோகர் பாரிக்கருக்கே முதலமைச்சர் பதவியை கொடுத்தது. தன்மைக்கு ஏற்றவாறு தன்மையை மாற்றிக்கொள்ளும் பச்சோந்தியை போல மீண்டும் கோவாவில் தர வேண்டிய நிலத்தை தமிழ்நாட்டுக்கு மாற்றி விட்டார். இது அனைத்தும் திரை மறைவில் நடந்து முடிந்தது. மக்களை முட்டாள்களாக மாற்றி அதில் அரசியல் நடத்துகிறார்கள் பாஜகவினர். (TOI 19/01/18) (rediff 23/11/15)

**ராஜஸ்தானில் 17,000 பள்ளிகள் மூடல்**

ராஜஸ்தானில் உள்ள பாஜகவை சேர்ந்த வசுந்தரா ராஜே அரசு ஆகஸ்ட் 2014ம் ஆண்டு 17000 அரசு பள்ளிகளை ஒரேயடியாக மூடியது.

மூடப்பட்ட பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அனைவரையும் அருகிலிருக்கும் பள்ளிகளில் இணைத்துக் கொள்ள வழிவகை செய்வதாகவும் கூறியது.

ஆனால் பிற்காலத்தில் மூடப்பட்ட பள்ளியில் படித்து கொண்டிருந்த பெரும்பாலானோர் பெரும் துன்பத்திற்கு ஆளானவர்களாகவும், பலர் படிப்பை பாதியில் விட்டவர்களாகவும் மாறினர்.

ஆனால் அரசு எதற்காக இம்முடிவை எடுத்ததோ அது மட்டும் சிறப்பாக நடந்தது, ஆம், தனியார் பள்ளியின் மாணவர் சேர்க்கை எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகமானது.

மூடப்பட்ட பள்ளிகளில் இருந்து பல மாணவர்கள் கட்டாயத்தின் பேரில் வேறு பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். தலித் மாணவர்களை, அவர்களை விட உயர்ந்த சாதி மாணவர்களின் பள்ளிகளில் இணைத்ததால் பலர் பள்ளிக்கே வரவில்லை. அதே போல், மாணவிகள் மட்டும் படிக்கும் பள்ளியில் படித்த மாணவிகள் கட்டாயம் ஆண்களும் பெண்களும் கலந்து படிக்கும் பள்ளிக்கு மாற்றப்பட்டனர். உருது, சிந்தி மொழிகளை தேர்ந்தெடுத்து அதில் படித்து வந்த மாணவர்கள் கட்டாயமாக இந்தி மட்டும் உள்ள பள்ளிக்கு மாற்றப்பட்டனர்.

வசதி அடிப்படையிலும் கழிப்பறை இல்லாத பள்ளிகளுக்கு பல மாணவர்கள் மாற்றப்பட்டனர். அதே போல் 4 கிமீ தொலைவுக்கு மேல் முதலாம், இரண்டாம் வகுப்பு படிக்கும் குழந்தைகள் கூட செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. மொத்தமாக, 2012-2013ல் 72 லட்சமாக இருந்த சேர்க்கை. 2014ம் ஆண்டு 68 லட்சமாக குறையும் நிலைக்கு ஆளாக்கப்பட்டது.

2014 - 2016 காலக்கட்டத்தில் தரவுகள் அடிப்படையில் மட்டும் 1.4 லட்சம் மாணவர்கள் பள்ளி வேண்டாம் என்று வெளி வந்ததாக மாவட்ட தகவல் நிலையம் சொல்கிறது. ஆனால் வெளியான மாணவர்களில் பெரும்பாலானோர் தரவுகள் இல்லாமல், சொல்லாமல் பள்ளியிலிருந்து நின்றவர்கள். அப்படி இருக்கும் போது இந்த எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கும் என்கிறார்கள் சமூக ஆர்வலர்கள்.

பள்ளி மூடப்பட்டதில் பல்வேறு ஊழல் அடங்கியுள்ளது. முதலாவது வறுமை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் பள்ளி படிப்பை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். அடுத்தது, இதன் மூலம் தனியார் கல்வி நிறுவனம்பெரும் லாபம் அடைந்தது. (The Hindu 29/09/14) (scroll 03/03/17) (TOI 06/01/15)

### 2015 - லலித் மோடி ஊழல் - ஊழலுக்கு உதவிய மோடி அரசு

2010ம் ஆண்டு நடந்த ஐபிஎல் போட்டியில் மேட்ச் பிக்ஸிங், சூதாட்டத்தில் சுமார் ரூ.425 கோடிக்கு ஊழல் நடந்துள்ளதாகவும், இதில் லலித் மோடிக்கு தொடர்பு இருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. இதற்கிடையில் 2010ம் ஆண்டு திடீரென இங்கிலாந்து தலைநகர் லண்டனுக்கு லலித் மோடி தப்பி சென்றவர் இந்தியாவிற்கு திரும்ப மறுத்து விட்டார். அதுமட்டுமல்ல, நிதி மோசடி, சூதாட்டம், தில்லுமுல்லு உள்ளிட்ட 16 வழக்குகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருக்கிற லலித் மோடி ரூ.1700 கோடி நிதி மோசடி செய்திருக்கிறார். அதனால், தேடப்படும் குற்றவாளி என மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு அறிவித்து அவரது பாஸ்போர்ட்டையும் தடை செய்தது.



இந்தியாவில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்த பிறகு, தன் மனைவிக்கு உடல் நிலை சரியில்லை என்று போர்ச்சுக்கல் நாட்டுக்கு செல்ல விசா கோரி இங்கிலாந்து அரசிடம் முறையிட்டிருந்தார் லலித் மோடி. இந்நிலையில் ஒரு தேடப்படும் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட ஒருவருக்கு விசா வழங்கக் கோரி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இங்கிலாந்து அரசுக்கு நெருக்கடி தந்தார் என்பது வெளிவந்தது.

சுஷ்மாவுக்கும், குற்றவாளி லலித் மோடிக்கும் உள்ள நெருக்கம் தொடக்க காலத்திலிருந்தே மிக அதிகம். அதை லலித் மோடியே சொல்கிறார், "சுஷ்மா என் குடும்ப நண்பர். அதை தாண்டி சட்டரீதியான (தொழில் ரீதியான) உறவும் எங்களுக்குள் இருக்கிறது. சுஷ்மாவின் கணவர் ஷ்வராஜ் 22 ஆண்டுகளாக எனக்கு சட்ட ஆலோசனை வழங்கி வருகிறார். சுஷ்மாவின் மகள் கடந்த 4 ஆண்டுகளாக எனது வழக்குரைஞராக இருந்து வருகிறார்.

தனது உறவினர் பையனுக்கு பிரிட்டனின் சஸ்ஸெக்ஸில்உள்ள கல்லூரியில் இடம் வாங்கித் தருமாறு லலித் மோடியிடம் கேட்டிருக்கிறார் சுஷ்மாவின் கணவர் ஸ்வராஜ் கோசல். அதே போல் குற்றம் சாட்டப்பட்டு 2010ம்ஆண்டு காங்கிரஸ் அரசு பாஸ்போர்ட்டை முடக்கிய போது, அது செல்லாது என்று நீதிமன்றத்தில் லலித் மோடிக்காக வாதாடியவர் சுஷ்மாவின் மகள் பன்சூரி.

ஒரு வெளியுறவுத் துறை அமைச்சரின் குடும்பமே ஒரு தேடப்படும் குற்றவாளிக்காக, அவரை காப்பாற்றுவதற்காக வேலை செய்திருக்கிறது. இந்த நிலையில் மோடியின் அரசு ஊழலுக்கு எதிரானது என்ற பிரச்சாரம் எவ்வளவு வேடிக்கையானது.

அதுமட்டுமல்லாமல் லலித் மோடி விசா கேட்டுக் கொண்டிருந்த அதே நேரம் சுவிஸ் வங்கியில் இந்தியர்கள் வைத்திருக்கும் பணத்தின் மதிப்பு 12615 கோடி என்று சுவிட்ஸர்லாந்து வங்கி அறிக்கை வெளியிட்டது. அதாவது முன்பு இருந்த பணத்திலிருந்து 10.6% பணம் குறைந்திருந்தது. அதாவது இந்தியாவிலிருந்து சுவிஸ் வங்கியில் போடப் பட்டிருந்த கருப்பு பணம் பாதுகாப்பாக வெளியில் எடுக்கப்பட்டிருக்கிறது. லலித் மோடியின் விசா, சுவிஸ் வங்கியில் பாதுகாப்பாக எடுக்கப்பட்டிருக்கும் பணம், லலித் மோடிக்கு விழுந்து விழுந்து உதவும் பாஜக மக்கள் புரிந்து கொள்ளட்டும்.(தி -இந்து15/06/15-19/06/15)

### அருண் ஜெட்லி - கிரிக்கெட் ஊழல்

டெல்லி மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் (DCCA) தலைவராக 13 வருடம் இருந்த அருண் ஜெட்லி, இந்த சங்கத்தின் மூலம் நிறைய ஊழல் நடத்தியுள்ளதாக ஆதாரங்களுடன் ஆம் ஆத்மி கட்சி குற்றம் சாட்டுகிறது. அணிகள் தேர்வு செய்யப்படுவதில் போலியான நிறுவனங்கள் மூலம் ஒழுங்கற்ற நிர்வாகம் நடந்திருப்பதாக சொல்லப்படுகிறது.

DCCAவின் உள் ஆய்வுக் குழுவும், டெல்லி அரசும் இணைந்து நடத்திய விசாரணையில், கிரிக்கெட் வாரியத்தில் பெரிய ஊழல் நடத்திருக்கிறது என்றும், அது ஜெட்லி தலைமையில் நேரடியாகவும், மறை முகமாகவும் நடத்த பட்டிருக்கிறது என கூறுகிறது.

பெரோஷ் ஷாஹ் ஸ்டேடியம் புனரமைக்க ரூ.24 கோடி தான் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், இறுதியில் ரூ.90 கோடிக்கான செலவு செய்யப் பட்டிருப்பதாக காட்டப்பட்டு இறுதியில் ஐந்து நிறுவனங்களுக்கு இந்த தொகை பிரித்து கொடுக்கப்பட்டது. ஆனால் இறுதியில், பணத்தை பெற்றுக் கொண்ட ஐந்து நிறுவனங்களும் ஒரே இயக்குனர்களின் கீழ் இயங்குவதும், ஐந்து நிறுவனங்களுமே ஒரே முகரியில் இயங்குவதாகவும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், வேலையே செய்யாத நிறுவனங்களுக்கு போலியாக ஆவணங்கள் உருவாக்கப்பட்டு பண பரிமாற்றம் நடந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

பாஜகவை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் கிரிக்கெட் வீரருமான கிர்தி ஆஜாத், DDCA நிதிகள் தவறாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று உள் ஆய்வு நிறுவனங்கள் விசாரணையில் தெரிய வந்தது. அதனால் இதன் மீதான விசாரனை முடுக்கி விடப்பட வேண்டும் என்றார்.

SFIO மற்றும் DCCA உடைய உள் ஆய்வுக் குழுவின் அறிக்கையும் அருண் ஜெட்லியையே குற்றவாளியாக மையப்படுத்துகிறது. ஆனால் அருண் ஜெட்லி மீதான் புகார் அவரது பதவி மூலமும், சார்ந்த கட்சி மூலமும் திசை திருப்பப்பட்டு இந்த ஆய்வு அறிக்கைகளையே கணக்கில் எடுத்துக் கொள்ளாத நிலை ஏற்பட்டது. (Rediff 17/12/15) (caravan 24/10/17)

### ரேஷன் அரிசியில் 36,000 கோடி ஊழல்

சத்திஸ்கர் மாநிலத்தில் ஆளும் பாஜக அரசு ரூ.36000 கோடிக்கு ஊழல் செய்திருப்பதாக காங்கிரஸ் கட்சி ஆதாரங்களுடன் குற்றம் சாட்டுகிறது. சத்திஸ்கரில் ஒரு கிலோ அரிசி ரூ.1 என்ற விலைக்கு அம்மாநில அரசு மானியமாக வழங்கி வருகிறது. இந்த மானிய விலை பொருட்கள் வழங்கும், பொது விநியோகத்துறையில் ஊழல் நடப்பது கண்டறியப்பட்டது. அதன் தொடர்ச்சியாக லஞ்ச ஒழிப்பு துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில்

ரூ.3.64 கோடியும், சட்டவிரோத ஆவணங்கள் பலவும் கைப்பற்றப்பட்டன.

ஆலை உரிமையாளர்கள், கடை உரிமையாளருக்கும் கமிஷன் போக, முதலமைச்சராக உள்ள ராமன் சிங் குடும்பத்திற்கு சொந்தமான பண்ணைகளுக்கு, பொது விநியோகத்துறையில் இருந்து அரிசி, எண்ணெய், கோதுமை உள்ளிட்ட பொருட்கள் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. அரிசி விநியோகத்தில் மட்டுமின்றி உப்பு, பருப்பு, மண்ணெண்ணை உள்ளிட்ட ஏழைகளுக்கு வழங்கப்படும் அனைத்து பொருட்களிலும் ஊழல் நடைபெற்றுள்ளது.

பாஜக மற்றும் ஆர்.எஸ்.எஸ்'சின் ஒவ்வொரு தலைமையகங்களுக்கும் அரசின் பொது நிதியிலிருந்து ரூ.16 கோடியை முதல்வர்.ராமன் சிங் கொடுத்துள்ளார். ஆனால், எதற்காக வழங்கப்பட்டது என்று முதல்வரும் சொல்லவில்லை. இரு அமைப்புகளும் சொல்லவில்லை.

இந்த ஊழலில் பாஜக முதல்வர் ராமன்சிங், அவரது மனைவி, மைத்துனி, சமையல்காரர் என நான்கு பேர் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். ஊழல் தடுப்பு அமைப்பு நடத்திய சோதனையில் கிடைக்கப்பெற்ற முக்கிய ஆவணங்களான டைரி, பென்ட்ரைவ் போன்றவற்றில் முதல்வரின் பெயரும், அவரது மனைவி பெயரும் இடம்பெற்றிருக்கிறது. அதே போல் ஊழலில் கிடைத்த பணம் டெல்லி, நாக்பூர், லக்னோவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் ஊழல் தடுப்பு நிறுவனம் அறிக்கை தாக்கல் செய்திருக்கிறது. (hindustan Times 25/07/15) (தினமலர் 05/07/15) (விகடன் 05/07/15)

### நில ஊழல் - கர்நாடகா

தற்போதைய சட்ட ஒழுங்கு துறை அமைச்சர் சந்தான தேவகோடா, கர்நாடகாவின் முன்னாள் முதலமைச்சராக இருந்த போது 10 ஏக்கர் நிலத்தை சட்ட விரோதமான முறையில் தனியார் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் அளித்தார். ஏக்கருக்கு 3 கோடி பெருமானமுள்ள அந்த நிலத்தை ஏக்கருக்கு வெறும் 60 லட்சம் ரூபாய்க்கு ஒப்பந்தம் போட்டு கொடுத்தார். இது 2017ம் ஆண்டு வருமான வரித்துறையால் கண்டுபிடிக்கப்பட்டு ஒப்பந்தம் கைவிடப்பட்டது. (News minute 10/12/15)

### நில ஊழல் - கோவா

கோவாவின் முன்னாள் முதலமைச்சர் லஷ்மிகாந்த் பர்சேகரின் உதவியோடு அவரது சகோதரியின் கணவர் திலிப் மல்வங்கர் ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நிலத்தை திரும்ப பெறுவதற்காக இன்னொருவரிடம் இருந்து லஞ்சம் பெறப்பட்டது தெரிய வந்து லஞ்ச ஒழிப்பு துறையால் கைது செய்யப்பட்டார். (https://www.dnaindia.com)

### மஹாராஷ்டிரா தீ அணைப்புக் கருவி ஊழல்

மஹாராஷ்டிராவில் பாஜகவை சேர்ந்த, கல்வித்துறை அமைச்சராக இருந்த வினோத் தாவ்டே, தீ அணைப்பு கருவி வாங்குவதில் 191 கோடி ரூபாயை ஊழல் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார். டெண்டர் வழங்குவதில் முறைகேடு செய்து தனிப்பட்ட தான் விரும்பிய நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்ததில்இந்த ஊழல் வெளிவந்தது.

### சாலை போடுவதில் ஊழல் - கோவா

பாஜக ஆட்சியில் இருக்கும் போது, கோவாவின் மிராமர் - தோனா சாலை சீரமைப்பதாக கூறி, இருந்த சாலையையும் கெடுத்து மீதம் 28% வேலைகள் இருக்கும் போதே சாலை அமைக்கும் பணி கைவிடப்பட்டது.

கோவாவின் GSIDC என்ற கட்டுமான துறையின் கீழ் 72.59 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இதில் கால் பாகத்தை கூட செலவு செய்திருக்க மாட்டார்கள் என்கிறார்கள் அப்பகுதியினர்.

போடப்பட்ட சாலைகள் கூட மோசமான தரத்தில் போடப் பட்டிருக்கின்றன. ஏற்கனவே இருந்த சாலை கூட இரண்டு வழி கொண்ட சாலையாக அமைக்கப்பட்டிருந்தது. ஆனால், சீரமைப்பிற்கு பிறகு ஒரு வழிப்பாதை சாலை போல் அமைக்கப் பட்டிருக்கிறது. முன்பை விட தற்போது தான் விபத்துக்கான வாய்ப்பு அதிகம் இருப்பதாக கூறுகிறார்கள் அப்பகுதியினர். (https://www.heraldgoa.in)

### DMAT ஊழல்

வியாபம் ஊழலை விட மிகப்பெரிய ஊழல் இந்த DMAT ஊழல் என சிபிஐ உச்சநீதிமன்றத்தில் கூறியுள்ளது. பல் மருத்துவ படிப்புக்கான நுழைவுத்தேர்வில் வியாபம் ஊழலை விட பெரிய அளவிலான ஊழல் நடைபெற்றிருப்பதாக சிபிஐ கூறுகிறது.

பாஜக அரசுக்கு கீழாக இருந்த மத்திய பிரதேசத்தில், ஆயிரத்திற்கும் அதிகமான தகுதி குறைந்த மாணவர்கள் மேனேஜ்மென்ட் கோட்டாவில் சேர்க்கப்படுவதாக எழுந்த குற்றச் சாட்டை விசாரிக்க சிபிஐக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அதன் பெயரிலேயே சிபிஐ, பெரும் ஊழல் நடந்திருப்பதாகவும் ஆள் பற்றாக்குறை இருப்பதால் விசாரணையில் தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவித்தது.

மொத்தம் 15 பல் மருத்துவ தனியார் கல்லூரியும், 6

தனியார் மருத்துவ கல்லூரியும் மத்திய பிரதேசத்தில் இருக்கிறது. இதிலுள்ள 2800 இடங்களுக்கான DMAT நுழைவுத்தேர்வை APDMC என்ற அமைப்பு நடத்துகிறது. இந்த தேர்வு மூலமே சேர்க்கை நடைபெறுகிறது. 42% மாநில அரசு ஒதுக்கீடு, 43% மேனேஜ்மெண்ட் ஒதுக்கீடு, NRIகளுக்கு 15% ஒதுக்கீடு என்ற முறையில் சேர்க்கை நடைபெறுகிறது. ஆனால், இந்த 43% ஒதுக்கீடு, நுழைவுத்தேர்வில் எடுக்கும் மதிப்பெண் முறையில் சேர்க்கப்படுவதாக கூறுகிறார்கள்.

ஆனால், பணம் மூலம் வாங்கப்படும் சீட்டுகளில் சேர்க்கப்படும் மாணவர்கள் நுழைவுத் தேர்வில் கலந்து கொண்டு வெள்ளை தாளை அப்படியே வைத்து விடுவார்கள். தேர்வு முடிந்த பிறகு அந்த தாளில் விடைகளை எழுதி அவரை தேர்ச்சி பெறச் செய்து அவருக்கான இடம் உறுதி செய்யப்படுகிறது..

மத்திய பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சொஹனின் மனைவி சாதனா சிங்கின் சகோதரர் மகளுக்கும், மாநில அரசின் கீழ் உள்ள நான்கு அமைச்சர்களின் உறவினர்களுக்கும் இப்படி சேர்க்கை வழங்கப்பட்டிருப்பது கண்டறியப் பட்டிருக்கிறது.

DMAT தேர்வு மூலம் ரூ.8000 முதல் ரூ.10000 கோடி வரை ஊழல் நடந்திருக்கிறது என்கிறார்கள் சிபிஐ அதிகாரிகள். (TOI 13/08/15) (wire 14/07/15) (the hindu15/08/15) (TOI 31/10/17)

**தால் ஊழல் (குஜராத் மற்றும் மஹாராஷ்டிரா)**

பாஜக ஆட்சி செய்த குஜராத் மற்றும் மஹாராஷ்ட்ராவில் 2015-16 ம் ஆண்டில் மிகப்பெரும் பருப்பு நெருக்கடி ஏற்பட்டது. இது திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஊழல். ஆனால் இதை தவிர்க்க வேண்டிய மோடி அரசு கைக்கட்டி வேடிக்கை பார்த்தது. மக்களவைத் தேர்தலின் போது அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைப்பேன் என்று மோடி சொல்லியிருந்தார். ஆனால், 15 மாதங்கள், 1கிலோ, 70ரூபாய்க்கு விற்ற பருப்பு ரூ.200க்கு விற்கப்பட்டது.

இந்த விலையேற்றத்திற்கு காரணம், மத்திய அரசின் தவறான கொள்கைகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததும் தான். மேலும்இயற்கையாக உருவான விலை யேற்றம் அல்ல இது. வியாபாரிகளால் திட்ட மிட்டு விலையேற்றப்பட்டு விற்பனைக்கு வரும் வணிக ஊழல்இங்கு நடந்திருக்கிறது. கிட்டத் தட்ட இரண்டரை லட்சம் கோடி ஊழல் நடந்திருக்கிறது.

நமது நாட்டில் விளையும் பருப்பு 70% மட்டுமே நம் நாட்டிற்கு போதுமானதாக இருக்கிறது. மீதம் எல்லாம் இறக்குமதி செய்யப் படுவது தான். ஆனால் இந்த இறக்குமதிக்கு ஏற்பட்ட காலதாமதமே பருப்பு விலை உச்சத்திற்கு சென்றதற்கு காரணம். இந்த தாமதமும் தானாக ஏற்பட்டதில்லை திட்டமிட்டு ஏற்படுத்தப் பட்டது.

மியான்மர், ஆஃப்ரிக்க நாடுகளான கென்யா, டான்சானியா போன்ற நாடுகளில் இருந்து தான் அதிக இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனால் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் தனியார் நிறுவனங்கள் மூலம் வெளிநாட்டு துறைமுகங்களில் பதுக்கப்படுகிறது.

அங்கிருந்து தேவையான நேரத்தில் கப்பல் மூலமாக இறக்குமதி செய்யப்படும். இங்கு பருப்பு தட்டுப்பாடு ஏற்படும் போது அந்த தட்டுப்பாட்டின் வீரியத்தை வளர விடுகின்றன நிறுவனங்கள். பிறகு பருப்பின் விலை, உச்சத்தை அடையும் போது அதிக விலைக்கு பருப்பு உள்நாட்டில் வணிகர்களுக்கு விற்கப்படுகிறது. வணிகர்கள் இதனை மேலும் தங்களுக்கான லாபத்தை சேர்த்து நுகர்வோரான நமக்கு அளிக்கிறார்கள்.

2.50லட்சம் கோடி ஊழலுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம், நிர்வாகம் செய்ய தெரியாமல் வேடிக்கை பார்த்த மோடி அரசையே சாரும்.(தி இந்து 18/10/15) (Economic Times 30/07/16) (India Today23/11/15) (Buisness standard 29/07/16)

**சிக்கி ஊழல்**

பாஜக அட்சி செய்த மஹாராஸ்டிராவில் 206 கோடி ரூபாய் ஊழல்நடந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. பாஜக அமைச்சர் பங்கஜா முண்டே, சிக்கி ஒப்பந்தங்களை எந்தவொரு ஒப்பந்தக்காரர்களையும் டெண்டருக்கு அழைக்காமல் தானாகவே முடிவு செய்து ஒரே நாளில் 24 தீர்மானங்களையும் முடித்து வைத்து ஒப்பந்தம் வழங்கியிருக்கிறார்.

ஆனால் 3 லட்சத்திற்கும் அதிகமாக அரசு எந்த பொருள் வாங்க வேண்டும் என்றாலும் இணைய தளத்தில் டெண்டர் விடப்பட வேண்டும் என்பது விதி. ஆனால் இது ஏதும் பின்பற்றப் படாமல் ஊழல் செய்திருக்கிறது பாஜக அரசு. (24/06/15 news 18)

**ரஃபேல் ஊழல்**

இந்திய விமான படைக்கு போர் விமான பற்றாக்குறை இருப்பதால், 2007ம் ஆண்டே அன்று ஆட்சியிலிருந்த காங்கிரஸ் தலைமை யிலான அரசு, விமான தயாரிப்பு நிறுவனங்களுக்கு

டெண்டர் விட்டது. அதில், Lockheed Martin F16, Dassaults Rafale, Boeings F/A18s, Russia MIG-35, sweden saab's Gripen, Eurofighter Typhoon போன்ற பல நிறுவனங்கள் கலந்து கொண்டன. இறுதியில் டசால்ட் ரஃபேல் (Dassault Rafale) நிறுவனம் தான், ரஃபேல் போர் விமானத்தை தயார் செய்யும் பொறுப்பை பெற்றது.

பல கட்ட பேச்சுவார்த்தைக்கு பிறகு, 2012ல் 54000 கோடிக்கு குறைவாக 126 ரஃபேல் போர் விமானங்களை தயாரித்து தருவதாகவும், அதில் 18 பிரான்சில் உள்ள தங்கள் நிறுவனத்திலிருந்து பறக்கும் நிலையிலும், மீதி 108 விமானங்களை HAL(Hindustan Aeuronotics Limited) என்ற இந்தியாவின் பொதுத்துறை நிறுவனத்திற்கு தனது தொழில்நுட்பத்தை பரிமாற்றம் செய்து இந்தியாவிலேயே தயாரித்து தருவதாகவும் டசால்ட் நிறுவனம் ஒப்புக்கொண்டது. பிறகு 2014ம் ஆண்டு மார்ச்13 அன்று, இந்த ஒப்பந்தம் அதிகாரப்பூர்வமாக கையெழுத்தானது.

2014ம் ஆண்டு நிகழ்ந்த ஆட்சி மாற்றத்திற்கு பிறகு பிரதமர் மோடி 2015ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டிற்கு பயணம் மேற்கொள்கிறார். அப்போது முன்னால் போடப்பட்டிருந்த ஒப்பந்ததை ரத்து செய்து இராணுவ விமானம் சம்பந்தமாக புதிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகிறது. அதில் 36 ரஃபேல் போர் விமானங்களும் பிரான்சிலேயே தயாரித்து தரப்படுவதாக முடிவு செய்யப்பட்டது.

பிறகு இந்த அறிவிப்பை வெளியிட்ட, அப்போது இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த மனோகர் பாரிக்கர், இந்தியாவிற்கு அதிக போர் விமானத்திற்கான தேவை இல்லை, மேலும் முன்னாள் சொல்லப்பட்ட ஒப்பந்தத்திற்கான நிதி ஒதுக்கீடு அளவும் அதிகமாக உள்ளதாகவும், அதனாலேயே ஒப்பந்தம் மாற்றப் பட்டிருப்பதாகவும் கூறினார். ஆனால், பாதுகாப்புத் துறையில் சிறப்பு அனுபவம் வாய்ந்த சுக்லா, சொல்லும் போது, இந்தியாவிற்கு 200க்கும் அதிகமான போர் விமானங்களின் தேவையிருக்கும் நிலையில் இப்படியொரு முடிவு எடுப்பது அவசிய மற்றது என்கிறார்.

ஜூலை 2015ல், காங்கிரஸ் ஆட்சிகாலத்தில் போடப்பட்ட ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு செப்28,2016ம் ஆண்டு பிரான்சின் டசால்ட் நிறுவனத்துடன் இணைந்து, அனில் அம்பானியின் ரிலையன்ஸ் பாதுகாப்பு தனியார் நிறுவனம் 36 ரஃபேல் போர் விமானங்களை 58,000 கோடி செலவில் தயார் செய்ய வேண்டும் என்று மோடி அரசால் ஒப்பந்தம் போடப்பட்டது. 2017 பிப்.16ல் அதிகாரப்பூர்வமாக உறுதியும் செய்யப் பட்டது.

ஆனால் போடப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள முரண்பாடுகள், பலத்த சந்தேகத்தை உருவாக்கு வதுடன், நாட்டின் பாதுகாப்பு துறையில் பெரிய ஊழல் நடந்திருப்பதையும் வெளிச்சமிட்டு காட்டுகிறது. (The wire 17/11/18)

**முரண்களின் பட்டியல்**

➤ காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் போடப்பட்ட ஒப்பந்தத்தில், 126 ரஃபேல் விமானங்கள் 54000 கோடிக்கு குறைவாக தயார் செய்து தர வேண்டும் என்று இருந்தது. ஆனால் மோடி அரசால் போடப் பட்ட ஒப்பந்தம், வெறும் 36 விமானங்களுக்கு 58000 கோடி என நிர்ணயிக்கிறது. ஆட்சி மாற்றம் நிகழ்ந்த நான்கு ஆண்டுகளுக்குள் எதற்காக இந்த இமாலய வித்தியாசத்தில் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும்? (The wire 17/11/18)

➤ எண்ணிக்கை 36 ஆக குறைந்ததற்கு இந்தியாவிற்கு பெரிய எண்ணிக்கையில் போர் விமானம் அவசியம் இல்லை என்றும், பொருளாதார ஒதுக்கீடு போதாது என்றும் அப்போதைய பாதுகாப்பு துறை அமைச்சராக இருந்த மனோகர் பாரிக்கர் கூறினார். ஆனால் 126 போர் விமானங்களுக்கு 54000 கோடி, நாட்டின் நிதி நிலை பிரச்சனை என்றால், 36 விமானங்களுக்கு 58,000 கோடி ஒதுக்கீடு எப்படி சரியாகும்?.(The wire 17/11/18)

➤ காங்கிரஸ் ஆட்சிகாலத்தில் போடப்பட்ட ஒப்பந்தத்தில் 126 விமானங்களில் 18 மட்டும் பிரான்சிலும் மீதி 108 விமானங்கள் இந்தியாவின் பொதுத்துறை நிறுவனமான பிகிலி உடன் இணைந்து தொழில்நுட்ப பரிமாற்றத்துடன் செய்து தரப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், மோடி அரசால் போடப்பட்ட ஒப்பந்தம் 36 விமானங்களும் பிரான்சில் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் கட்டாயம் இல்லை என்றும் சொல்கிறது.பாஜக தன் விளம்பரங்களில் எல்லாம் "மேக் இன் இந்தியா" என்று ஒவ்வொரு முறையும் சொல்கிறது. ஆனால் இந்தியாவின் பாதுகாப்பு துறைக்கு கிடைக்க இருந்த பெரும் தொழில்நுட்ப வளர்ச்சியை கிடைக்க விடாமல்



செய்தது ஏன்? (The wire 17/11/18)

➢ இந்தியாவின் பொதுத்துறை நிறுவனமாக உள்ள HAL நிறுவனத்திற்கு SU-30MKI,Tejas போன்ற விமானங்களை தயாரித்திருக்கிற அனுபவம் இருக்கிறது. ஆனால் எவ்வித அனுபவம் சிறிதும் இல்லாத அம்பானியின் RDL நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருப்பது ஏன்?. மோடியின் இம்முடிவு பாதுகாப்பு துறையின் கொள்கை விதிகளுக்கே எதிரானது என்கிறார் பாதுகாப்பு துறை நிபுணர் அஜாய் சுக்லா. (National Herald 18/02/18)

➢ முன்னாள் இராணுவ அதிகாரியாக இருந்து ஐ.ஏ.எஸ் அதிகாரியாக மாறிய M.G தேவ சகாயம், பிரதம அமைச்சர் இந்த நாட்டினுடைய மக்களின் பணத்தை செலவு செய்வதில் பொறுப்புணர்வோடு இருக்க வேண்டும். இதில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும். இதற்கு பதிலளிக்க வேண்டிய தற்போதைய பாதுகாப்புத்துறை அமைச்சரின் (நிர்மலா சீதாராமன்) போக்குகளை பார்க்கும் போது, இந்த ஒப்பந்தம் அவருக்கு விளையாட்டாக தெரிகிறது. இது பாதுகாப்பு சம்பந்தமான ஒப்பந்தம். ஆயிரக்கணக்கான கோடி சம்பந்தப்பட்டது. பாதுகாப்பு கொள்கை விதிகளின் படி, குறிப்பிட்ட அனுபவம் இருக்கும் நிறுவனங்களுக்கே இணைந்து தயாரிக்கும் உரிமையை கொடுக்க வேண்டும். ஆனால் அம்பானியின் RDL நிறுவனத்திற்கு இதில் ABCD கூட தெரியாது.

➢ L&T நிறுவனம் 40 வருட அனுபவம் கொண்டது. டாடா 30வருட அனுபவம் கொண்டது. ஆனால், எந்த அனுபவமும் இல்லாத நிறுவனத்திற்கு ஒதுக்கியிருப்பது திட்டவட்டமாக மிகப்பெரிய ஊழல் என்கிறார். (National Herald 18/02/18)

➢ அனில் அம்பானியும், பிரதமர் மோடியும் நண்பர்களாக இருக்கலாம். ஆனால் அதற்காக, இந்தியாவின் பாதுகாப்பு துறை சம்பந்தமான ஒப்பந்தத்தை முடிவு செய்ய அவரை உடன் அழைத்து சென்று அந்த ஒப்பந்தத்தையும் அவருக்கே வழங்குவது மிகப்பெரிய ஊழல். ரஃபேல் ஒப்பந்தம் பெற்று தந்த அதே வருடத்திலேயே அம்பானியை ரஷ்யாவிற்கும் உடன் அழைத்து சென்று ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார். இந்தியாவின் பாதுகாப்பிற்காக வேலை செய்ய வேண்டிய பிரதமர் மோடி, தொழிலதிபர் அனில் அம்பானிக்காக பறந்து பறந்து வேலை செய்வது ஏன்?. (National Herald 18/02/18)

➢ ரஃபேல் ஊழலில் பிரதமர் மோடிக்கு நேரடியாக பங்கு இருப்பதை சில புலனாய்வு நிறுவனங்கள் கூறியதால் அதன் பேரில் விசாரணை தொடங்கவிருந்த காரணத்திற்காகவே சிபிஐ இயக்குனர் அசோக் வர்மா அவர்களை, வேக வேகமாக அப்பதவியிலிருந்து நீக்கம் செய்தது என்று பிரபல மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூசன் சொல்கிறார். (Financial Express 25/11/18)

➢ ஒப்பந்தம் போடப்பட்ட போது பிரான்ஸ் அதிபராக இருந்த பிரான்கொயிஸ் ஹாலண்டே, இந்த ஒப்பந்தத்தை அம்பானி நிறுவனத்திற்கு கொடுக்கும்படி மோடி கேட்டுக்கொண்டார் எனவும். மற்ற நிறுவனங்களை கணக்கில் எடுத்து கொள்ளவே இல்லை என்றும், பத்திரிக்கைகளுக்கு சொல்லியிருக்கிறார். (rediff - 04/01/19)

இந்த ரஃபேல் விமான ஒப்பந்தத்தில் 40,000 கோடி ரூபாய்க்கு மேல் ஊழல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஊழலை மோடி நேரடியாகவே முன்னின்று நடத்தியிருக்கிறார்.

**அமித்ஷா மகன் ஜெய்ஷா விஸ்வரூப வளர்ச்சி**

மோடி தனது நாடாளுமன்ற தேர்தல் பிரச்சார மேடைகளில் நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் 15 லட்சம் பணமும், விவசாயிகளின் வருமானம் இருமடங்காக்கப்படும், பல கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று சொன்னார்.

சொன்னவற்றில் ஒன்றை கூட காப்பாற்ற முடியவில்லை என்றாலும் இருந்த சிறுதொழில்களை நாசமாக்கி, விவசாயிகளின் தற்கொலைகளை எப்போதும் இல்லாத அளவு அதிகாக்கி, இருந்த வேலைவாய்ப்பை எல்லாம் திட்டங்கள் என்ற பெயரில் அழித்து விட்டு சாமானியனின் வாழ்வாதாரத்தையே அழித்தவர், தனியார் பெரும் தொழிலதிபர்களுக்கு மட்டும் பெரும் சேவையாற்றியிருக்கிறார். இந்த வரிசையில் பாஜகவின் தேசியத் தலைவர் அமித்ஷாவின் மகன் ஜெய்ஷாவின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கது.

2014-2015ல் வருடத்திற்கு வெறும் 50,000 லாபம் பெற்ற ஜெய்ஷாவின் நிறுவனம், மோடி ஆட்சி பொறுப்பேற்று ஒரு வருடத்திற்கு பிறகு ஜெய்ஷாவின் நிறுவனம் 2015-16ம் ஆண்டில் 80 கோடிக்கு மேல் லாபம் பெறும் நிறுவனமாக வளர்ந்து நின்றது. 50,000 ரூபாயிலிருந்து 80,00,00,000 ரூபாய் லாபமாக ஒரு வருடத்தில் மாய வளர்ச்சியை பெற்றிருக்கிறது. 16 லட்ச சதவீதம் முன்னேற்றம் ஒரு வருடத்தில்.

தனது ஆட்சி முடிவதற்குள் விவசாயிகளின் வருமானத்தை இருமடங்கு ஆக்கப்படும் என்றார் மோடி. ஆனால் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு சாவும் அவலம் அதிகமாகி இருக்கிறது.



அதுவே தொழிபதிபர்களுக்கு அதுவும் அமித் ஷாவின் குடும்பத்துக்கு வருமானத்தை 16,000 மடங்கு அதிகமாக்கிக் கொடுத்திருக்கிறார். (The wire 08/10/17)

### 450 கோடி போக்குவரத்து ஊழல்

மத்திய உள்துறை அமைச்சராக இருந்த கிரண் ரிஜ்ஜுவின் உறவினர் 450 கோடி மதிப்பிலான ஊழலில் ஈடுபட்டதாகவும் அதற்கு கிரண் ரிஜ்ஜு உதவி செய்ததாகவும் லஞ்ச ஒழிப்பு துறை அதிகாரி சதிஸ் வர்மா 129 பக்க அறிக்கையை விசாரித்து தாக்கல் செய்திருக்கிறார்.

600 மெகாவாட் ஹைட்ரோ மின் திட்டம் கொண்ட இரண்டு அணைகளை கட்டுவதில் 450 கோடிக்கு மேல் ஊழல் நடந்திருக்கிறது.

ஒப்பந்த தாரர்களால் கொடுக்கப்பட்ட பல ஆவணங்கள் போலியானதாக இருந்தது. அணை கட்டுவதற்கு தேவையான கற்களை ஏற்றிச் சென்ற வாகன போக்குவரத்தில் போலி படிவங்களே சமர்பிக்கப்பட்ட்டிருந்தன. இதற்கு பின்னனியில் இருப்பது, ரிஜ்ஜுவின் உறவினர் நடத்தும் Patel Engineering Limited (PEL) என்றநிறுவனம் என்று அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார் வர்மா.

மேற்கொண்டு விசாரணை நடக்கவிருந்த நிலையில் உண்மையை வெளிக்கொண்டு வந்த காரணத்திற்காக, வேறு காரணம் கூறி அதிகாரி, வர்மா திரிபுராவில் இருக்கும் CRPFற்கு உடனடியாக பணிமாற்றப்பட்டார். (The wire 13/12/16)

### 2016 - MIDC ஊழல் - மகாராஸ்டிரா

முன்னாள் பாஜக மந்திரி எக்நாத் காட்சே, தனது மனைவி பெயரிலும் மருமகன் பெயரிலும் மஹாராஷ்டிராவின் போஷாரி பகுதியில் சட்ட விரோதமான முறையில் நிலத்தை வாங்கியிருக்கிறார். அதுவும் இந்நிலம் மஹாராஷ்டிரா தொழில்துறை மேம்பாட்டு நிறுவனத்துக்கு சொந்தமானது. அன்றைய மார்கெட் விலை ரூ.40 கோடி என்று இருக்கும் போது வெறும் ரூ3.75 கோடிக்கு இந்த நிலத்தை சட்டவிரோதமாக வாங்கியிருக்கிறார். இதனை லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் அறிக்கையாக பதிவு செய்திருக்கிறார்கள். (Indian Express 15/05/18)

### பணமதிப்பிழப்பு

நள்ளிரவில் மக்களை பிச்சைக்காரர்களாக மாற்றிய திட்டம். நாட்டின் பிரபலங்களெல்லாம் புரட்சி, மாற்றம், முன்னேற்றம் என்று சமூக வலைத்தளங்களில் மோடியின் பணமதிப்பிழப்பு நடவடிக்கையை கொண்டாடிக் கொண்டு இருந்த நேரம் இந்தியாவின் சாமான்ய மக்களான நாம் ஏடிஎம் வாசல்களில் நாள்கணக்காக நாம் அன்றாடம் சேமித்து வைத்த பணத்தை எடுக்க முடியாமல் அல்லோலப் பட்டோம். இதுவெல்லாம் இந்தியாவின் வளர்ச்சிக்கு தான் என்று ஏசி ரூம்களில் உட்கார்ந்து கொண்டு நாளுக்கு ஒருவர் ரேடியோக்களிலும், டிவிகளிலும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பொருளாதார அறிஞர்கள் எல்லாம் முட்டாள் தனமான நடவடிக்கை என்று கத்திக் கொண்டிருந்த பொது நடிகர்கள் மாபெரும் புரட்சி என்றார்கள். மக்கள் உணவுக்கு வழி இல்லாமல் செத்துக் கொண்டிருந்தனர். இழந்தது எக்கச்சக்கமாக இருப்பினும் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு தானே இந்த இழப்பெல்லாம் என்று நினைத்த சாமானியனையும் ஏமாற்றினார் மோடி.

100 க்கும் மேற்பட்ட மரணங்கள், 15 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் வேலை பறிபோனது. 150 மில்லியன் மக்களுக்கு மேல் பல வார ஊதியம் இல்லாமல் போனது. இது மட்டும் அல்லாமல் இந்தியா பல முன்னேற்றங்களை இழந்து நின்றதற்கு மோடி என்ற ஒற்றை நபரின் சர்வாதிகார போக்கு தான் காரணம்.

நவம்பர் 2016 திடீரென நள்ளிரவு முதல் ரூ.500 மற்றும் ரூ.1000 நோட்டுக்கள் செல்லாது என்று அறிவிப்பு வெளியான நாளிலிருந்து இன்று வரை இந்தியா அதனால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மீள முடியவில்லை.

ரிசர்வ் வங்கிக்கு 99.3% நோட்டுகள் திரும்ப வந்து விட்டது, ஆனால் நாட்டின் கருப்பு பணம் ஒழிந்து விடும் என்ற மோடியின் வாக்கு பொய்யாகிப் போனது. கருப்பு பணம் என்பது நோட்டுகளாக மறைத்து வைக்கப்படவில்லை. தங்கமாக, நிலமாக, அயல் நாடுகளில் சேமிப்பாக வைக்கப்பட்டிருக்கிறது என பொருளாதார மேதைகள் சொல்கிறார்கள். பொருளாதாரம் படிக்க வேண்டும் என்பதில்லை டீ விற்கும் சாமானியருக்கும் கூட இது தெரிந்திருக்கும்.

இருந்தும் இது பிரதமருக்கு தெரியவில்லை.

மோடியின் தவறால் ஏற்பட்ட பாதிப்புக்கும் கூட அவர் பொறுப்பேற்பதில்லை. மீண்டும் மீண்டும் மேடைகளில் தான் செய்தது சாதனை என்று பொய் பேசி புள்ளி விவரங்களுக்கு மாறாக பேசி வருகிறார். இந்தியா இதுவரை இப்படி பொய் மட்டுமே பேசும் பிரதமரை பார்த்ததே இல்லை. மோடி செய்தது தவறு என பொறுப்பேற்றுக் கொண்டாலாவது, அவரால் பலியான 100க்கு மேற்பட்ட இந்திய குடிமக்களின் உயிருக்கு வருந்துகிறார் என கூறலாம். ஆனால் மோடியின் பொய்கள் இது அநியாயமாக ஏற்படுத்தப்பட்ட பலி இல்லை. திட்டமிட்டு உருவாக்கப்பட்ட கொலை என்பதை போல் காட்டுகிறது. (The Guardian 31/08/18)

பணமதிப்பிழப்பு நடவடிக்கை பெரும் ஏமாற்று நடவடிக்கை. இதன் மூலம் பாஜக பெரும் ஊழலை நிகழ்த்தியுள்ளது. பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு முன்பே பாஜகவினர் தங்கள் பணத்தை பாதுகாப்பாக வங்கிகளிலோ அல்லது நிலங்களை வாங்குவதில் பத்திரப்படுத்தி விட்டனர்.

பீகார் சட்டமன்றத்தின் உறுப்பினர், சஞ்சீவ் சௌராசியா சொல்கிறார், 'பீகாரில் மட்டும் அல்ல பீகார் உட்பட இந்தியாவின் எல்லா பகுதிகளிலும் நிலம் வாங்கப்பட்டது. அதற்கான பணம் கட்சியிலிருந்து எங்களுக்கு தரப்பட்டது. இந்த நிலங்கள் அனைத்தும் கட்சி பணிகளுக்காக வாங்கப்பட்டது. இந்த நிலங்கள் அனைத்தும் நவம்பர் மாத தொடக்கத்தில் வாங்கப்பட்டது என்கிறார். (www.catchnews.com)

16 ஆயிரம் கோடி பணம் தவிர எல்லாம் ரிசர்வ் வங்கிக்கு வந்து சேர்ந்து விட்டது. இந்த எண்ணிக்கையில் பாதிக்கும் அதிகமாக ஏழை மக்கள் மாற்றமுடியாமல் போன, கிழிந்து போன தொலைந்து போன பணமாக இருக்கலாம். ஆனால், இதனையே கருப்பு பணம் என சொல்கிறது பாஜக, அப்படியே 16 ஆயிரம் கோடி பணத்தை செல்லாமல் போக செய்வதற்காக 21 ஆயிரம் கோடி செலவில் புதிய நோட்டுகள் அச்சிடப்பட்டன. எவ்வளவு ஏமாற்றுத்தனம்? இதற்காக நாட்டின் பொருளாதாரம், 15 லட்சத்திற்கும் அதிகமான வேலை, 100 மக்களுக்கு மேற்பட்ட உயிர் என அனைத்தும் பறிபோனது. (https:www.newsclick.in)

அசையாத சொத்துக்களின் எண்ணிக்கை முந்தைய காங்கிரஸ் ஆட்சிக்கு கீழ் 2.5 லட்சம் கோடியாக இருந்தது. ஆனால் இன்று மோடி அரசின் கீழ் 12.5 லட்சம் கோடியாக மாறியிருக்கிறது. இது சாமானிய மக்களின் வளர்ச்சி அல்ல கார்ப்பரேட் தொழிலதிபர்களுக்கான வளர்ச்சி. மோடி சாமானியருகான பிரதமர் அல்ல. அவர் கார்ப்பரேட் முதலாளிகளின் பிரதமர். (Economic Times 21/08/18)

### கூட்டுறவு வங்கியின் மூலம் ஊழல்

பணமதிப்பிழப்பு நடவடிக்கை, முட்டாள் தனமான ஒன்று என்றாலும், இந்த திட்டத்திற்கு பின்னால் பாஜக நிகழ்த்திய ஊழலும் மிகப் பெரியது.

நிர்வாகஸ்தர்களில் ஒருவராக, பாஜக தேசிய தலைவர். அமித்ஷா உள்ள அஹ்மதாபாத் மாவட்ட கூட்டுறவு வங்கி தான், அனைத்து கூட்டுறவு வங்கிகளை விட அதிகமான பணத்தை மாற்றியிருக்கிறது. ரூ.745.59 கோடி ரூபாய், பணம் பணமதிப்பிழப்பு நடவடிக்கை எடுக்கப்பட்ட ஐந்து நாட்களுக்குள் இந்த வங்கியில் மட்டும் போடப்பட்டிருக்கிறது.

பாஜக கண்காணிப்பின் கீழ் குஜராத் மாநிலத்தில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் மட்டும் ரூ.3118.51 கோடி ரூபாய் சேமிக்கப்பட்டு இருக்கிறது. பாஜக ஆளும் மாநிலங்களுக்கு கீழ் உள்ள கூட்டுறவு வங்கிகளில் மட்டும் ரூ.14293.71



கோடி ரூபாய் பணபரிமாற்றம் நடந்திருக்கிறது. பணமதிப்பிழப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு ஐந்து நாட்களுக்கு பிறகு கூட்டுறவு வங்கிகளில் பழைய பணத்தை மாற்ற தடை விதிக்கப்பட்டது. ஆனால் அதற்குள்ளாகவே பெரும் தொகை மாற்றப்பட்டு விட்டது.

பணமதிப்பிழப்பு நடவடிக்கை நாட்டின் பொருளாதாரத்தை பெருமளவு சரிய செய்த நடவடிக்கையாக இருந்தாலும், பாஜகவில் பலருக்கு அது கருப்பு பணத்தை வெள்ளையாக மாற்றிக் கொள்ளும் திட்டமாக அமைந்திருக்கிறது. (The wire 22/06/18) (India Today 22/06/18)

### விளம்பர மோசடி ஊழல்

பாஜக இந்திய மக்களின் வரியிலிருந்து ரூ.14 கோடி ரூபாயை போலி செய்திகளை பரப்புவதற்காக மட்டும் பல வலைத்தளங்களை உருவாக்கியுள்ளது. இதுவரை 234 வலைத்தளங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன.

மக்களின் வரிப்பணத்தை இப்படி வீணாக்குவது மட்டுமல்லாமல். தங்களது இந்துத்துவ கொள்கையை பரப்புவதற்கும், மக்களுக்குள் வெறுப்பை விதைக்கும் வேலையையும் செய்து வருகிறார்கள். (https:www.google.co.in/amp/s/m.patrika.com/amp-news/bhopal-news/advertisement-scam->1292513/)

மல்லையா 9000 கோடியுடன் மோடி அரசால் விமானத்தில் வழியனுப்பி வைக்கப்பட்டார்.

பிஜேபி ஆட்சி கட்டிலில் ஏறிய காலத்திலிருந்து சிலரை காப்பாற்றி வருகிறது. காப்பாற்றப் பட்டவர்கள் ஏழைகளோ, நிரபராதிகளோ, சாமானியர்களோ அல்ல. மத்திய அரசின் அதிகாரிகளால் தேடப்படும் குற்றவாளிகளின் பட்டியலில் இருக்கும் சில கோடிஷ்வரர்கள் தாம் அவர்கள்.

விஜய் மல்லையாவின் கதை, இவர் நம் நாட்டு வங்கிகளிடமிருந்து 9000 கோடி ரூபாய் கடன் பெற்றிருந்தார். இன்று கடனை அடைக்காமல் வெளிநாட்டுக்கு தப்பி ஓடி விட்டார். இப்பணம் நம் நாட்டின் சாமான்யர்கள் தங்கள் தேவைகளை சுருக்கி சேமித்த பணமிது. ஊதாரிகளுக்காக சேமித்த சேமிப்பில்லை!



வங்கியிடம் இருந்து 9000 கோடி கடன் பெற்ற குற்றச்சாட்டுக்காக கடந்த ஆண்டு(2015) டிசம்பர் மாதமே சிபிஐ அதிகாரிகளின் கண்காணிப்பில் விஜய் மல்லையா கொண்டு வரப்பட்டார். ஆனால் மார்ச் 02,2016 அன்று லண்டனுக்கு சகல ஏற்பாடுகளுடன் ஏழு பெரிய சூட்கேஸ்களுடன் தப்பி ஓடினார்.(ஆதாரம்- தி இந்து டிசம்பர் 11,2015 மதுரை), (The Times Of India Mar,11,2016 Madurai).

இடைப்பட்ட காலத்தில் பிஜேபி அரசு மல்லையாவின் பாஸ்போர்ட்டை முடக்காமல் வெளிநாடு தப்பி செல்லும் வரை அமைதி காத்தது. இப்பிரச்சனையை எதிர்க்கட்சிகள் பாராளு மன்றத்தில் எழுப்பிய போது, டெல்லி கிரிக்கெட் வாரியம் ஊழல் மன்னன் மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி "நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மட்டுமே ஒருவருடைய பாஸ்போர்ட்டை முடக்க முடியும். இல்லா விட்டால், ஒருவர் வெளிநாடு செல்வதை யாராலும் தடுக்க முடியாது" என்று தனது பாஜக அரசின் கையாலாகாத்தனத்தை வெளிப் படுத்தினார். ஆனால் 2010ம் ஆண்டு லலித் மோடியின் பாஸ்போர்ட்டை காங்கிரஸ் தலைமையிலான அரசு முடக்கியது குறிப்பிடத்தக்கது. (தி இந்து மார்ச்,11,2016 மதுரை)

மேலும், அக்டோபர் 2015 அன்றே சிபிஐ அதிகாரிகளால் விஜய் மல்லையா வெளிநாடு செல்வதை தடுப்பதற்காக ஒரு சுற்றறிக்கை எல்லா விமான நிலையங்களுக்கும் அனுப்பப் பட்டிருக்கிறது. இந்த சுற்றறிக்கையையும் கண்டுகொள்ளாமல் மல்லையா 9000 கோடி சொத்துடன் தப்ப வைக்கப்பட்டிருக்கிறார். (ஆதாரம் - Times Of India 11,Mar,2016 Madurai)

ஒரு குற்றவாளி சிபிஐ விசாரணை வலைக்குள் இருந்தாலும் வெளிநாடு எளிதாக தப்பி செல்லலாம் எனும் நிலை பாஜகவால் மட்டுமே உருவாக்க முடியும்.

உள்நாட்டில் உள்ள வராக்கடனையே வசூலிக்க முடியாதவர்கள் வெளிநாட்டில் இருக்கும் கருப்பு பணத்தை மீட்டு வருவார்களாம்! யார் காதில் பூ சுற்றுகிறார்கள்?

9000கோடி கடன் வாங்கி மோசடி செய்தவரை வெளிநாட்டுக்கு தப்ப விட்டு விட்டு ஏழை விவசாயிகளை அவர்கள் வாங்கிய கடனுக்காக

அடித்து உதைத்து துன்புறுத்துகிறார்கள்.

### பிட்காயின் ஊழல்

பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு பிறகு பிட்காயின் மூலம் கருப்பு பணத்தை வெள்ளையாக மாற்றும் முயற்சி நடைபெற்றது. இந்த ஊழலில் பாஜகவை சார்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அனிஷ் பாட்டியா இருப்பது குஜராத் CID காவல்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டது.

5000கோடிக்கும் மேலாக இதில் ஊழல் நடந்துள்ளதாக காவல்துறையினர் கூறுகிறார்கள்.

### சத்திஸ்கர் E-டெண்டர் ஊழல்

சத்திஸ்கர் மாநிலத்தில் ராமன் சிங்(பாஜக) தலைமையிலான அரசின் கீழ் ஏப்ரல் 2016- மார்ச் 2017 வரை மட்டும், 74 கம்ப்யூட்டர்களை உபயோகித்து அரசின் 17 துறைகளுக்கு 1971 டெண்டர்களுக்கான 477 மனுக்கள் அனுப்ப பட்டிருக்கின்றன.

இந்த புள்ளி விவரம் டெண்டர் எடுக்கும் முதலாளிகளுக்கும் அரசின் கீழ் இயங்கும் அதிகாரிகளுக்கும் டெண்டர் கொடுக்கும் முன்பிருந்தே தொடர்பு இருப்பதை உறுதி செய்கிறது. அதனால் இதில் பெரும் ஊழல் நடந்திருப்பதாகவும், பல டெண்டருக்கு வழங்கப்பட்ட மனுக்கள் ஒரே email IDலிருந்து பெறப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வருமான வரி துறை விதிகளை அரசு மீறியிருக்கிறது. அத்தோடு 15.44 கோடிக்கான ஐந்து டெண்டர்கள் தகுதியில்லாத ஒப்பந்த தாரர்களுக்கு வழங்கியிருக்கிறது என்று CAG (Comptroller and Auditor General) அறிக்கை வெளியிட்டிருக்கிறது. (The Indian Express 11/01/2019)

### குஜராத் முதலமைச்சர் ஆனந்தி பென் குடும்ப ஊழல்

குஜராத்தின் முதலமைச்சர் ஆனந்தி பட்டேல்(பாஜக) அரசின் கீழ் ஒரு சந்திப்பு கூட்டத்தில் இரு நிறுவங்களுக்கான நில ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

அதில், குஜராத் முதலமைச்சரின் மகள் அனர் பட்டேல் உடைய நிறுவனத்திற்கு 422 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. அதே நேரம் முரளிதர் கௌ என்ற நிறுவனத்திற்கும் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இருவருக்கும் நிலம் வழங்கப்பட்ட தொகையில் இமாலய வேறுபாடு இருந்தது.

அனர் பட்டேல் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலம் அரசு நிர்ணயித்த தொகையான ஒரு சதுர மீட்டருக்கு.ரூ.180 என்றதிலிருந்து 92% தள்ளுபடி செய்து வெறும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.15 ரூபாயில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே மற்றொரு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நிலத்தின் அரசு நிர்ணயித்த தொகை சதுர மீட்டருக்கு ரூ.190. ஆனால் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.671 ரூபாய் என்று வழங்கப்பட்டிருக்கிறது.

ஒரே சந்திப்பில் இருவேறு முடிவுகள் ஒரே துறையின் கீழ் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டும் நேர் எதிர் முடிவுகள். அதிகாரத்தின் பேரில் ஊழல் எளிமையாக நடந்தேறியிருக்கிறது. (Economic Times 02/03/16)

### நீட் ஊழல் - தமிழ்நாட்டின் சாபம்

ஒரு நாட்டில் கொடுக்கப்படும் கல்வியானது அனைத்து வகுப்பினரையும் சென்று அடையக் கூடிய ஒன்றாக இருக்க வேண்டும், அதாவது ஏழை, பணக்காரன், தாழத்தப்பட்டவர், உயர் வானவர் என அனைவருக்கும் சேர வேண்டிய ஒன்றானதாக இருக்க வேண்டும். அந்த கல்வி தான் சமூக நீதியை நிலைநிறுத்தும் கல்வி முறையாக அமையும், ஆனால் தற்போது மருத்துவத்துறையில் நடைமுறையில் இருக்கும் நீட் நுழைவுத்தேர்வு இந்த சமூக நீதியை அடியோடு பெயர்த் தெடுக்கிறது.

தமிழகம் தொடர்ச்சியாக இந்த நீட் நுழைவுத் தேர்வை எதிர்ப்பதற்கு காரணம் இதுதான். இது இந்நாள் வரை தமிழகத்தில் பின்பற்றப்பட்டு வந்த சமூக நீதியின் அடிப்படையிலான கல்வி முறையை தகர்ப்பதோடு மட்டுமல்லாமல் தமிழகம் அடைந்து கொண்டிருந்த வளர்ச்சியை பின்னுக்கு தள்ளியிருக்கிறது.

2016க்கு முன் தமிழகத்தில் மருத்துவப் படிப்புக்கான சேர்க்கை, தமிழக கல்வி முறையில் பயிலும் 12 வது வகுப்பு பொதுத்தேர்வு மதிப்பெண் அடிப்படையில் இருந்து வந்தது. ஆனால் கடந்த இரண்டாண்டுகளாக 'நீட்' நுழைவுத்தேர்வின் மூலம் இந்த சேர்க்கை நடந்து வருகிறது. இது தமிழகத்தின் திராவிட சிந்தனை யாளர்களால் உருவாக்கப்பட்ட கல்வி அமைப்பு மூலம் தமிழகம் அடைந்து வந்த வளர்ச்சியையும், சமூக நீதியையும் குலைத்திருக்கிறது. இதனை இந்த இரண்டு ஆண்டுகளில் தமிழக மருத்துவ கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றம் உணர்த்தியிருக்கிறது.

### தமிழகம் நீட்டிற்கு பிறகு பின்தங்கியிருக்கும் புள்ளிவிவரங்கள்

தமிழகத்தில் மட்டும் தான், இந்தியாவிலேயே அதிகப்படியான மருத்துவத்துறையின் சிறப்பு சிகிச்சைகளுக்கான உயர்மேற்படிப்பில் 195 சீட்டுகள் இருக்கிறது. இந்தியாவில் உள்ள 10 மாநிலங்களில் ஒரு சீட் கூட இல்லாத நிலையும், 10 மாநிலங்களில் பத்துக்கும் குறைவான

சீட்டுகளே இருக்கின்றன. இந்த நிலையில் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட NEET-SS நுழைவுத்தேர்வில் வெறும் 19 பேர் தான் தமிழகத்தை சார்ந்தவர்கள். தேர்வான மற்றவர்கள் எல்லாம் வெளி மாநிலங்களை சேர்ந்தவர்கள். இது தொடர்ந்தால் மருத்துவத்துறையிலும், சிறப்பு சிகிச்சை முறையிலும் பேர் பெற்றிருக்கும் தமிழ்நாடு அந்த நிலையை இழக்க நேரிடும் என்கிறார்கள் தமிழக மருத்துவர்கள்.

MBBS சேர்வதற்கு நடத்தப்படும் நீட் தேர்விலும் இதே நிலை தான். கடந்த ஆண்டு நீட் தேர்வில் 720 மதிப்பெண்ணிற்கு 420க்கு அதிகமாக மதிப்பெண் எடுத்தவர்கள் தமிழ்நாட்டில் வெறும் 470 பேர் மட்டும் தான். ஆனால் அதுவே கேரளாவில் 4000 மாணவர்கள், உத்தர பிரதேசத்தில் 11900 மாணவர்கள், டெல்லியில் 9000 மாணவர்கள் 400க்கு மேல் வாங்கி யிருக்கிறார்கள். (07-08-17 - TOI,mdu)

தமிழ்நாட்டில் மொத்தம் 22 அரசு மருத்துவ கல்லூரியில் 2447 MBBS சீட்கள் இருக்கிறது. ஆனால் கடந்த ஆண்டில் அரசு பள்ளியிலிருந்து நீட் தேர்வின் மூலம் வெறும் 4 பேருக்கு மட்டும் தான் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதுவே 2017ல் 2 பேர் என்ற அளவில் தான் இருந்தது. ஆனால், 2016ம் ஆண்டில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வு அடிப்படையில் நடந்த மருத்துவ சேர்க்கையில் அரசு பள்ளியில் இருந்து 30 மாணவர்கள் தேர்வாகியிருந்தார்கள். இந்த எண்ணிக்கை போதாது எனும் நிலையில் கூட, முன்னேறி கொண்டிருந்த வளர்ச்சியையும் அழித்து தமிழகத்தை படுபாதாளத்தில் தள்ளியிருக்கிறது மத்திய அரசு கொண்டு வந்த 'நீட்' நுழைவுத் தேர்வு. -TOI - 21-08-18.

### மருத்துவத் துறையில் தமிழகம் அடைந்திருக்கும் வளர்ச்சி

உலகத்தரத்தில் WHO விதி, 1000 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்க வேண்டும் என சொல்கிறது. ஆனால், தமிழகம், கேரளா, கர்நாடகம், டெல்லி போன்ற மாநிலங்களில் இதை விட அதிகமான மருத்துவர்கள் இருக்கிறார்கள். இன்று மருத்துவ துறையின் உச்சியை தொட்டிருப்பதாக சொல்லப் படும் மேலை நாடுகளுக்கு நிகராகவும், அதிக மாகவும் தமிழகத்தின் வளர்ச்சி இருக்கிறது.

1000 பேருக்கு 4 மருத்துவர்கள் என்பது தமிழகத்தின் நிலை, இது நார்வே(4.3), ஸ்வீடன்(4.2) ஆகிய நாடுகளுக்கு இணையான வளர்ச்சியாகும். இதுவே டெல்லியில் 1000:3, ஹிரி, அமெரிக்கா, கனடா நாடுகளுக்கு இணையான வளர்ச்சி. கேரளா மற்றும் கர்நாடகாவில் 1000:1.5 எனவும் பஞ்சாப் மற்றும் கோவா 1000:3 என்ற அளவிலான வளர்ச்சியையும் பெற்றிருக்கின்றது. ( - TOI 02-09-18)

தமிழகத்தில் கல்வி வளர்ச்சி அடைந்ததற்கான காரணம், இங்கிருந்த திராவிட சித்தாந்த சிந்தனை யாளர்களே. ராஜஸ்தான், உத்திரபிரதேசம், பீகார், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் பெண்களில் 4 பேரில் ஒருவர் மட்டுமே எழுத, படிக்க தெரிந்தவர்கள். ஆனால் தமிழகம் மற்றும் கேரளாவில் இது 100% ஆக இருக்கிறது. உயர் படிப்பிற்கு செல்வோர்கள் விகிதம் தமிழகத்தில் 44.3% ஆக இருக்கிறது. இது தேசிய அளவில் இருப்பதை விட இருமடங்கு அதிகம். உலக அளவில் 10% அதிகம். (wire 05-09-2018 )

### உயர்நீதிமன்றம் VS உச்சநீதிமன்றம்

2018ம் ஆண்டு நடந்த நீட் நுழைவுத்தேர்வில் உயர் நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றங்களின் தீர்ப்புகளில் தமிழக மாணவர்கள் அதிகமாகவே மன உளைச்சலுக்கு உள்ளானார்கள்.

தமிழகத்திலிருந்து நீட் தேர்வை எழுத 1500 பேருக்கு கேரளா, கர்நாடகம், ராஜஸ்தான் என வெளி மாநிலங்களில் தேர்வு மையங்கள் ஒதுக்கப் பட்டிருந்தன. இதனை ஒட்டி மதுரை உயர் நீதிமன்றம் தமிழகத்திற்குள்ளேயே தேர்வு மையம் ஒதுக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. இதனை நம்பி முன்பதிவு செய்திருந்த பயணச் சீட்டுகளையும் ரத்து செய்தனர் பல மாணவர்களின் பெற்றோர்கள். ஆனால் இறுதி நேரத்தில் உச்ச நீதிமன்றம், மதுரை உயர்நீதிமன்ற தீர்ப்பு செல்லாது என உத்தரவிட்டது. இதில் தமிழக மாணவர்கள் பல்வேறு மன உளைச்சலுக்கு ஆளாகி தேர்வு மையத்திற்கு சென்றார்கள். (The week04 05 18)

நீட் தேர்வில் தமிழில் தேர்வெழுதிய மாணவர்களுக்கு 49 கேள்விகள் தவறாக கொடுக்கப்பட்டிருந்தது. அதனால், மதுரை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் 198 மதிப்பெண்களை கருணை அடிப்படையில் வழங்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது. அதனால் ஆறுதலைடந்த மாணவர்களுக்கு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ஏமாற்றத்தை தந்தது. உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து CBSE உச்ச நீதிமன்றத்தை முறையிட்ட போது, எந்த மதிப்பெண்ணும் வழங்க முடியாது இது தமிழ் மொழிப்பெயர்ப்பாளர்களின் குற்றம். ஆங்கிலத்தில் சரியாகவே இருந்தது. மாணவர்களுக்கு ஆங்கிலம் தெரியவில்லை, அதனால் கருணை மதிப்பெண் வழங்கக்கூடாது என்ற சிபிஎஸ்இ தரப்பின் வாதத்தை ஆமோதித்து உச்ச நீதிமன்றமும் அதே தீர்ப்பை வழங்கியது. TOI 21-08-18

### தமிழகமே நடத்தட்டும்

SHARE

The Indian **EXPRESS**

LIKE

# NEET: Medical entrance server was hacked, two held, say

தமிழகம் மற்ற மாநிலங்களை விடவும் பெரும் வளர்ச்சியை அடைந்த நிலையில் சில கிராம சுகாதார மையங்களில் இன்னமும் தட்டுப்பாடு நிலவவே செய்கிறது. ஆனால், இந்த நிலையில் தமிழகத்திலிருந்து வரும் மருத்துவர்களின் எண்ணிக்கை பகுதியாக குறையும் போது தமிழகம் மருத்துவத் துறையில் பெரிய பின்னடைவை சந்திக்க வேண்டியிருக்கும்.

சமூக நீதி மூலம், அரசு பள்ளியில் படித்து கொண்டிருந்த ஏழை மாணவர்களுக்கு கிடைத்து கொண்டிருந்த அரிய வாய்ப்பை பிடுங்கியிருக்கிறது 'நீட்'. அதனால் தான் பொதுத் தேர்வில் 1176 மதிப்பெண் வாங்க முடிந்த அனிதாவால் நீட் தேர்வில் 720க்கு வெறும் 86 மதிப்பெண் மட்டும் பெற முடிந்தது.

ஒரு ஏழை மாணவியை மருத்துவராக்கும் சமூக நீதி முறையை ஒழித்து விட்டு, அனைவரும் எட்டி பிடிக்க முடியாத தூரத்தில் கல்வியை வைத்திருக்கும் 'நீட்' நுழைவுத்தேர்வை நடைமுறைப் படுத்தியது தான் அனிதா'வின் தற்கொலைக்கு காரணம். அனிதாவையும் சேர்த்து தமிழகம் தனக்கான உரிமையையும், வளர்ச்சியையும் மத்திய அரசிடமிருந்து இழந்து வருகிறது. இதை மீட்டெடுக்காமல் போனால் தமிழகத்திற்கு பேரிழப்பாக மாறும் அபாயம் இருக்கிறது.

இங்கே 12வது மதிப்பெண் தான் பிரச்சனை என்றால் தமிழகமே நுழைவுத்தேர்வை நடத்தட்டும். இதில் ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் ஒரே தேர்வு என்பதெல்லாம் தமிழகத்தின் வளர்ச்சியை பின்னோக்கி இழுக்கும் செயல் என்கிறார்கள் மருத்துவ அமைப்புகள். (07-08-17) TOI,mdu.)

**அஜித் டோவல் கருப்புபணம் - பல கோடி மோசடி**

மோடியினால் புரட்சி திட்டங்கள் என்று பிரச்சாரப்படுத்தப்பட்ட பணமதிப்பிழப்பு நடவடிக்கையும், ஜிஎஸ்டி நடவடிக்கையும் நாட்டு மக்களையும், சிறு தொழில்களையும், இந்தியாவின் பொருளாதாரத்தையும் எப்போதும் இல்லாத அளவுக்கு பெரும் பாதிப்புக்குஉள்ளாக்கியது. ஆனால், மோடியின் நண்பர்களான கார்ப்பரேட் தொழிலதிபர்களுக்கு இந்த நடவடிக்கை பெரும் லாபத்தை ஈட்டுத்தரும் ஒரு திட்டமாகவும், பாஜகவினருக்கும் அவரை சார்ந்தவர்களுக்கும், இதுவரை தாங்கள் மறைத்து வைத்திருந்த கருப்பு பணத்தை பாதுகாக்கும் ஒரு திட்டமாகவும் அமைந்தது.

அப்படியான ஒரு மோசடியில் தான் நம் நாட்டின் தேசிய ஆலோசகராக இருக்கிற அஜித் டோவலும் அவரது குடும்பமும் ஈடுபட்டிருக்கிறது. பணமதிப்பிழப்பு நடவடிக்கை எடுத்த ஓரிரு நாட்களிலேயே நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலின் மகன் விவேக் மூலம் ரூ.4000 கோடிக்கு மேல் பணம் கெய்மான் தீவில் போடப்பட்டிருக்கிறது. மேற்கு கரீபியன் கடலில் தன்னாட்சி பெற்ற பிரிட்டிஷார் சொந்தமான வெளிநாட்டு பகுதியில் இருக்கிறது இந்த கெய்மான் தீவு. இது வரி ஏய்ப்பு செய்பவர்களுக்கான புகலிடமாக கருதப்படுகிறது, அதாவது வரி ஏய்ப்பு செய்யப்பட்ட பணம் இங்கு பத்திரமாக பாதுகாக்கப்படுகிறது.

GNY ஆசியா என்ற பெயரில் ஓர் புதிய கணக்கு, நவம்பர் 21,2016ல் கெய்மான் தீவில் உருவாக்கப் படுகிறது. பணமதிப்பிழப்பு நடவடிக்கை எடுக்கப் பட்ட 13வது நாளிலேயே இது உருவாக்கப்படுகிறது. இதில் அஜித் டோவலின் மகன் விவேக் இந்த கணக்கினுடைய இயக்குனர்களில் ஒருவராக இருக்கிறார். இதே நிறுவனத்தின் மற்ற மூன்று இயக்குனர்களின் பெயர்கள் "பனாமா பேப்பர்"ல் வெளிவந்து பெரும் சர்ச்சையை உருவாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. RBI தகவல் படி 2000-2017 வரை கெய்மான் தீவில் இந்தியாவிலிருந்து ரூ.8300 கோடி முதலீடு செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் 2017 -2018 ஒராண்டு காலகட்டத்தில் மட்டுமே 17 வருடங்களுக்கு நிகரான தொகை முதலீடு செய்யப் பட்டிருக்கிறது. (The hindu 17/01/19)

விவேக் டோவலின் வியாபாரம் இந்தியா பவுண்டேஷன் நிறுவனத்துடன் பிரிக்க முடியாத அளவுக்கான தொடர்பு கொண்டது. இதனையும் அசோக் டோவலின் மற்றொரு மகன் ஷெளர்யா டோவல் நடத்தி வருகிறார். இவர் மோடிக்கு மிகவும் நெருக்கமானவர் கூட. இவர்கள் இருவரின் மூலமும் கெய்மான் தீவில் பெரும் தொகையிலான கருப்பு பணம், பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு பிறகான சில தினங்களிலேயேகைமாற்றப்பட்டிருக்கிறது.

விவேக் டோவல் ஹிரி குடியுரிமையை பெற்று சிங்கப்பூரில் வாழும் இவர் பட்டய நிதி ஆய்வாளராக இருக்கிறார் (chatered financial analyst). அங்கிருந்தே GSYயின் இயக்குனர்களில் ஒருவராகவும். இந்த நிறுவனத்தை கொண்டு பல பெரிய நிறுவங்களுடன் வியாபாரம் செய்பவராகவும் இருந்து வந்தார். இவரும், இவரின் மூத்த சகோதரர் சௌர்யா டோவலும் இணைந்து பெரும் கருப்பு பணத்தை கெய்மான் தீவில் பதுக்கியிருப்பதாக caravan பத்திரிக்கை நடத்திய விசாரணையில் தெரிய வந்திருக்கிறது. இவர்களின் நிறுவனம் பதிவு செய்வதில் தொடங்கி இதன் நிர்வாக பணிகளில் முழுக்க சட்ட விதிமீறல்கள் இருக்கிறது.

2011ல் அஜித் டோவல் முன்னாள் உளவுத்துறை பிரிவின் இயக்குனராக இருந்த போது "வெளிநாட்டில் உள்ள இந்திய கருப்பு பணம்" என்ற தலைப்பின் கீழ் ஓர் அறிக்கையை தாக்கல் செய்தார். தற்போது ரிசர்வ் வங்கியின் இயக்குனராக உள்ள ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தம் கொண்ட குருமூர்த்தி இந்த அறிக்கையை தாக்கல் செய்ய பக்கபலமாக உதவினார். இந்த அறிக்கை, இப்படி வரி ஏய்ப்பு செய்து பணம் சேமிப்பவர்கள் மீது "கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறுகிறது.

வெளியில் கருப்பு பணத்திற்கு எதிராக போராடுவது போல் நடித்து விட்டு குடும்பத்தின் மூலம் பெரும் கருப்பு பண மோசடி நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

பாஜகவின் கடைநிலை வாக்குச்சாவடி தலைவன் கருப்பு பணத்திற்கு எதிரான பேரணியில் கலந்து கொண்டு கள்ள நோட்டு அடிக்கிறான். தேசிய தலைவர் அமீத் ஷா மேடை முழுவதும் கருப்பு பண ஒழிப்பு என்று கர்ஜித்து விட்டு தன்மகன் மூலம் ஊழல் செய்கிறார். அதே போல் நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர், கருப்பு பணத்திற்கு எதிராக பயங்கர எதிர்ப்பு அறிக்கையை தாக்கல் செய்து விட்டு தன் குடும்பம் மூலம் கருப்பு பணத்தை வெளிநாடுகளில் முதலீடு செய்திருக்கிறார். ஆக மொத்தம் பாஜக, இந்த அரசியலைத் தான் இந்நாள் வரை செய்து வந்திருக்கிறது. (caravan 16/01/18) (Economic daily 18/01/2019)

### 2017 - LED ஊழல் - ராஜஸ்தான்

பொது சுகாதார பொறியியல் துறைக்கு LED பல்ப் வாங்குவதிலும் ராஜஸ்தான் பாஜக அரசு ஊழல் செய்துள்ளது. வாங்கப்பட்ட LED பல்பின் விலை, ஒரு 15 வாட்ஸ் பல்பு ரூ.15000, ஒரு 9 வாட்ஸ் பல்ப் ரூ.972, ஒரு12 வாட்ஸ் பல்ப் ரூ.12000 என எங்குமே கிடைக்காத விலையை தேடி கண்டுபிடித்து வாங்கியிருக்கிறது. இந்த ஒப்பந்த தாரருக்கு எந்த வித சரிபார்ப்பும் பார்க்காமல் 2 கோடி ரூபாயை வழங்கியது பாஜக அரசு.

முதலாவதாக, பொறியியல் துறை, LED பல்ப் வாங்குவதற்கான அனுமதி தரவில்லை. இரண்டாவது, 1 லட்சத்திற்கு அதிகமாக பொருள் வாங்க வேண்டும் என்றால் டெண்டர் நடத்தப்பட வேண்டும். ஆனால் பின்பற்றப்படவில்லை. வாங்கக்கூடிய பல்ப் தெரிந்த, கொஞ்சம் நல்ல தரமான நிறுவனத்துடையதாக இருக்க வேண்டும். ஆனால் மிக அதிக விலைக்கு வாங்கப்பட்ட பல்ப் தரமற்றதாக இருக்கிறது. 50000க்கு அதிகமாக பொருள்கள் வாங்க வேண்டுமென்றால் சென்ட்ரல் ஸ்டோர் மூலமாக தான் வாங்க வேண்டும். ஆனால் இதில் எதுவுமே பின்பற்றப்படவில்லை. என்று செண்ட்ரல் ஸ்டோரில் பணிபுரியும் அதிகாரிகள் கூறுகிறார்கள். (TOI 08/02/17)

போர் விமானம் முதல் பல்ப் வரை ஊழல் செய்வதில் குறையே வைப்பதில்லை பாஜக.

### கள்ள நோட்டு அடிக்கும் பாஜக

பா.ஜ.க வின் இளைஞர் அமைப்பான பாரதிய ஜனதா யுவ மோர்ச்சா அமைப்பின் தலைவர் ராகேஷ், கேரளாவில் 1.5 லட்சம் போலி நோட்டு களுடன் கைது செய்யப்பட்டார். அவருடைய வீட்டிலிருந்து போலி நோட்டை அச்சடிக்கும் இயந்திரம், அதற்கான மை போன்றவையும் அவர் வீட்டிலிருந்து பறிமுதல் செய்யப்பட்டது.

கேரளாவில் பாஜகவின் கருப்பு பனத்தை

மீட்டுக் கொண்டு வரும் பேரணிக்கெல்லாம் தலைமை தாங்கியிருக்கும் ரமேஷ் ரூ.2000, ரூ500, ரூ50, ரூ.20 வரை எல்லாவிதமான கள்ள நோட்டை அச்சடித்து வந்திருக்கிறார். பாஜகவின் கருப்பு பண ஒழிப்பை, கள்ள பணம் அடித்து நிறைவேற்றியிருக்கிறார் இவர். (The Hindu 23/06/17)

**பயிர் காப்பீடு ஊழல்**

பாஜக அறிமுகப்படுத்தும் ஒவ்வொரு திட்டமும் ஏழை மக்களுக்கானது, விவசாயி களுக்கானது என்று விளம்பரப்படுத்தப்பட்டு, ஆனால் இறுதியில் விசாரணைக்கு பிறகு கொண்டு வரப்பட்ட திட்டங்களில் லாபம் அடைவது பெரிய தனியார் நிறுவனங்களாக இருப்பது தெரிய வருகிறது.

அப்படியொன்றே விவசாயிகளுக்காக கொண்டு வரப்பட்டதாக கூறப்பட்ட பயிர் காப்பீடு திட்டம். இதிலும் பெரும் ஊழலை நிகழ்த்தியுள்ளது பாஜக அரசு.

மத்திய மோடி அரசால், விவசாயிகளுக்காக கொண்டு வரப்பட்ட "பிமா பசல் யோஜனா திட்டம்" ரஃபேல் ஊழலை காட்டிலும் மிகப் பெரியது என்கிறார் மூத்த பத்திரிக்கையாளரும், வேளான் ஆர்வலருமான பி.சாய்நாத்.

உதாரணத்திற்கு, மகாராஷ்டிராவில் 2.80 லட்சம் விவசாயிகள் சோயா பயிரிட்டுள்ளனர். ஒரு மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் காப்பீட்டு தொகையாக ரூ.19.20 கோடியை காப்பீடு நிறுவனத்திற்கு தருகிறார்கள். மத்திய அரசும், மாநில அரசும் தனித்தனியாக தலா ரூ.77 கோடி செலுத்துகிறார்கள்.

ஒட்டு மொத்தமாக ரிலையன்ஸ் காப்பீடு நிறுவனத்திற்கு மட்டும் ரூ.173 கோடி கிடைக்கிறது. ஒட்டுமொத்த பயிரும் கருகிப்போனால் கூட காப்பீடு நிறுவனம் ரூ.30 கோடி மட்டுமே இழப்பீடாக தரும்.

ஆனால் எந்த வித முதலீடும் இல்லாமல் காப்பீடு நிறுவனம் ரூ.143 கோடி எடுத்துக் கொள்ளும். இதே நடைமுறை தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெறுகிறது. (தி இந்து 07/11/18)

பகல் கொள்ளை என்பதை போல் இத்திட்டம் இருக்கிறதல்லவா? மத்திய அரசின் இந்த பயிர் காப்பீடு திட்டத்தில் 8 ஆயிரம் கோடி ரூபாய் வரை முறைகேடு நடந்துள்ளது என்று அகில இந்திய விவசாயிகள் போராட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் வி.எம்.சிங் குற்றம் சாட்டுகிறார். (தினமலர் 20/09/17)

**சட்டவிரோத மணல் சுரண்டல் - மத்தியப் பிரதேசம்**

மத்தியபிரதேசத்தில் உள்ள நர்மதா நதியில் உள்ள மணலை, மோசடிகும்பல் சட்ட விரோதமான முறையில் அரசின் உதவியுடன் கொள்ளையடித்து கொண்டிருந்தன. இந்த கொள்ளையில் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பது ம.பி முதலமைச்சர் சிவராஜ் சௌகானுடைய தம்பி நரேந்திர சிங் சௌகான். இந்த மணல் கொள்ளையை எதிர்த்த நேர்மையான IAS அதிகாரி ஒருவருடன் நான்கு பேர் இந்த மணல் கொள்ளை கும்பலால் கொலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த 11 வருடமாக இந்த கொள்ளை சுதந்திரமான முறையில் நடந்து வருகிறது. (TOI 04/02/17)

**சிட் பண்ட் ஊழல்**

பாஜக ஆட்சி செய்த காலத்தில் 2015 - 2017வரை மட்டும் சிட் பண்ட் நிறுவனம் மூலம் சத்திஸ்கர் மாநிலம் முழுக்க மக்கள் ஏமாற்றப் பட்டிருக்கிறார்கள். 111 சிட் பண்ட் நிறுவனங்களில் உள்ள 1,33,697 முதலீட்டாளர்களின் ரூ.4,84,39,18,222 ஏமாற்றப் பட்டிருக்கிறது.

ஆனால் இதன் மீதான எந்த அதிகபட்ச நடவடிக்கையும் மாநில அரசால் எடுக்கப் படவில்லை. ஏமாற்றப்படப் பட்டோம் என்று தெரிந்ததும் முதலீடு செய்த 25 பேர் தற்கோலை செய்து கொண்டனர். பணத்தை இழந்ததில் பெரும் பகுதியினர் ஏழைகளும், விவசாயிகளும் தான். இருப்பினும் பணத்தை இழந்த எவருக்கும் பணம் திருப்பி கிடைக்கவில்லை. இந்த ஊழல் ஆளும் அரசின் துணை இல்லாமல் நடக்க முடியாது என்கிறார்கள் அதிகாரிகள். நிறுவனங்களுக்கு எந்த அடிப்படையில் அனுமதி கொடுக்கப்பட்டது. நிறுவனங்களின் அனுமதியில் பாஜக அரசு பெரிய ஊழலில் ஈடுபட்டிருக்கிறது என்பது மட்டும் வெளிச்சம்.

**சத்திஸ்கர் பட்ஜெட் ஊழல்**

சத்திஸ்கர் மாநிலத்தில் 2016-17 ம் ஆண்டில் செய்யப்பட்ட பட்ஜெட் ஒதுக்கீட்டில் இருந்து வெறும் 25% மட்டுமே மக்களுக்காக செலவிடப் பட்டிருக்கிறது. ஒதுக்கீடு செய்யப்பட்ட 80202.32 கோடியில் வெறும் 20,000 கோடிக்கும் குறைவாக தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் சத்திஸ்கரில் ஆட்சி செய்து வரும் பாஜக அரசு மக்களின் பணத்தை தவறாக பயன்படுத்தி ஊழல் செய்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.

**ஊழல் செய்வதற்காகவே சட்டம் இயற்றிய பா.ஜ.க**

ராஜஸ்தான் மாநிலத்தில் ஊழல் செய்த அரசு அதிகாரிகள், மாஜிஸ்திரேட்டுகள், மாவட்ட ஆட்சியர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகளின் மீது

நடவடிக்கை எடுக்க மாநில பாஜக அரசு அனுமதி தராத நிலையில், அவர்களுடைய பெயர்களை வெளியிடுவோருக்கு இரண்டு ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், ரொக்க அபராதமும் விதிக்கப்படும் என்று அவசர சட்டம் பிறப்பித்தது.

ஊழல் செய்தவர்கள் என்று சந்தேகிக்கும் ஒருவரின் பெயரை வெளியிடாமல் அவர் மீதான குற்றத்தை எப்படி மெய்ப்பித்திட முடியும். இது ஊழல் வாதிகளுக்கு பாதுகாப்பு தரும் சட்டம். இந்த சட்டத்தை அவசர நிலையில் கொண்டு வந்தது ராஜஸ்தான் பாஜக அரசு.

ஊழலுக்கு ஆதரவாக சட்டம் இயற்றப்பட்டது நாட்டிலேயே இதுதான் முதல்முறை. (தி இந்து 26/10/17)

**2018 - மத்திய பிரதேசம் E-டெண்டர் ஊழல்**

மத்திய பிரதேசத்தின் சிவராஜ் சௌஹான் (பாஜக) தலைமையின் கீழான அரசில், 8000 கோடி ரூபாய்க்கு மேல் ஊழல் E-டெண்டர் மூலமாக நடந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

E-டெண்டர் பணியில் ஈடுபட்ட சில பொறியாளர்கள் இந்த தொழில்நுட்பத்தில் தவறு செய்வதற்காக சில ஓட்டைகளை ஏற்படுத்தி யுள்ளார்கள். இதன் மூலம் நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான டெண்டர்களை எளிமையாக கைப்பற்ற முடிந்தது. இதற்காகவே தனியார் நிறுவனத்துக்கு E-டெண்டர் software தயாரிக்கும் பணியை கொடுத்தது.

வியாபம் ஊழலை விட மிகப்பெரும் ஊழல் இதில் நடந்திருப்பதாகவும் விசாரணையின் முடிவில் 50,000 கோடிக்கும் அதிகமான ஊழல் கண்டுபிடிக்கப்படலாம் என்கிறார்கள். (Firstpost 14/11/18) (Economic Times 06/09/18)

**அசாம் சிவில் சர்விஸ் தேர்வில் பாஜக ஊழல்**

அசாம் மாநிலத்தில் பா.ஜ.க.வின் சட்ட வல்லுனர் மகள் உட்பட 19 பேர் சிவில் சர்விஸ் தேர்வில் முறைகேடு செய்ததாக கைது செய்யப்பட்டனர். பாஜக வின் மக்களவை உறுப்பினர் ஸிறி ஷர்மா வின் மகள் பல்லாபி ஷர்மா, பாஜகவின் சட்டமன்ற உறுப்பினரான ஜோய்ராம் இங்லெங் உட்பட பலர் தேர்வில் முறைகேடு செய்து பெரிய பொறுப்புகளுக்கு வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் அவர்களிடமிருந்து நிறைய போலி சிவில் சர்விஸ் கேள்வித் தாள்களையும் பின்பற்றினர்.

**IL&FS ஊழல் - குஜராத்**

Infrastructure Leasing & Financial Services (IL&FS) என்ற தனியார் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்திற்கு நேர்முக, மறைமுக உதவிகளை குஜராத் முதலமைச்சராக இருந்த போதே மோடி, உதவி செய்து வந்தார். மோடி, முதலமைச்சராக இருந்த போதே இந்நிறுவனத்திற்கு 70,000 கோடி திட்டம் ஒன்றை ஒதுக்கினார். ஆனால் இன்று வரையும் அந்த திட்டத்தில் எந்த நகர்வும் இல்லாமல் இருக்கிறது என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கூறுகிறார்.

தற்போது பண நெருக்கடி காரணமாக, மேலும் SBI-LIC நிறுவனங்கள் மூலம் 91000 கோடி ரூபாயை இந்நிறுவனத்தில் முதலீடு செய்கிறார் மோடி. நாட்டின் நிதியை தனியார் நிறுவனத்திற்கு மேலும் மேலும் தாரை வார்த்து நாட்டின் பொருளாதாரத்தை சிதைத்து வருகிறார் மோடி. (India today 02/10/18)

**உ.பி. அமைச்சர்கள் லஞ்சம்**

உத்திர பிரதேசத்தில் தலைமைச் செயலகத்தின் உள்ளே இருந்தே பாஜகவை சார்ந்த மூன்று அமைச்சர்களின் பெர்சனல் அதிகாரிகள் லஞ்சம் வாங்குவதை ABP என்ற பத்திரிக்கை புலனாய்வு செய்து காணொளி வெளிக்கொண்டு வந்தது. பணி இடமாறுதல், ஒப்பந்த ஒதுக்கீடு செய்ததற்காக இந்த லஞ்சம் கொடுக்கப்பட்டதை வெளிக்கொண்டு வந்தார்கள். (https://www.abplive.in/ videos/abp-news-sting-exposes-personal-secretaries-of-up-ministers-taking-bribe-884734/amp)

**வியாபம் ஊழல்**

அரசுப்பணிக்கு தேர்வு செய்யும் பணியை இங்கே தமிழகத்தில் டிஎன்பிஎஸ்சி செய்து வருவதை போல மத்தியபிரதேசத்தில் 'விவாக் சாயிக் பரீத் ஷா மண்டல்' என்ற வியாபம் அமைப்பு செய்து வருகிறது. இந்த அமைப்பின் மூலம் தான் ஆசிரியர் பயிற்சி, எம்.சி.ஏ, மருத்துவம், பொறியியல் போன்ற தேர்வுகளும் தொழிற்கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் மற்றும் பணியாளர் நியமனத்திற்கான தேர்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

பல வருடங்களுக்கு பிறகாக 2003ம் ஆண்டு, அசீஷ் சதுர்வேதி என்கிற சமூக ஆர்வலர் மூலம் இந்த வியாபம் ஊழல் வெளிக்கொண்டு வரப்பட்டது.

வியாபம் என்ற அமைப்பில் பல முறைகேடுகள் நடந்திருப்பதையும், இதில் மாநிலத்தின் உச்சபட்ச அதிகாரத்திலிருந்து கீழ் நிலை அரசு ஊழியர்கள் வரை முறைகேட்டில் ஈடுபட்டிருப்பதை ஆதாரத்துடன் வெளிக்கொண்டு வந்தார். 2003ம் ஆண்டு மட்டும், மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் மாணவர்களுக்கு பதிலாக தேர்வில் போலியான நபர்களும், தேர்வில் எழுதப்பட்ட வினாத்தாள்கள் ஆசிரியர்களாலேயே சரி செய்யப்பட்டு பலரை பணம் பெற்று கொண்டு தேர்வில் தேர்ச்சி பெற



வைத்திருப்பதையும், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் நியமனம் போன்றவற்றிலும் இப்படி லஞ்சத்தை பெற்று நியமிக்கப்பட்டவர்களின் பட்டியலையும் தொகுத்து ஊடகங்களிடம் அசீஷ் கொடுத்தார். இப்படி ஆட்களிடம் லஞ்சம் பெறுவதற்காகவே நியமிக்கப்பட்டிருந்த ஏஜெண்டுகளுக்கும் அரசியல் பின்புலம் இருப்பவர்களும் நடைபெற்ற sms உரையாடல்கள் உட்பட பல்வேறு ஆதாரங்களை தொகுத்து ஊடகங்களிடம் கொடுத்தார். அப்போதே, அந்நாள் வரை கவனம் பெறாமல் இருந்த வியாபம் ஊழல் பெரும் சர்ச்சைக்கு உள்ளானது. ஊழலின் வீரியம் எந்தளவுக்கு என்றால், ஏழு ஆண்டுகளில் மட்டும் 1.47லட்சம் பேர் ஆள் மாறாட்டம் செய்து தேர்வு எழுதியிருக்கிறார்கள் என கண்டு பிடிக்கப்பட்டது. இதுபோக பேப்பர் திருத்தம், பணியமர்த்தல் போன்றவற்றிலும் பெரிய மோசடி நடந்திருக்கிறது.

இதன் பிறகு ம.பி மாநில அரசால் உருவாக்கப்பட்ட சிறப்பு விசாரணை குழுவிடம் அசீஷ் தன்னிடமிருந்த ஆதாரங்களை கொடுத்தார். அசீஷ் கொடுத்த அறிக்கையில் மத்திய பிரதேச முதல்வரின் பெயரும், மனைவி சாதனாசிங் பெயரும் இடம் பெற்றிருந்தது. ஆனால் சிறப்பு விசாரணை குழு முதல்வரின் பெயரையும், அவரது மனைவி பெயரையும் நீக்கி விட்டு புதிய ஆவணத்தை தயார் செய்து சமர்ப்பித்தது. இந்த மோசடியை எதிர்த்து, அப்போது காங்கிரஸ் அரசு சிறப்பு விசாரணை குழுவை கண்காணிக்க நீதிமன்றத்தால் நியமிக்கப் பட்ட கண்காணிப்பு குழுவிடம் ஆதாரத்துடன் சமர்பித்தது.

இதன் பிறகு இந்த வழக்கு உயர்நீதிமன்றத்திற்கு செல்ல, சிறப்பு புலனாய்வு குழு ஒன்றை விசாரணை செய்வதற்காக நியமித்தது நீதிமன்றம். புலனாய்வு குழு விசாரணையை இன்று வரை முடிக்கவில்லை. ஆனால் 1200க்கு மேற்பட்டவர்களை கைது செய்திருக்கிறது. இதில் மற்றொரு பெரும் மோசடி என்னவென்றால், ஊழல் செய்த ஒருவருக்கு உயர்நீதிமன்றமே பாதுகாப்பு கொடுத்து அவரை விடுவித்தது தான். ஆம், வியாபம் ஊழலில் குற்றவாளி பட்டியலில் மத்திய பிரதேச அப்போதைய ஆளுநரான ராம் நரேஷ் யாதவ் ஒருவராக சேர்க்கப்பட்டிருந்தார். இவர் மீது முதல் தகவல் அறிக்கையும் போடப்பட்டிருந்தது. ஆனால், நீதிமன்றம், 'ஆளுநர் பொறுப்பில் இருப்பவர் மீது வழக்கு தொடர சட்டத்தில் அனுமதியில்லை' என்று கூறி புகாரை தள்ளுபடி செய்தது.

ஆளுநர் என்ற பொறுப்பில் ஊழல் புரியும் ஊழல்வாதிகள் இருந்தால், அப்போதேஅவருக்கு பாதுகாப்பாக விளங்கும் என்றால் ஊழல்வாதிகளுக்கு ஏற்ற இடம் தான் ஆளுநர் பதவியா என்ற நியாயமான கேள்வியும் பல சமூக ஆர்வலர்களிடமிருந்து வெளிவந்தது.

### மர்ம மரணங்கள்

வியாபம் ஊழல் வழக்கில் ஆளுநர் ராம்நரேஷ் யாதவின் மகன் சைலேஷ் யாதவ் மீது 10 பேரிடம் பணம் பெற்றுக் கொண்டு வியாபம் தேர்வில் முறைகேடு செய்து பணியமர்த்தியதாக குற்றச்சாட்டப்பட்டு முதல் தாக்கல் அறிக்கையும் செய்யப்பட்டது. பிறகு அப்ரூவராக மாறிய சைலேஷ் வியாபம் ஊழலில் ஈடுபட்டிருக்கும் கும்பல் பற்றிய முழு தகவல்களையும் கூறி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். வாக்குமூலம் அளித்த சில நாட்களிலேயே லக்னோவில் உள்ள தனது வீட்டில் இறந்து சடலமாக கிடந்தார். இன்று வரை இந்த மரணத்தில் மர்மம் நிலவுகிறது. வியாபம் ஊழலில் ஈடுபட்டிருந்த ஏஜெண்டான, நர்மதா தாமோர் என்ற பெண், எப்படியெல்லாம் ஆள் மாறாட்டம் செய்தோம் என்றும் ரூ4 முதல் ரூ.6 லட்சம் ரூபாய் வரை இதற்காக உதவிய அதிகாரிகளுக்கு கொடுக்கபட்டிருக்கிறதென சம்பந்தப்பட்டவர்களின் பெயரையும் கூறி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். இந்தூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர் சிறைக்குள்ளேயே மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இன்று வரை இந்த மரணங்கள் மர்மமாகவே இருக்கின்றன.

நர்மதா தாமோரின் மரணத்தில் உள்ள சந்தேகத்தை வெளிக்கொண்டுவர நினைத்த இந்தியா டூடே பத்திரிக்கையாளர் அக்ஷய் சிங், நர்மதாவின் வீட்டுக்கு சென்று அவர் தந்தை மெகதாப் சிங்கிடம் விசாரித்தார். அவரிடமிருந்து அக்சய் சிங்கிற்கு முக்கிய தகவல் ஆவணங்கள் கிடைத்தது. அதை ஜெராக்ஸ் எடுத்து காத்திருக்கும் சூழலில் திடீரென வாயில் நுரை தள்ளியவாறு கீழே விழுந்தார். மெகதாஜ சிங் மற்றும் அப்பகுதி மக்கள் அவரை மருத்துவமனையில் சேர்க்கும் போது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். ஒரு பத்திரிக்கையாளரின் மரணம் கூட மர்மமான முறை என்று சொல்லப்படுகிறதே ஒழிய விசாரணையில் உண்மை கண்டறியப்படவில்லை.

ஜபல்பூரில் உள்ள நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மருத்துவகல்லூரியின் டீன் ஆக இருந்த டாக்டர்

அருண் சர்மா, மருத்துவக் கல்லூரியில் வியாபம் முறைகேடு மூலமாக சேர்ந்தவர்கள் மற்றும் மருத்துவ கல்லூரியில் பேராசிரியராக, விரிவுரையாளராக நியமனம் பெற்றவர்கள் குறித்த விசாரணைக்கு உதவியாக இருந்து அவர்களை பற்றிய தகவல்களையும் தந்து உதவியவர் திரிபுரா மாநிலத்திற்கு செல்வதற்காக டெல்லியில் விமான நிலையத்திற்கு அருகில் உள்ள ஹோட்டலில் தங்கியிருந்தார். அடுத்த நாள் எந்த வித நடவடிக்கையும் இல்லாத சந்தேகத்தில் ஹோட்டல் ஊழியர்கள் கதவை திறந்து கிடந்த போது பிணமாக கிடந்தார் மருத்துவர்,சர்மா. அருண் சர்மாவுக்கு முன்னாலிருந்த, வியாபம் வழக்கு விசாரணைக்கு உதவிய முன்னாள் டீன், மருத்துவர் சி.கே.சாக்லே பெரும் தீக்காயங்களுடன் இறந்து கிடந்தார்.

வியாபம் ஊழல் மூலமாக தேர்வு செய்யப் பட்டதாக கூறப்பட்ட ஒரு சப் இன்ஸ்பெக்டர், அனாமிகா குஷ்வாகா என்ற பெண் அதிகாரியின் உடல் 2015, ஜூலை 6ம் தேதி ஏரியில் மிதந்து கொண்டிருந்தது. இந்த மரணத்தின் மரணமும் இன்னும் விலகவில்லை.

இப்படியான மர்மான மரணங்களுக்கு பிறகு அனைத்து கட்சிகளும் சிபிஐ விசாரணை கோர, முதல்வர் சிவராஜ் சௌகான் அதெல்லாம் தேவையில்லை வழக்கு விசாரணை சரியான முறையிலேயே செல்வதாக கூறி மறுத்து விட்டார், பிறகு சில வருடங்களுக்கு பிறகு, சிபிஐ விசாரணை கோரப்பட்டு சிபிஐ விசாரனை நடத்தி வருகிறது.

இந்த வியாபம் ஊழலில் சம்பந்தப் பட்டவர்களில் இதுவரை 60பேர் உயிரிழந்துள்ளனர். இதில் பெரும்பாலனவர்களின் மரணம் மர்மமான முறையிலேயே நடந்திருக்கிறது. இதனை பார்க்கும் யாருக்கும் இது இயல்பான ஒன்றாக தெரிவதற்கான வாய்ப்பு இல்லை, தொடர்ச்சியான மர்ம மரணங்களே இதன் பிண்ணனியில் யார் இருக்கிறார்கள் என்பதை காட்டுகிறது. ஆனாலும் தற்போது ஆட்சியில் இருப்பவர்களிடம், வழக்கை முடிக்க முயற்சி எடுப்பார்கள் என்ற நேர்மையையும் எதிர்பார்க்க முடியாது. வழக்கை முடிக்க நினைக்கும் எவருக்கும் பாதுகாப்பும் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் பெற முடியாது. விசாரணையில் ஆஜராகுபவர்களை எல்லாம் கொன்றுவிட்டு தாங்கள் சுத்தமானவர்கள் என்று சொல்வது பாஜக'வினருக்கு ஒன்றும் புதிதல்ல. நீதிபதி லோயா, கர்கரே என இவர்களால் கொல்லப்பட்ட அதிகாரிகளும் ஏராளம், அப்பாவிகளும் ஏராளம். (தி இந்து 13/06/17) (விகடன் 07/07/15) (தினமலர் 11/08/18) (rediff 23/11/18)

**அதானிக்கு மோடி சலுகை அளித்த ஊழல்கள்**

மோடி தன் தேர்தல் பிரச்சாரத்தில் நாட்டின் பெரும் தொழிலதிபராக இருந்தாலும் சரி, சாமானிய



மக்களாக இருந்தாலும் சரி இருவரும் ஒன்றே என்று நெஞ்சை நிமிர்த்தி பேசினார். ஆனால் பிரதமர் பதவிக்கு வந்ததும், தொழிலதிபர்களுக்கு சேவகனாகவும், நாட்டின் சாமான்ய மக்களை காணவே நேரம் இல்லாமல், அவ்வப்போது மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கவும், தொழிலதிபர்கள் செழிப்பதற்கும் பற்பல திட்டங்களை போட்டு விட்டு சுற்றுலா பயணியாக மாறி உலகம் சுற்றி வந்தார்.

இதில் தொழிலதிபர் அதானிக்கு மோடி சலுகை என்ற பெயரில் தொடக்கத்திலிருந்தே, நாட்டின் பொதுநிதியை வாரி வழங்கினார். அதில் சில,

1. 2005ம் ஆண்டு, முந்த்ரா துறைமுகம் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு 16000 ஏக்கர் நிலம் அதானி குழுமத்திற்கு வழங்கப்பட்டது. அப்போது ஒரு சதுர கி.மீக்கு ரூ.102 என்பதே சந்தை விலை. ஆனால் அதானிக்கு வெறும் 12பைசாவுக்கு கொடுக்கப்பட்டது. இதன் மூலம் அதானிக்கு ரூ.6546 கோடி ஆதாயம்.

2. 2006-2009ம் ஆண்டுகளில் குஜராத் பெட்ரோலிய நிறுவனம் இயற்கை வாயுவை அதிக விலைக்கு வாங்கி அதானிக்கு குறைவான விலையில் விற்றது. இதில் மட்டும் அதானிக்கு ரூ.70.5 கோடி ஆதாயம். நிலங்களை விற்பது மட்டுமல்ல அரசின் நிதியில் அதிக விலைக்கு வாங்கி குறைந்த விலைக்கு விற்றும் கூட அதானிக்கு சேவை செய்தார் மோடி.



3. 2015ம் ஆண்டு இறக்குமதி வரி மற்றும் எக்ஸைஸ் வரி அதானி குழுமத்திற்கு தடை செய்யப்பட்டது. இதன் மூலம் அதானி குழுமத்திற்கு மட்டும் ரூ.1000 கோடி லாபம்.

4. 2016ம் ஆண்டு நிலக்கரி ஊழல் மூலம் அதானி குழுமத்திற்கு கிடைத்த ஆதாயம், ரூ.50,000 கோடி. ஆனால் அமலாக்கத்துறை விதித்த அபராதம் வெறும் ரூ.5000 கோடி. அதாவது ஈயம் பூசுன மாறியும் இருக்கனும் பூசாத மாரியும் இருக்கனும் என்று கவுண்டமணி படத்தில் சொல்வார். அபராதம் போட்ட மாதிரியும் இருக்கனும் அதானிக்கு லாபம் கிடைச்ச மாதிரியும் இருக்கனும் என்று மோடி எடுத்த முயற்சியால் அதானி கொள்ளையடித்த ரூ.50,000 கோடி பணத்தில் ரூ.5000கோடி மட்டும் அரசுக்கு கொடுக்கப்பட்டது.

5. 2016ம் ஆண்டு வர்த்தக அமைச்சகம் சிறப்பு பொருளாதார மண்டலம் தொடர்பான விதிகளை மோடி அரசு திருத்தியதன் மூலம் அதானிக்கு லாபம் ரூ.500 கோடி. இதனை வெளியிட்ட

"எகனாமிக் &பொலிடிக்கல் வீக்லி" பத்திரிக்கை ஆசிரியர் பதவி விலக நிர்பந்திக்கப்பட்டார்.

6. 2002ம் ஆண்டு ரூ.3000 கோடியாக இருந்த அதானியின் வருமானம், 2015ம் ஆண்டு ரூ.75,659 கோடியாக மோடியின் சேவையால் உயர்ந்து நின்றது. ஆனால் மோடி தன் நண்பர் அதானியை ஒரு வகையில் ஏமாற்றியிருக்கிறார். மோடியின் சேவையால், அமித் ஷாவின் மகன் ஜெய் ஷாவின் வருமானம் 2016ம் ஆண்டில் வெறும் 50,000 ஆனால் 2017ம் ஆண்டில் ரூ.80கோடி . ஒரே வருடத்தில் அமித் ஷா குடும்பத்திற்கு சேவை செய்து உயர்த்தி விட்ட மோடி, அதானிக்கு மட்டும் 13 வருடங்களில் சாத்தியமாக்கியிருக்கிறார்.

7. 2014ம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தில் மோடி பயன்படுத்திய விமானம் அதானிக்கு சொந்தமானது என்பதும், அப்பொழுது அதானி செய்த செலவு ரூ.10,000 கோடி எனவும் பத்திரிக்கைகள் செய்தி வெளியிட்டன. எப்படியோ ஊழலில் ஈடுபடும் நண்பர்கள் பரஸ்பரம் தங்கள் அன்பை பரிமாறிக் கொள்வது என்பது இதுதான் போல. (தீக்கதிர் 27/10/17) ( Hindustan Times 23.10.17)

இன்னும் நூற்றுக்கணக்கானஊழல்களை பாஜகசெய்துநாட்டு மக்களின் பணத்தை கொள்ளையடித்துள்ளது. வியாபம் ஊழல், நீரவ் மோடி ஊழல்,சவப்பெட்டி ஊழல், அதானி ஊழல் என இன்னும் பல ஊழல்களை செய்து குவித்துள்ளது பாஜக மோடி அரசு. இந்த ஊழல்வாதிகளின் ஊழல் இனியும் தொடரும்.

-அபூ சித்திக்


இப்போது பரபரப்பான விற்பனையில்




வேர்கள் வெளியீட்டகம்
+91 81481 29887

# நைஜீரியாவின் அறிவு களஞ்சியம்
# ஆயிஷா லெமு




இருபதாம் நூற்றாண்டின் இஸ்லாமிய தத்துவ உலகம் வியந்து போற்றிய பெண்மணி ஆயிஷா லெமு. இஸ்லாமிய மார்க்கத்தை வாழ்வியல் நெறியாக தனது 21 வது வயதில் ஏற்றுக்கொண்டவர்.

இங்கிலாந்தின் டோர்ஸெட் மாநிலத்தின் புலே நகரில், 1940இல் பிறந்தவர் பிரிஜெட் அய்ஷா ஹனி. கிறுஸ்தவ குடும்பத்தில் பிறந்த இவரது தாய்-தந்தை இருவருக்கும் மத நம்பிக்கை இருக்கவில்லை. ஐந்தாம் வகுப்பு வரை இங்கிலிஷ் சர்ச் கான்வென்ட் பள்ளியில் படித்த அய்ஷாவிற்கும் அங்கு பிரசிங்கிக்கப்பட்ட சுவிசேஷங்களிலும், திருப்பலிகளிலும் குறிப்பாக கிறுஸ்துவ திரித்துவ கொள்கையிலும் ஆர்வமற்று இருந்தார். ஆனால் மதங்கள் மீதான ஆவல் அவருக்கு குறையவில்லை.

15வது வயதில் சீன தத்துவஞானி தாவோ தேச்சிங் அவர்களின் கருத்துக்களை படிக்கலானார். பிறகு அவருக்கு புத்தமத தத்துவங்களில் சிலவற்றை படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

17வது வயதில் மேலநிலைப்படிப்பிற்காக கனடா சென்ற அய்ஷாவிற்கு சீன மொழி படிக்க இடம் ஒதுக்கப்பட்டது. அங்கே அவருக்கு இந்துமதம் அறிமுகமானது. தாவோயிசம், புத்திசம், இந்துயிசம் ஆகிய மும்மத கோட்பாடுகளை பயின்ற பிறகும் அவருக்கு மதங்களையும் கடவுள் கொள்கையையும் பற்றிய விளக்கம் கிடைக்காதிருந்ததாம்.

அவருக்குள்ளிருந்த கடவுள் தேடலுக்கான விடை எங்கும் கிடைக்காத காரணத்தால் அவரது மனம் நிம்மதியற்று இருந்ததாக கூறுகிறார்.

மீண்டும் இங்கிலாந்து திரும்பியவருக்கு இங்கிலாந்து பல்கலைக்கழகம் சார்ந்த ஸ்கூல் ஆப் ஓரியன்டல் அண்ட் ஆப்பிரிக்கன் ஸ்டடீஸ் கல்வி

மையத்தில் சீன மொழி மற்றும் கலாச்சாரம் சார்ந்த துறையில் பயில தொடங்கினார்.

அங்கு அவருக்கு சில முஸ்லிம் நண்பர்கள் அறிமுகமாயினர். அவர்களிடமிருந்து ஆயிஷா இஸ்லாமிய இலக்கியங்கள் அடங்கிய புத்தக தொகுப்பினை பெற்றுக்கொண்டு படித்தவருக்கு இஸ்லாத்தை தழுவிக் கொள்ளும் ஆர்வமேற்பட்டது.

ஆனால் அவரது முஸ்லிம் தோழர்களோ... "அவசரப்படாதீர்கள்! நிதானமாக வாசித்து அறிந்து உணர்ந்த பிறகு மதத்தை தழுவுங்கள்" என அறிவுறுத்தினர்.

பின்னர் குர்ஆன், சுன்னாஹ், ஃபிக்ஹ், ஷரிஆ என அனைத்தையும் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து கற்றுவந்தவர் **1961**ல் இங்கிலாந்து பல்கலையின் ஒரு பிரிவான இஸ்லாமியக் கலாச்சார மையத்தில் இஸ்லாத்தை தழுவிக்கொண்டார். அப்போது அவருக்கு வயது **21.** அய்ஷா ஹனியாக இருந்தவர் ஆயிஷாவானர்.

படித்துமுடித்து பட்டம் பெற்ற பிறகு, உயர்கல்வி துறைக்காக ஆங்கிலத்தை தேர்ந்தெடுத்து பயின்ற ஆயிஷாவிற்கு, நைஜீரிய நாட்டின் ஷேக் அஹமது லெமு அறிமுகமாகிறார். வேறு ஒரு கல்லூரியில் பயின்றுவந்த லெமு, இஸ்லாமிய கலாச்சார சென்டரில் அடிக்கடி காணப்பட்டார். அங்கே இஸ்லாமிய கலாச்சாரம் சார்ந்த செயல்பாடுகளில் தம்மையும் ஐக்கியப் படுத்திக் கொண்டிருந்த ஆயிஷா - லெமு இருவருக்குள்ளும் நட்பு மலர்ந்தது. உயர்கல்வி பட்டத்தை பெற்றுக்கொண்ட ஆயிஷா, **1966**ல் நைஜீரியா நாட்டின் கனூவிற்கு குடிப் பெயர்ந்தார்.

ஷேக் அஹ்மத் லெமு, தலைமை யாசிரியராக பணியாற்றும் ஒரு பள்ளிக்கு அரபுக்கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியையாக பணியில் சேருகிறார். **1968**ல் இருவரும் திருமணம் முடித்துக் கொள்கின்றனர். நைஜீரியாவில் சொகொத்தோ நகரின் அரசினர் பள்ளிக்கு தாளாளராக பணியில் சேர்ந்தார் ஆயிஷா.

**1976**ல் நைஜிரியாவில் உருவாக்கப்பட்ட இஸ்லாமிய ஷரிஆ சட்ட வாரியத்தின் தலைமை காதியாக பொறுப்பேற்ற அஹமது லெமு, ஆயிஷா நைஜிரியாவின் மின்னா நகரிலுள்ள முஸ்லிம் பெண்கள் ஆசிரியர் கல்லூரிக்கு தலைமை பொறுப்பேற்றிருந்தார்.

**1978** வரை ஆயிஷாவின் தலைமை பொறுப்பில் தான் பள்ளி இயங்கியது. அதன் பிறகு தம்பதிகள் இருவருமாக இணைந்து இஸ்லாமிக் எஜுகேஷனல் ட்ரஸ்ட் எனும் கல்வி அமைப்பினை தொடங்கி நைஜிரியாவில் ஏராளமான கல்வி நிலையங்கள், பதிப்பகம், நூலகங்கள், பெண்கள் கல்லூரிகள் மற்றும் முதியோர் கல்வி நிலையங்களை தோற்று வித்தனர்.

நைஜீரியாவின் ரிசெர்ச் கவுன்சில் ஆயிஷா லெமுவை ஆயுட்கால உறுப்பினராக தேர்ந்தெடுத்து வருடாவருடம் தேசிய கல்வித்திட்டத்தை சீர்திருத்தி வடிவமைக்கும் பொறுப்பினை வழங்கி கவுரவித்தது.

1985 Federation of Muslim Women's Association in Nigeria (FOMWAN) எனும் இஸ்லாமிய பெண்கள் அமைப்பை உருவாக்கிய ஆயிஷா அதன் தலைவராக தொடர்ந்து நான்காண்டுகள் பணியாற்றினார். அந்த அமைப்பு அவரை "அமீரா" என அழைத்து கவுரவித்தது.





பல்வேறு தலைப்புகளில் 38 புத்தகங்களை உலகிற்கு வழங்கியுள்ள ஆயிஷா லெமுவின் ஞானம் முழுக்க முழுக்க இஸ்லாமிய அறிவினை தேடுவதிலேயே இருந்துள்ளது.

ஆயிஷா எழுதிய இஸ்லாமிய தத்துவவியல் சார்ந்த புத்தகங்கள் இஸ்லாமிக் ஸ்டடீஸ் என உலகம் முழுதும் பிரசுரமாகி இஸ்லாமிய பள்ளி, கல்லூரிகளில் பாடத்திட்டமாக வைக்கப்பட்டுள்ளது. இஸ்லாம் போதித்த ஒழுக்க மாண்புகள், ஷரிஆ சட்டங்கள், அறிவியல் உண்மைகள், தீர்க்கதரிசனங்கள், பொதுவுடைமை கருத்துக்கள் மற்றும் மிருகங்கள், பறவைகள், ஜீவராசிகள் பற்றிய இஸ்லாத்தின் பார்வை என ஒரு துறையை கூட விட்டு வைக்காத ஆயிஷா லெமுவின் புத்தகங்கள் அறிவுப் பொக்கிஷமாக போற்றப்படுகிறது.

இஸ்லாத்தை ஏற்ற காரணமென்ன? என பலமுறை வினவிய போதும் அவர் கூறிய ஒரே பதில்,

“அண்டங்கள் உருவானது எப்படி? அதன் சீர்நிலை இயங்குவது எப்படி? கடவுளின் தன்மை என்ன? போன்ற சிக்கலான கேள்விகளுக்கு பதிலளித்த ஒரே சத்திய மார்க்கம் இஸ்லாம் மட்டுமே என அறிவித்த ஆயிஷா, ஐரோப்பிய மக்களின் மதங்களில்லாம் சுதந்திர வாழ்வு என்பது ஒரு சிறைக்கூடமே, அவர்கள் இருளில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்” என்றார்.

இஸ்லாத்தை தழுவியதில் நீங்கள் சந்தித்த பின்னடைவு யாது என கேட்ட போது?

“எனது பெற்றோருக்கு எந்த மதமும் சம்மதமில்லை எனவே எனக்கு அவர்கள் தடைபோடவுமில்லை. ஒயின் குடிக்காத, பன்றி இறைச்சி உண்ணாத நிலையில் சிலர் என்னை கேலி செய்துள்ளார்கள் அது எனக்கு பெரிய பிரச்சனையில்லை” என்றார்.

இஸ்லாத்தை பரப்ப நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன? என்று கேட்டபோது.

“இஸ்லாம் பரப்பப் படுவதற்கல்ல, கடைபிடிக்கப்படுவதற்கு. தேவ ஊழியம் செய்து பிறரை மதம் மாற்ற செய்ய வேண்டாம். நம்முடைய வாழ்வு நெறிகளை காண்போர் இஸ்லாம் தான் சிறந்தது என உணர்ந்து மதத்தை தழுவ வேண்டும். அவர்களை மட்டுமே இறைவன் தன் அடியாராக சேர்த்துக் கொள்வான்” என்றார்.


இஸ்லாத்தின் பெயரால் தீவிரவாதம் அரங்கேற்றப்படுவதை விரும்பாத ஆயிஷா, சில இஸ்லாமிய இயக்கங்களின் மாற்று நடவடிக்கைகளை கண்டித்தார்.


ஆயிஷா லெமு எழுதிய பல ஆராய்ச்சி மற்றும் சமூக கருத்துக்கள் சார்ந்த புத்தகங்கள் மற்றும் அடிப்படை இஸ்லாமிய கல்வி, ஆரம்ப கல்வியில் இஸ்லாமிய பாடங்கள் போன்ற பள்ளிக் கல்வி நூல்களும் நைஜீரியாவின் மின்னா நகரை தாண்டி உலகின் பல்வேறு நகரங்களில் உள்ள இஸ்லாமிய கல்விச்சாலைகளுக்கும் நூலகங்களுக்கும் அறிவை வளர்க்கும் பொக்கிஷமாக பாதுகாக்கப்பட்டு குழந்தைகளின் ஆரம்ப கல்வி நிலையங்களில் பாடங்களாக போதிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் சில,


**இங்கிலாந்து**


*1971*ல் எழுதப்பட்ட - ஒரு மாணவனின் இஸ்லாமிய அறிமுகம்.

*1976*ல் இஸ்லாமிக் கவுன்சில் ஆப் யூரோப் சார்பாக லண்டனில் நடைபெற்ற இன்டர்நேசனல் இஸ்லாமிக் கான்பிரன்ஸில் ஆயிஷா லெமுவால் பிரசங்கிக்கப்பட்ட “இஸ்லாத்தில் பெண்கள்” என்கிற தொகுப்பு பிறகு பிரசுரிக்கப்பட்டு



லைச்சஸ்டர் மற்றும் மார்க்ஃபீல்டு கிராமங்களில் உள்ள இஸ்லாமிய ஆரம்ப பாடசாலைகளுக்கு கொடுக்கப்பட்டது.

*1978*ல் வால்பியில் இஸ்லாமிய அறிவியல் எனும் நூலை வெளியிட்டார். *1986*ல் ஆயிஷா எழுதிய குர்ஆனின் பாடங்கள் - ஸ்டூட்டன் மற்றும் லண்டன் முஸ்லிம் கல்வி நிலையங்களில் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. *1986*ல் ஜீனியர் குர்ஆனிக் அரபிக் எனும் நூல் ஸ்டுடன் மற்றும் செவன்ஓக்ஸ் ஆகிய இங்கிலாந்தின் பள்ளிகளில் பாடங்களாக உள்ளன.

**அமெரிக்கா: சிகாகோ, விர்ஜீனியா**

*1997*ல் எழுதிய இஸ்லாமிக் தஹ்திப் அண்ட் அக்லாக் எனும் நூலும், *1996*ல் எழுதிய இஸ்லாமிக் அஃகிதா அண்ட் ஃபிக் என்கிற நூலும் இக்ரா - இன்டர்நேசனல் எஜுகேஷனல் ஃபவுண்டேஷன் எனும் பதிப்பகத்தாரால் பதிப்பிக்கப்பட்டு அங்குள்ள கல்வி நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

*1981*ல் எழுதிய இஸ்லாம் அண்ட் ஆல்கஹால் எனும் நூல் அட்வான்ஸ்ட் டீச்சர்ஸ் காலேஜில் ஒரு மிலாது விழாவில் பிரசிங்கிக்கப்பட்டதாகும். *1996*ல் அலக்ஸாண்டிரியாவின் அல்-சாதவி பதிப்பகம் அதனை புத்தகமாக வெளியிட்டது.

**குவைத்: சலீமியா**

*1982* ல் எழுதிய, "எ க்ரிடிகல் லுக் அட் தி தியரி ஆப் எவலூஷன்" எனும் நூலையும், *1983*ல் எழுதிய, "தியரி ஆப் இவலூஷன் இன் இஸ்லாமிக் பெர்ஸ்பக்டிவ்" எனும் நூலினையும் குவைத்தின் இன்டர்நேசனல் இஸ்லாமிக் பெடரேசன் ஆப் ஸ்டூடன்ஸ் ஆர்கனைசேஷன் எனும் அமைப்பு ஆயிஷா நியாஸி என்பவரை கொண்டு அரபியில் மொழிப்பெயர்த்து வெளியிட்டது.

**மலேசியா : பெடாலிங் ஜயா**

*1996*ல் நோய்களுக்கான மருந்து இஸ்லாம் எனும் தாவா நூலை எழுதினார். இன்டர்நேசனல் இன்ஸ்டியூட் ஆப் இஸ்லாமிக் தாட்ஸ் எனும் பதிப்பகம் வெளியிட்டது.

**ஹாங்காங்:**

*1988*ல் எழுதிய இஸ்லாம், எதிர்காலத்தின் மதம் எனும் நூல், தி இஸ்லாமிக் யூனியன் ஆப் ஹாங்காங் பதிப்பகம் வெளியிட்டது.

**துருக்கி: இஸ்தான்புல்**

*2007*ல் சென்டர் ஃபார் வேல்யூ எஜுகேஷன் எனும் பதிப்பகம் வெளியிட்ட டீச்சிங் ஃபார் டாலரன்ஸ் இன் நைஜீரியா மற்றும் டீச்சிங் ஃபார் டாலரன்ஸ் இன் மெஜாரிடி இஸ்லாமிக் சொசைடீஸ் எனும் நூல்களை வெளியிட்டனர்.

**ஜெர்மனி: முனிச்**

*1999*- பெண்களும் குடும்ப வாழ்க்கையும் இஸ்லாமிய பிண்ணனியில் எனும் நூலை அப்துல்லாஹ் ஹம்மாம் என்பவர் ஜெர்மன் மொழியில் மொழிமாற்றம் செய்து இஸ்லாமிக் சென்டர் ஆப் முனிச் எனும் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது.


நைஜீரியா: மின்னா, லாகோஸ், புயூரோ, ஸாரியா ஆகிய நகரங்களில் அவரது சொந்த பதிப்பகமான இஸ்லாமிக் எஜுகேஷனல் ட்ரஸ்ட் சார்பாக வெளியிடப்பட்ட புத்தகங்களாவன:

1979 - Islamic citizenship and moral responsibilities

1979 - Islamic educational trust guidelines

1980- methodology of primary Islamic studies


1983 - A degree above them. Observations on the condition of the northern Nigerian Muslim woman











1983- Tawhid and fiqh. Belief and jurisprudence

1983- Tahdhib (moral education) and Sirah

1987 - The Ideal Muslim Husband , Reissue at Al-Saadawi Publications, 1992.

1988- Islamization of Education. A Primary Level Experiment in Nigeria .

1988- The role of Muslim women in the 15th century Hijrah

1989- Islamic studies for senior secondary schools .

1990- Islamic studies for senior secondary schools . Book 2

1990- Muslim women and marriage under the Shariah rights and problems faced .

1991-Laxity, moderation, and extremism in Islam .

1992-The Ideal Muslim Wife .

1993-Animals in Islam . Spectrum Books,

1994-A holistic approach to teaching Islam to children

2001 - Child upbringing and moral teaching in Islam.

2001- Islam, one God, one humanity

1992 and 2001 - Revelation and the Scriptures. An Islamic perspective.

1996 and 2001- Women in Da'wah.

மேற்கூறப்பட்ட அனைத்து நூல்களும் இன்று பல்வேறு மொழிகளில் மொழிப் பெயர்க்கப்பட்டு அண்டைய நாடுகளுக்கும் பரிசளிக்கப்பட்டவை. இன்று இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளிலும் மலேசிய, இந்தோனேசிய, ஹாங்காங், பிலிப்பைன்ஸ் போன்ற கிழக்காசிய நாடுகளிலும், எகிப்து,துருக்கி, குவைத் போன்ற மத்திய தரைகடல் நாடுகளிலும் ஆயிஷா லெமு தயாரித்த பாடத்திட்டங்களே இஸ்லாமிய பாடசாலைகளில் போதிக்கப்படுகின்றன என்பது பெருமைக்குரிய விஷயமாகும்.

ஆயிஷாவின் அயராது உழைப்பும் அசராத கல்விப்பணியும் கல்லாமையில் உழன்ற இருபதாம் நூற்றாண்டு ஆப்ரிக்க இஸ்லாமிய சமூகத்திற்கு ஞான ஒளி ஏற்றியது என கூறினால் மிகையாகாது.

மலேசியா, இந்தோனேசிய போன்ற கீழ்த்திசை முஸ்லிம் நாடுகளுக்கும் பயணமான ஆயிஷா , தமது அறிவார்ந்த சொற்பொழிவுகள் மூலமும் மக்களின் மனங்களை வென்றெடுத்தவர். இன்றைய அவர்களது கல்விக்கூடங்களுக்கும், மதரஸாக்களுக்கும் இஸ்லாமிய பாடத்திட்டத்தை உருவாக்கித்தந்த பெருமைக்குரியவர்.

கடந்த ஜனவரி 5, அன்று மின்னா நகரில் தமது 79வது வயதில் காலமாகிவிட்ட ஆயிஷா லெமுவின் இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியின் போது நைஜீரிய அதிபர் முஹம்மது புகாரி அவர்கள் கண்ணீர்விட்டு அழுதபடி கூறினார்,

“ஆயிஷா ஒரு அறிவுக்களஞ்சியம். நைஜிரியாவின் கல்வித்தாய், அவரது இறப்பு நைஜிரியர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு” என்றார்...

நைஜீரிய ஷரிஅத் சட்ட வாரியம், பெண்களுக்கான குடும்பவியல் சட்டங்களுக்கான ஆயிஷா லெமுவின் ஆய்வுகளை ஏற்றுள்ளது குறிப்பிடத்தக்கது...

**- உம்மு ஆதில்**

# நன்மையும் தீமையும் மோதும் போது!





டாக்டர். யூசுஃப் அல் கர்ளாவீ

இப்னுதைமிய்யாவின் கருத்துகளிலிருந்து நான் எனது (கர்ளாவீ) நூலில் பதிவு செய்த மற்றொரு விஷயம். இப்னு தைமிய்யா கூறுகிறார்: கட்டாயக் கடமை உள்ளிட்ட எல்லா நற்செயல்களும் பயன்மிக்கவையே. அவற்றை விடுவதால் தீமை விளையும். தீய செயல்கள் அனைத்தும் தீங்கு விளைவிப்பவையே. மக்ரூஹ் எனும் அருவருக்கத்தக்க செயல்களில் (தீங்கு இருக்கும்) சில நன்மைகளும் இருக்கலாம்.

**சூழல்-1**

ஒரே நேரத்தில் இரண்டு நன்மைகளை செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. ஆனால் கிடைக்கும் அவகாசத்தில் ஒரு நற்செயலை மட்டுமே செய்ய இயலும் என்றிருந்தால் அவ்விரண்டில் எது மிக அழகிய செயலோ அதைச் செய்ய வேண்டும். மற்றதைவிட்டு விட வேண்டும். உதாரணமாக கையிருப்பில் உள்ள பணத்தை உபரி தர்மமாக ஏழைக்கு வழங்குவதா? அல்லது வாங்கிய கடனை அடைப்பதா?

இரண்டுமே நற்செயல்தான். எனினும் கடனை அடைப்பதே மிகச் சிறப்பானது. அதையே முதலில் செய்ய வேண்டும். இது கடமை, அது நஃபில் (உபரி) கடமைக்கே முதலிடம். இதுபோல இரண்டு தீமைகளில் ஒன்றை செய்தாக வேண்டிய கட்டாயம் நேர்ந்துள்ள சூழலில் அவ்விரண்டில் எது குறைந்த தீமையோ அதைச் செய்து விட்டு மற்றதை விட்டு விட வேண்டும்.

**சூழல்-2**

ஜிஹாத் ஒரு கடமை சமுதாயத்தின் சார்பில் ஒரு குழு அல்லது ராணுவம் இதைச் செய்தால் போதும் என்ற சூழலில் இது "ஃபர்ளு கிஃபாயா" வாகும். அதாவது சமுதாயத்தின் கடமை.

ஒவ்வொரு முஸ்லிமும் பங்கேற்க வேண்டிய சூழல் நெருக்கடி ஏற்பட்டால் அப்பொழுது அது "ஃபர்ளு அய்ன்" ஆகும். அதாவது ஒவ்வொருவரின் மீதும் கடமை.



மௌலவி இல்யாஸ் ரியாஜி.M.A.,

பாருங்கள், ஜிஹாத் ஃபர்ளு கிஃபாயாவாக இருக்கும் சூழலில் ஒருவர் தம்மிடமுள்ள பணத்தை அதற்காகக் கொடுக்க வேண்டுமா? அல்லது தம் குடும்பத்தினருக்காகவும் பெற்றோருக்காகவும் செலவிடலாமா?

பெற்றோருக்காகவும் குடும்ப நலனுக்காகவும் செலவு செய்வது கட்டாயக் கடமை (ஃபர்ளு அய்ன்) இவர் குடும்பத்துக்கு இவர்தான் செலவு செய்ய வேண்டும்.

ஜிஹாத் "ஃபர்ளு கிஃபாயா"வாக இருக்கும் சூழலில் அதற்கு மற்றவர்களும் பணம் கொடுப்பார்கள் என்பதால் இவர் தம் குடும்பத்தின் செலவுகளுக்கே முதலிடம் தர வேண்டும். இது "ஃபர்ளு கிஃபாயா"வை விட "ஃபர்ளு அய்ன்"க்கே முதலிடம் என்ற அடிப்படையின் கீழ் வரும்.

நபி(ஸல்) அவர்களிடம் ஒருவர் "எந்த (அமல்) வழிபாடு சிறந்தது?" என்று கேட்டார் அதற்கு "தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவது" என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

"பிறகு எது சிறந்தது?" என்று அவர் கேட்டார் "பெற்றோரைப் பராமரிப்பது" என்று நபி (ஸல்)

கூறினார்கள். "பிறகு எது?" என்று அவர் கேட்க, "அல்லாஹ்வின் பாதையில் (ஜிஹாத்) அறப்போர் புரிதல் என்று நபி(ஸல்) பதில் கூறினார்கள்.

கடமையான ஹஜ்ஜை விட கடமையான (அய்ன்) ஜிஹாத் முதலிடம் பெறுகிறது. இதுவே குர்ஆனும் சுன்னாவும் போதிப்பவை.

குர்ஆன் ஓதுவதும், இறைத் துதியில் ஈடுபடுவதும், உள்ளத்தாலும் நாவாலும் செய்யும் வழிபாடு என்ற அளவில் அவ்விரண்டும் ஒரே தரத்தில் இருந்தாலும் கூட குர்ஆன் ஓதுவதே துதியை விட ஏற்றமானது.

உள்ளத்தால் செய்யும் வழிபாடு என்ற அளவில் அவ்விரண்டுக்கும் சமமாக தொழுகை இருப்பினும் கூட தொழுகையில் உடல் உறுப்பும் ஈடுபடுவதால் தொழுகை அவ்விரண்டையும் விட முதலிடம் பெறுகிறது. நாக்கு, உடல் உறுப்பு என்று வெளிப்படையான உறுப்புக்களை ஈடுபடுத்துவதை வைத்து எது ஏற்றமானது என்று நாம் தீர்மானிக்கிறோம். இப்படிக் கவனிக்காமல் உள்ளத்தை மட்டுமே கவனித்து எது ஏற்றமான வழிபாடு என்று தீர்மானித்தால் நாம் ஒரு முடிவுக்கு வர முடியாது.

ஆம், தொண்டைக் குழிக்குக் கீழே சென்று இதயத்தைத் தொடாத ஒரு ஓதலை விட இறைவனைப் புரிந்தும் அஞ்சி நடுங்கியும் செய்யப்படும் திக்ரு (துதி) ஏற்றமானதாக ஆகிவிடும் அல்லவா? இது ஒரு விரிந்து பரந்த தலைப்பு

**சூழல்** - 3

ஒரு செயலில் நன்மையும் தீமையும் இரண்டற ஒன்றெனக் கலந்துள்ளது என்றால் அப்போது என்ன செய்வது? இதற்கு மூன்று உதாரணங்களைக் கூறலாம்.

**உதாரணம்** - 1

முஸ்லிம்களைக் கொல்லத் துடிக்கும் (தாருல் ஹர்பு) தேசத்தில் வாழ இயலாத நிலையில் ஒரு முஸ்லிம் பெண் அந்நாட்டைத் துறந்து ஹிஜ்ரத் (தியாகப் பயணம்) செய்ய முயற்சிக்கிறார்.

ஒருவன் தன் புனித உறவு (மஹ்ரம்) இல்லாத ஆணுடன்தான் வெளியூர் பயணம் செய்திட வேண்டும். மஹ்ரம் (புனித உறவு) இல்லாத ஆணுடனோ அல்லது அவள் மட்டும் தனியாக பயணம் செய்யக் கூடாது. ஹிஜ்ரத் செல்ல வேண்டிய நிர்பந்தத்திலுள்ள இப்பெண்ணுக்கு மஹ்ரமான ஆண் துணை இல்லை. இவள் என்ன செய்வது?

தாருல் ஹர்பு தேசத்தில் தங்கினால் ஈமானுடன் வாழ்வது கடினம். ஹிஜ்ரத் செல்வது என்றால் மஹ்ரமான ஆண் துணை இன்றி செல்வது பாவம். இப்பெண் மஹ்ரமான ஆண் துணையின்றி ஹிஜ்ரத் செல்ல வேண்டும். இப்படித்தான் நபி(ஸல்) காலத்துப் பெண்மணி உம்மு குல்தும்(ரழி) செய்தார். இவருக்காக (60:10) வசனம் இறங்கியது.

ஏனெனில் தாருல் ஹர்பு தேசத்தில் வாழ்வது ஈமானை அல்லது உயிரை இழப்பதைவிட மஹ்ரமான ஆண் துணையில்லாத பயணம் என்ற தீமை தாழ்ந்ததுதான். பெரிய தீங்கிலிருந்து தப்பிக்க சிறிய தீமையை செய்யும் வழி இது.

**உதாரணம்** - 2

எதிரிகள் வலிமை வாய்ந்த கோட்டையினுள் இருக்கிறார்கள். அவர்களின் பெண்கள் சிறுவர்கள், முதியவர்கள், மதத்தலைவவர்கள் ஆகியோரும் உள்ளேதானிருக்கிறார்கள். உள்ளிருந்து கொண்டே அம்பு எறிந்து முஸ்லிம் களுக்கு சேதம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை வழிக்குக் கொண்டு வர வேண்டுமென்றால் ஏவுகணைத் தாக்குதல் நடத்த வேண்டும் அல்லது அவர்கள் அயர்ந்து இருக்கும் போது (கொரில்லா) திடீரெனத் தாக்க வேண்டும். இப்படிச் செய்தால் அவர்களுடைய பெண்கள், சிறுவர், முதியோர், மதத்தலைவர்கள் என அனைவரும் பாதிக்கப் படுவார்கள் என்று இருப்பினும் இப்படித் தாக்குவதே சரி.

ஏனெனில் தாக்காமல் விடுவதால் ஏற்படும் ஆபத்தை விட இந்த ஆபத்து (பாவம்) சிறியது தான். மேலும் நம் நோக்கம் எதிரணியிலுள்ள ராணுவ வீரர்களை சரணடைய வைப்பது தானேயன்று மற்றவர்களைக் கொல்வது அல்ல.

நபி(ஸல்) அவர்கள் தாயிஃப் போரில் எதிரிகளை பணியவைக்க ஏவுகணை தாக்குதல் தான் நடத்தினார்கள்.

**உதாணரம்** - 3

முஸ்லிம்களில் சிலரை எதிரிகள் பிடித்து வைத்துக் கொண்டு அவர்களைப் போர்க்களத்தில் கேடயமாகப் பயன்படுத்துகினறனர். இப்போது இந்த எதிரிகளைத் தாக்காமல் விட்டால் பேராபத்து ஏற்பட்டு விடும். முஸ்லிம்கள் அனைவருக்கும் ஆபத்து.

அதே எதிரிகளிடம் சிக்கி கேடயமாக ஆக்கப்பட்டிருக்கும் முஸ்லிம்களைத் தாக்காமல் எதிரிகளை ஒழிக்க முடியாது என்றிருப்பின் கேடயமாக்கப் பட்டிருக்கும் சில முஸ்லிம்களை இழந்து மொத்த முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் காப்பாற்ற வேண்டும் என்கின்றனர் சட்ட வல்லுநர்கள். இதில் மாற்றுக் கருத்துடையவர்களும் உண்டு.

**சூழல்** - 4

ஒரு தீமையைச் செய்தாக வேண்டிய கட்டம். அதைச் செய்யாமல் விட்டால் ஒரு நன்மையையும்

விட வேண்டிய சூழல். இப்போது என்ன செய்வது? ஒரு நற்செயலை இழந்தாலும் பரவாயில்லை என்று தீமையைச் செய்யாமலி ருப்பதா? அந்த நன்மைக்காக இந்தத் தீமையைச் செய்வதா?

உதாரணமாக, கடும் பசி ஏற்பட்டுள்ள சூழலில் ஹலாலான வேறு உணவு ஏதும் கிடைக்காத போது செத்த பிராணியின் மாமிசத்தை உண்ணலாம். ஏனெனில் பசியைப் போக்கி உயிர் பிழைப்பது கட்டயாக் கடமை. செத்த பிராணியை உண்ணாமல் அது சாத்தியமில்லை எனும் பட்சத்தில் அந்த நன்மைக்காக இந்தப் பாவத்தைச் செய்து விட வேண்டியதுதான். இதை வைத்துக் கொண்டு, மாற்று மருந்து இருக்கும் போது ஆல்கஹால் கலந்த மருந்தை சிகிச்சைக்காக என்று கூறிக்கொண்டு உண்பதை ஏற்க முடியாது.

ஏனெனில் ஆல்கஹால் கலந்த மருந்தால் தான் நோய் குணமாகும் என்று உத்திரவாதம் கூறியது யார்?

இதுபோலவே சிகிச்சைக்காக என்ற பெயரில் மதுக் குடிப்பதும், ஏற்க முடியாது. ஒரு நன்மை நடக்க வேண்டும் என்பதற்காக தீமை செய்யலாம் என்பதன் கீழ் இவை வராது. சுருங்கக் கூறின் இரண்டு சூழல்களில் தீங்கு செய்ய வேண்டியது ஏற்படுகிறது. இரண்டு சூழல்களில் நற்செயல் செய்யாமலிருக்க வேண்டியது ஏற்படுகிறது. இவை முவாசனத் எனப்படும் மார்க்கத்தை சீர்தூக்கிப் பார்க்கும் திறனுடன் தொடர்புடையதாகும்.

மார்க்க ரீதியாகப் பார்த்தாலும் இதில் கருத்து வேறுபாடு இல்லை. இப்படிப்பட்ட முடிவுகளை அறிவும் ஏற்றுக் கொள்கிறது. இப்படி ஒரு பொன்மொழி உண்டு "தீமைகளுக்கு மத்தியில் நன்மை எது என்று கண்டு பிடிப்பவர் அறிவாளி அல்ல. இரண்டு தீமைகளில் எது மோசமான தீமை, இரு நன்மைகளில் எது சிறந்த நன்மை என்று கண்டு பிடிப்பவரே அறிவாளி"

"வெவ்வேறு இரு வியாதிகள் தம் உடலில் வெளிப்படும் பொழுது அவற்றுள் மிகக் கொடிய நோய்க்கே முதலில் சிகிச்சை எடுப்பான் அறிவாளி" என்றொரு கவிதை உண்டு.

இதேபோல இன்னொரு விளக்கமும் இங்குண்டு. இதுவரை நாம் கூறிவந்த விஷயமும் இப்போது கூறப்போகும் விஷயமும் ஒன்றுதான் என்று தோன்றும். ஆனால் உண்மையில் அவ்விரண்டும் ஒன்றல்ல அது வேறு, இது வேறு. சில சங்கடங்கள் ஏற்படும் என்பதற்காக கடமையான வழிபாட்டை விடுவது, ஒரு தேவைக்காக தடை செய்யப்பட்டதைக் கூட செய்வது.

உதாரணமாக, நோன்பு வைத்துக்கொண்டு பயணம் செய்தால் சங்கடம் ஏற்படும் என்பதற்காக நோன்பை விடுவது. உடலில் ஒரு வியாதி இருப்பதால் தொழுகையின் கடமை ஒன்றை (ஸஜ்தா, ருகூவு, நிலை விடுவது அல்லது ஹஜ், உம்ராவுக்கான புனித ஆடை (இஹ்ராம்)யில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளை மீறுவது (முடிவெட்டுதல், நகம் வெட்டுதல், தையல் ஆடை அணிதல்) இப்படிப்பட்ட செயல்களெல்லாம் மார்க்கம் தந்துள்ள அனுமதி. சிரமங்களைத் தவிர்ப்பதற்காக இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாம் முன்னர் கூறிய பிரச்சனை வேறு. இதுவேறு. அதுவும் இதுவும் ஒன்றல்ல. இப்போது மறுபடியும் முதல் விஷயத்தைப் பற்றியே பேசுவோம்.

வறட்சியான நேரத்தில் வான்மழை பொழிந்தால் நிச்சயமாக அது ஓர் அருள். அப்பொழுது பொழியும் மழையால் விளையும் பொருள்களை அநியாயக்காரர்களும் அனுபவித்து பலனும் ஊட்டமும் பெறுகிறார்கள் என்பதற்காக மழை அருள் அல்ல என்று கூறுவதில்லை.

மழை பொழிந்து விவசாயம் செழித்து அதனால் அநீதியாளர்கள் பலனடைந்து அவர்கள் தீங்கிழைப்பார்கள் என்பதை விட மழை பொழியாமலிருப்பது பெரும் தீங்கல்லவா?

இதுபோல "குடிமக்கள் மீது அநியாயங்களை ஏவிவிடும் அரசு இருப்பதை விட அரசு என்று ஒன்று இல்லாமலிருப்பதே மேல் என்கின்றனர் சிலர். அப்படியல்ல, ஆட்சியாளர்கள் என்று ஒருவர் இருக்க வேண்டும். அவர் நீதியற்றவராக இருப்பினும் சரி. ஒரு ஞானி சொன்னார் : ஆட்சியாளர் என்றொருவர் இல்லாமல் ஓர் இரவு கழிவதைவிட அநீதியான ஆட்சியாளருடன் கழியும் அறுபது வருடம் மேலானது.

மக்களுக்கான உரிமைகளை தருவதற்கு வாய்ப்பிருந்தும் தராத தீய அரசன் தனது பாவங்களுக்காக தண்டிக்கப்படுவான். ஆனால் ஆடசியாளன் என்று ஒருவன் இருக்க வேண்டும். இன்னொன்றையும் இங்கே நான் கூற விரும்புகிறேன். அரசனுடைய எல்லாக் காரியங்களுக்கும் அல்லது நீதித்துறை அமைச்சர் பொறுப்பு என்று சில காரியங்களுக்கு ஒரு பிரதிநிதி இருக்கிறார். இந்தப் பிரதிநிதி தனது பொறுப்பை அதற்குரிய முறைப்படி நிறை வேற்ற இயலாமலிருக்கிறார்.

ஆனால் வேறு யாரும் இப்பொறுப்பில் இருந்துகொண்டு செய்ய முடியாதவற்றை இவர் செய்கிறார் என்றால் இவர் இப்பொறுப்பில் தொடர்ந்து நீடிக்கலாம். இவரைப் போன்றவர்கள் இப்பொறுப்பில் இருப்பது கட்டாயக் கடமை என்றும் கூற முடியும்.

இறைத்தூதர் யூசுப்(அலை) அவர்கள் எகிப்து நாட்டு அரசனின் அமைச்சராக (பூமியின் களஞ்சியங்களுக்கு அமைச்சராக அதாவது உணவு



வழங்கல் துறை) இருந்தார்கள். அந்த அமைச்சர் பொறுப்பை கேட்டுப் பெற்றார்கள். கீழ்காணும் இரு வசனங்கள் மூலம் அந்த மன்னரும் அவரின் சமுதாயமும் முஸ்லிம்களாக இருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

**அல்லாஹ் கூறுகிறான்:**

முற்காலத்தில் திட்டமாக யூசுஃப் தெளிவான சான்றுகளுடன் உங்களிடம் வந்தார். அவர் இறந்து விடும் வரை அவர் உங்களிடம் கொண்டு வந்ததைப் பற்றி நீங்கள் சந்தேகத்திலே இருந்தீர்கள் (40:34)

மேலும் யூசுப்(அலை) அவர்கள் தம் சிறைத் தோழர்களிடம் கூறியதை அல்லாஹ் எடுத்துரைக் கிறான்.

என் இரு சிறைத் தோழர்களே! (அனைத்தையும்) அடக்கி ஆளும் ஒரே அல்லாஹ் இருப்பது நல்லதா? அல்லது பல கடவுள் இருப்பதா? அவனையன்றி நீங்கள் வணங்கிக் கொண்டிருப்பவை அனைத்தும் நீங்களும் உங்கள் மூதாதையரும் வைத்துக்கொண்ட வெறும் கற்பனைப் பெயர்கள் அன்றி வேறில்லை.(12 : 39,40)

எனவே அது முஸ்லிம்களின் அரசு அல்ல. மேலும் அவர்களிடம் ஒரு வழக்கம் உண்டு. (மக்களின்) செல்வங்களை எடுத்து அரசரின் நலன்களுக்காகவும் அவரின் குடும்பத்தினர் அவரின் ராணுவம் அவரின் பராமரிப்பின் கீழ் இருப்பவர்களின் நலன்களுக்காகவும் பயன் படுத்தி வந்தனர்.

இது இறைத்தூதர்கள் போதித்த நீதியுமல்ல. அவர்கள் காட்டிய வழியும் அல்ல. இந்த நடைமுறையை எதிப்து நாட்டின் உணவு வழங்கல் துறை அமைச்சராக இருந்தபோது யூசுஃப் நபியால் நீக்க முடியவில்லை. அல்லாஹ்வின் மார்க்கத்தின் படியும் தாம் விரும்பிய படியும் அவர்களால் செயல்பட இயலவில்லை. ஏனெனில் அப்படி அவர்கள் செயல்படுவதை மக்கள் ஏற்கவில்லை.

எனினும் தம்மால் இயன்ற அளவுக்கு நீதியாக நடந்தார்கள். மக்கள் நலனில் அக்கறை செலுத்தினார்கள். அமைச்சராக இல்லாதிருந்தால் தம் குடும்பத்தினர்களான முஸ்லிம்களுக்கு எதையெல்லாம் செய்ய இயலாதோ அதையெல்லாம் அமைச்சராக இருந்ததால் செய்ய முடிந்தது.

யூசுஃப்(அலை) அவர்கள் செயல்பட்ட விதம் உங்களால் முடிந்த அளவுக்கு அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் என்பதன் கீழ் வருகிறது.

அதுபோல இரண்டு கடமைகளை ஒரே நேரத்தில் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. ஆனால் ஒன்றை மட்டும் செய்வதற்குத்தான் நேரமிருக்கிறது என்றால் அவ்விரண்டில் மிக உறுதியாக வலியுறுத்தப் பட்டிருக்கும் கடமையைச் செய்திட வேண்டும். இதைச் செய்வதற்காகவே மற்றொன்றை விட்டிருக்கிறார் என்பதால் இவர் (வாஜிபை) கடமையை விட்டவராக ஆக மாட்டார்.

இதேபோல தடை செய்யப்பட்ட இரு விஷயங்களில் ஒன்றைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் மிகக் கடுமையாக எச்சரித்துத் தடை செய்ப்பட்டதையே விட வேண்டும். அதாவது கொடியதைச் செய்ய வேண்டும். மிகக் கொடியதை விட்டு விட வேண்டும்.

உண்மையில் இவர் ஒரு பாவத்தைச் செய்து விட்டாலும் கூட அதனால் குற்றம் ஏற்படாது. இப்படி முரண்பட்டு நிற்கும் சூழல்களைப் பற்றிப் பேசினால் நீண்டு கொண்டே போகும். நன்மையும், நன்மையும் மோதும் சூழல், தீமையும் தீமையும் மோதும் சூழல் என்பதான இச்சூழல்களெல்லாம் எப்போது ஏற்படும் தெரியுமா?

நபித்துவத்தின் தடயங்களும் கிலாஃபத் எனும் நல்லரசின் தடயங்களும் மெல்ல மெல்ல அழிந்துவரும் காலக் கட்டங்களிலும், நாடுகளிலும்தான் ஏற்படும். இப்படிப்பட்ட சூழல்கள் ஏற்படுவது முஸ்லிம் சமுதாயத்தில் குழப்பம் ஏற்படுவதற்கான காரணங்களுள் ஒன்று.

(ஒரு பொருளில், ஒரு காரியத்தில்) நன்மைகளும் தீமைகளும் கலந்து விரவியிருந்தால் குழப்பம் தான் ஏற்படும். சிலர் அதிலுள்ள நன்மைகளைப் பார்த்து அதை அனுமதிக்கலாம் என்பர். சிலர் அதிலுள்ள தீமைகளைப் பார்த்து அதை அனுமதிக்கக் கூடாது என்பர்.

அனுமதிப்பவர்கள் அதில் உள்ள தீமைகளுடனேயே அனுமதிக்கின்றனர். கூடாது என்பவர்கள் அதிலுள்ள நன்மைகளுடனேயே கூடாது என்கின்றனர்.

நடுநிலையாளர்கள் இரண்டுக்கும் நடுவே நிற்கிறார்கள். (நபிமார்கள் காட்டிய வழித் தடத்தில் அமையும் கிலாஃபத் எனும் இஸ்லாமிய அரசு இல்லாத நாட்டிலும் இல்லாத காலத்திலும் தான் இதுபோன்ற குழப்பங்கள் ஏற்படும். இஸ்லாமிய அரசு இருந்தால் தீமைகளைச் செய்திட வேண்டிய நிர்பந்தம் எதுவும் இருக்காது. நற்செயல்கள் செய்திட எந்தத் தடையும் இருக்காது என்கிறார் இப்னு தைமிய்யா)

**மார்க்க அறிஞரின் பணி என்ன?**

இந்த வகையிலான சட்டப் பிரச்சனைகள் குறித்து ஒரு மார்க்க அறிஞர் நன்றாகச் சிந்திக்க வேண்டும். ஒரு கடமையைச் செய்யாமலிருப்பது கூட மன்னிக்கப்படும் தவறாக ஆகிவிடும். இதற்கு ஒரு உதாரணத்தைப் பாருங்கள்.

ஒரு நன்மையான காரியத்தை செய்யச் சொல்லி (அம்ரு பில் மஅரூப்) மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தால் ஒரு பயங்கர பாவம் ஏற்பட்டு விடும். அந்தப் பாவம் பிரச்சாரத்தால் ஏற்படும் நன்மையை விட பெரியதாகிவிடும் என்றிருந்தால் நன்மையை ஏவும் இந்தக் கடமையை விட்டு விட வேண்டியதுதான்.

உதாரணமாக அநியாயக்கார ஆட்சி நடைபெறும் ஒரு நாட்டில் ஒரு குற்றவாளியை அரசிடம் பிடித்துக் கொடுத்தால் அவனை அரசு குற்றத்துக்கேற்ற தண்டனையை விடக் கூடுதலாக தண்டித்து விடும் என்ற சூழலில், அவனை அரசிடம் ஒப்படைக்காமல் இருக்க வேண்டும்.

இது பாவத்தை அனுமதிக்கும் செயலோ தண்டனையைத் தள்ளுபடி செய்யும் செயலோ அல்ல. இதேபோல சில தீமைகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தால் மிகப்பெரிய நல்லது ஒன்றை இழக்க நேரும் என்றால் அந்த தீமைகளுக்கு எதிரான பிரச்சாரத்தை விட வேண்டும் என்கிறார் அறிஞர் இப்னு தைமிய்யா. (நூல் : இப்னுதைமிய்யாவின் ஃபத்வா தொகுப்பு)


இறைவனின் அழகியத் திருப்பெயரால்

நியூ மலேஷியா டிராவல் சர்வீஸ்

பதிவு எண் : 2015/33/018/10098/ANSP
அரசு அங்கீகாரம் பெற்றது



ஹிமை: S.B.S. பஷீர்

•பாஸ்போர்ட் ஆன்லைன்
•விமான டிக்கெட்
•விசா சர்வீஸ்
•ECNR & PCC
•எம்பஸி அட்டெஸ்டட்
•GCC மெடிக்கல் சர்வீஸ்

ECR நீக்கி ECNR மாற்றிட

கிளை அலுவலகம்:
12, களைமகள் வீதி, MRF டயர்ஸ் பின்புறம்)
7வது குறுக்குத் தெரு,சுப்பையா நகர்,
பாஸ்போர்ட் அலுவலகம் அருகில்,
புதுச்சேரி - 605001.
செல்: 9894303789 | 9445907389

68, பெரிய கடை தெரு, பரங்கிப்பேட்டை,
கடலூர் மாவட்டம் - 608502
E mail ID: newmalaysiapno@gmail.com |Web : www.newmalaysiatravelservice.com

தொலைப்பேசி:
04144 243267
04144 243440

செல்:
7708803789
7708503789

# வாக்குப்பதிவு இயந்திரம்

# ஹேக்கர் மீது புகார்!



வாக்குப்பதிவு இயந்திரத்தை ஹேக் செய்ய முடியும் என்று குற்றம்சாட்டிய சைபர் நிபுணர் மீது டெல்லி காவல் துறையில் தலைமை தேர்தல் ஆணையம் புகார் அளித்துள்ளது.

கடந்த 21ஆம் தேதி லண்டனில் ஐரோப்பாவுக்கான இந்தியப் பத்திரிகையாளர் சங்கம் சார்பில் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அதில் ஸ்கைப் மூலம் அமெரிக்காவில் வசிக்கும், இந்திய சைபர் நிபுணரான சையத் சுஜா கலந்து கொண்டு பேசினார். அப்போது 2014ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குப்பதிவு இயந்திரத்தில் முறைகேடு நடந்ததாகக் குற்றம்சாட்டியிருந்தார்.

2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் சையத்தின் குற்றச்சாட்டு இந்திய அரசியலைச் சூடுபிடிக்க வைத்துள்ளது. இந்திய வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடு செய்ய முடியும் என்று தெரிவித்த சையத் ஹைதராபாத்தில் செயல்பட்டு வரும் இந்திய எலெக்ட்ரானிக் கார்ப்பரேஷன் நிறுவனத்தில், 2009-14ஆம் ஆண்டு காலகட்டத்தில் வாக்குப்பதிவு இயந்திரம் வடிவமைக்கும் துறையில் பணியாற்றியதாகக் குறிப்பிட்டிருந்தார். அந்தச் சமயத்தில் வாக்குப்பதிவு இயந்திரத்தை ஹேக் செய்ய முடியுமா என்று ஆய்வு செய்ததாகவும், அதில் ஹேக் செய்ய முடியும் என்று நிரூபித்ததாகவும் சையத் கூறியிருக்கிறார். 2014ஆம் ஆண்டு விபத்து ஒன்றில் உயிரிழந்த பாஜகவைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சரான கோபிநாத் முண்டேவை 2013இல் சந்தித்ததாகவும், அவருக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் ஹேக் செய்யப்படுவது குறித்துத் தெரிந்ததாலே அவர் கொல்லப்பட்டதாகவும் குற்றம்சாட்டியிருந்தார்.

பாஜகவைத் தாண்டி சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ், ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகளும் வாக்குப்பதிவு இயந்திரத்தை ஹேக் செய்ய தன்னை அணுகியதாகவும், இயந்திரம் ஹேக் செய்யப்பட்டதால் தான் காங்கிரஸ் 201 இடங்களில் தோற்றது எனவும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், வாக்குப்பதிவு இயந்திரங்களை முடக்கி, விருப்பப்பட்டவருக்கு வாக்களிக்கச் செய்யும் எந்த முயற்சியும் இந்திய வாக்குப்பதிவு இயந்திரங்களில் இல்லை என்று கூறிய தலைமை தேர்தல் ஆணையம் லண்டன் நிகழ்ச்சி பற்றி சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தது.

அதன்படி நேற்று (ஜனவரி 22) டெல்லி காவல் துறையில் புகார் அளித்துள்ளது. அதில் லண்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்திய வாக்குப்பதிவு இயந்திரம் குறித்து தவறான தகவலை பரப்பியவர்கள் மீதும், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் தவறான குற்றச்சாட்டுகள் பரப்பப்படுவதாகவும் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே அரசியல் கட்சிகள் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்ட தொடங்கியுள்ளன. லண்டன் நிகழ்வில், காங்கிரஸ் எம்.பி கபில்சிபல் பங்கேற்றார். இவரது பங்கேற்பும் தற்போது, சர்ச்சையாகியிருக்கிறது.


மத்திய சட்டத் துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் இது காங்கிரஸால் ஏற்பாடு செய்த நிகழ்ச்சி என்றும், நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் ஆஷிஷ் ராய் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்திக்கு வேண்டப்பட்டவர் என்றும் தெரிவித்துள்ளார். கபில்சிபல் லண்டன் நிகழ்ச்சியில் என்ன செய்து கொண்டிருந்தார் என்றும் கேள்வி எழுப்பியிருந்தார்.

வாக்குப்பதிவு இயந்திரத்தின் மீது எழுப்பப்பட்டிருக்கும் சந்தேகத்தை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டியது இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கடமை என பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதி வலியுறுத்தியிருக்கிறார்.

2014ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பாஜக 543 இடங்களில் 282 இடங்களில் வெற்றி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கபில்சிபல் விளக்கம்

தன் மீதான பாஜகவின் குற்றச்சாட்டுக்கு விளக்கமளித்துள்ள கபில்சிபல், லண்டனில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பாஜக உட்பட அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. தேர்தல் ஆணையத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் ஆஷிஷ் ராய் அழைப்பின் பேரிலே லண்டன் சென்றதாகவும் தெரிவித்துள்ளார்.



சையத் சுஜா குற்றச்சாட்டுகளைப் பற்றி கருத்துத் தெரிவித்த கபில்சிபல்,

“இது எனக்கு ஒரு விஞ்ஞான கற்பனை கதையாகத்தான் தெரிகிறது. எனினும் அதைச் சரிபார்க்க வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.


“அதாவது, முக்கியமான ஒரு விவகாரத்தின் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டு சரியோ, தவறோ... அதுகுறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். சையத் கூறிய குற்றச்சாட்டு தவறு என்றால், அவர் மீது நடவடிக்கை எடுங்கள். அவர் கூறியது சரி என்றால், அது மிகவும் முக்கியமான பிரச்சினை” என்று தெரிவித்தார்.

நன்றி

**மின்னம்பலம்** - 23, ஜனவரி 2019

# மின்னணு வாக்கு இயந்திரங்கள்

## செய்யித் சுஜாத் - இன் நியாயங்கள்




*செய்யத் சுஜாத் என்ற மின்னணு இயந்திர நிபுணர் சொல்வதையெல்லாம் பொய் என்றும் புரட்டு என்றும் எளிதில் புறந்தள்ளி விடுகின்றார்கள். அவர் பக்கத்திலுள்ள நியாயங்களை யாரும் கவனிப்பதில்லை.*


*அவர் பக்கத்திலுள்ள நியாயங்கள்*

*1. அவர் மின்னணு வாக்கு இயந்திரத்திலுள்ள இரகசியங்களை வெளியிட்ட போது அவர் குறிப்பிட்ட பத்திரிகையாளர்களை மட்டும் அழைக்கவில்லை. எல்லாப் பத்திரிகையாளர்களையும் தான் அழைத்துள்ளார். இதில் இந்துத்துவாவைச் சார்ந்த பத்திரிகையாளர்களும் உண்டு. இதில் வலதுசாரிகள் பலரும் கலந்து கொண்டார்கள்.*

*2. எல்லா அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களையும் அழைத்திருந்தார். சங்கப்பரிவாரத்தின் பாரதீய ஜனதா கட்சியையும் அழைத்திருந்தார்.*

*3. அண்மையில் நடந்த ஐந்து மாநில தேர்தல்களில் ஹிந்தி மொழியின் மார்பிடம் என்ற இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், சத்திஸ்கர் ஆகிய மாநிலங்களில் பாசிச பாரதீய ஜனதா கட்சித் தோற்றுப் போயிருக்கின்றது. அங்கே EVMS என்ற மின்னணு வாக்கு இயந்திரங்கள் தகிடுத்தத்தங்களுக்கு உள்ளாக்கப்படவில்லையா? என்ற வினாவிற்கு உணமையில் முயற்சிகள் நடந்தன ஆனால் நாங்கள் அதை தவிர்த்து விட்டோம் என்றார். ஆனால் இந்த மாநிலங்களிலும் மின்னணு வாக்கு இயந்திரங்கள் தகிடுதத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டன. ஒரு எண் இல்லா வாகனத்தில் வைத்து வாக்கு இயந்திரங்களில் தகிடுதத்தங்களை செய்துக் கொண்டிருந்தார்கள் என்றும் ஒரு ஓட்டலில் வைத்து செய்துக் கொண்டிருந்தார்கள் என்றும் தி இந்து ஆங்கில நாளிதழ் செய்திகளை வெளியிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அந்த முயற்சியில் அவர்களால் வெற்றி பெற இயலவில்லை என்கின்றார் செய்யித் சுஜாத். இதுவே 2015 டெல்லி தேர்தலிலும் நடந்தது என்கின்றார். ஆனால் பாரதீய ஜனதா கட்சியின் தகிடு தத்தங்களை நாங்கள் தடுத்துவிட்டோம். இல்லையென்றால் ஆம் ஆத்மிக்குப் பதிலாக பாரதீய ஜனதா கட்சிதான் அதிகமான இடங்களைப் பெற்றிருக்கும். என விளக்கம் சொல்லியிருக்கின்றார்.*

*4. 2014* தேர்தலின் போது வாக்கு இயந்திரங்களில் நடந்த இந்தத் தகிடுதத்தங்களைத் தெரிந்தவர்கள் அனைவரும் கொலை செய்யப்பட்டு விட்டார்கள். இதில் கோபிநாத் மூண்டே என்ற மத்திய அமைச்சரும் ஒருவர். இவர் மர்மமான முறையில் ஒரு விபத்தில் இறந்தார். அவரது மரணம் கொலையா? அல்லது விபத்தா? என்பது குறித்த ஐயங்கள் அப்போதே எழுப்பப்பட்டன. ஆனால் இந்த பின்னணியில் தன் ஜீல் அஹ்மத் என்ற காவல்துறை அதிகாரி இந்த வழக்கை விசாரித்துக் கொண்டிருந்தார். அவரும் கொலை செய்யப்பட்டார்.



5. செய்யித் சுஜாத்தையும் கொலை செய்திட முயற்சிகள் நடைபெற்றன. அதனால் அவர் அமெரிக்காவுக்குப் புகலிடம் தேடி சென்று விட்டார். செய்யித் சுஜாத் இந்தியாவிலுள்ள மிகவும் பிரபல்யமான தொலைகாட்சி செய்தியாளரிடம் சில நாட்களுக்கு முன்னரே மொத்த விவகாரத்தையும் விளக்கமாக விளக்கி இருக்கின்றார். ஆனால் அவர் தொலைக்காட்சியில் ஒரு வரிக்கூட பேசிடவில்லை. எனக் குற்றம் சாட்டுகின்றார் செய்யித் சுஜாத்.(எந்த தொலைக்காட்சியைச் சார்ந்தவர் என்பதை அவர் குறிப்பிடவில்லை)

6. மின்னணு வாக்கு இயந்திரங்களில் தகிடுதத்தங்களைச் செய்திட 9 மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன என்ற தகவலையும் தந்திருக்கின்றார்.

7. இப்போது பாரதீய ஜனதா கட்சியின் பதவிகாலம் முடிந்துவிட்ட நிலையிலும் தேர்தல் ஆணையம், பா.ஜ.க. இவையெல்லாம் அடையும் பதற்றத்தைப் பார்க்கும் போது செய்யித் சுஜாத்தின் கூற்றில் உண்மைகள் இருக்கின்றன என்றே படுகின்றது.

8. பத்திரிகைகளில் செய்திகளைச் சொல்லுபவர்கள் வீரமங்கை கவுரிலங்கேஷ் கொலை செய்யப்பட்டதற்கு இதுவே காரணம் என செய்யித் சுஜாத் சொன்னதாகக் கூறுகின்றார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. செய்யித் சுஜாத் சொன்னதெல்லாம் கவுரி லங்கேஷ் அவர்களிடம் இந்தத் தகவல்களைத் தந்தேன். அவர்கள் அதைப்பற்றி எழுதுவதற்குள் அவரை கொலை செய்து விட்டார்கள் என்பதே! வீரமங்கை கவுரி லங்கேஷ் கொலை செய்யப்பட்டதற்கு இதுதான் காரணம் என அவர் கூறிடவில்லை.

இப்போது *27.01.2019 -* இல் மோடி தேர்தல் ஆணையம் சிறந்த முறையில் தேர்தலை நடத்தியுள்ளது இந்த சந்தேகங்களை ஊர்ஜிதப்படுத்துகின்றன.

தகவல்கள் ஆதாரம் : Sabrang Communication
January 2019

**- எம்.ஜி.எம்**


**முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான்**

# நூருத்தீன் ஸங்கி(ரஹ்)

**தொடர் இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் இடம் பெறும்**

# தோற்றுப்போன பாதையை

ஜனநாயகம் தோற்றுப் போய்விட்டது! இந்த உண்மையை மக்கள் ஏற்றுக் கொண்டே வருகின்றார்கள்.

அண்மையில் EVMS என்ற மின்னணு வாக்கு இயந்திரங்கள் பற்றி வெளிவந்த உண்மைகள் ஜனநாயகத்தின் மேல் இருந்த மிச்சம் மீதி நம்பிக்கையையும் தவிடுபொடி ஆக்கிவிட்டன. மின்னணு வாக்கு இயந்திரத்தில் செய்த குளறு படிகளால் தான் மோடி ஐந்தாண்டுகள் ஆட்சி செய்திருக்கின்றார்.

கடந்த ஐந்து, ஆண்டுகளாக இந்தியா ஒரு காட்டுத் தர்பாரைச் சந்தித்து வருகின்றது. இந்தக் காட்டுத் தர்பாரை ஆட்சியில் – அதிகாரப் பீடத்தில் அமர வைத்தது மின்னணு வாக்கு இயந்திரத்தில் நடந்த குளறுபடிகள் தாம் என உரக்க முழங்கி இருக்கின்றார் செய்யத் ஷுஜாத் என்பவர். இவர் இத்துறையுலுள்ள ஒரு நிபுணர்.

பொய் – கோலோட்சி கொடுங் கோண்மைகளை கட்டவிழ்த்து விட்டு நாட்டை நாசப்படுத்திய பின் உண்மை படிதாண்டி வெளிவரத் தொடங்கியுள்ளது.

இந்த ஐந்து ஆண்டுகளில் இந்த உண்மையைத் தெரிந்த 11 பேர், கொலை செய்யப்பட்டுள்ளார்கள். மத்திய அமைச்சர் கோபிநாத் முண்டேயும் ஒருவர். இந்த உண்மையை உலகுக்குச் சொன்ன செய்யித் சுஜாத் உயிருக்குப் பயந்து அமெரிக்காவில் புகலிடம் தேடியுள்ளார்.

மின்னணு வாக்கு இயந்திரங்களின் குளறுபடிகளை வைகறை வாசகர்களுக்குத் தொடக்க நாள் தொட்டே தெளிவுபடுத்தி வருகின்றோம். அதே போல்தான் இந்த ஜனநாயகம் என்ற தத்துவம் உலக அளவில் தோற்றுப்போன ஒரு தத்துவம் என்பதையும் நாம் நீண்ட நாட்களாகவே தெளிவுபடுத்தி வருகின்றோம். அதில் முத்தாய்ப்பாக நாம் வெளியிட்ட விரிவான விளக்கம் – வைகறை வெளிச்சம் அட்டைப்படக் கட்டுரை. இஸ்லாமிய ஆட்சியும் மக்களாட்சியும். ஜனநாயகம் இன்றைய இந்தியாவில் பெரும்பாண்மையினர் செய்யும் பட்டப்பகல் படுகொலைகளைக் கேட்பாரில்லை என்ற அளவுக்கு போய்விட்டது. MAJORITARIANISM – பெரும்பாண்மை குரூரம் என்றாகிவிட்டது. TH: 25/01/2019

எண்ணிக்கை பலத்தால் தான் ஆட்சி அமைக்கப்பட வேண்டும். மனித வாழ்வை வழி நடத்தும் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் அதுவே நன்மை பயக்கும் என்றிருந்திருந்தால் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் விரிவாக வழிகாட்டிய இறைவன் இதையே நமக்கும் கட்டாயமாகவும் கடமையாகவும் ஆக்கித் தந்திருப்பான். ஆனால் எண்ணிக்கை பலத்திற்கு எதிராகத்தான் நம்மை எச்சரித்தான் இறைவன்.

உலகில் ஜனநாயகத்தின் காவலன் எனக்கூறிடுவோர் அமெரிக்காவில் நடப்பிலிருப்பது வெள்ளைக் கிருஸ்தவ ஜனநாயகம் என்கின்றார்கள். அதேப்போல் இந்திய ஜனநாயகம் எல்லோரும் இந்துக்கள் என்ற பாணியிலேயே செயல்படுகின்றது. என்று பல ஆண்டுகளாக சமூக போராளி வி.டி. இராஜசேகர் கூறி வந்தார்கள். இந்து மகாசபையினர் நம் நாடு விடுதலை அடைந்த நாட்களில் காங்கிரஸ் – ஐ கைப்பற்றி ஆட்டம் போட தொடங்கினார்கள் 1921 முதலே பிரிவினையை பரப்பினார்கள்.

இதனை தொடக்க நாள் தொட்டே ஆராய்ந்தறிந்த முஸ்லிம் அறிஞர்களும் ஏனையோரும் கண்டித்தார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சி அவர்களுக்குத் தாராளமாக இடம் கொடுத்தது. (Source: MUSLIMS AGAINST PARTITION OF INDIA - PHOROS MEDIA)

முஹம்மது அலி ஜின்னா அவர்கள் சுதந்திர இந்தியாவில் உங்களுக்கு மூன்று ஓட்டு கிடைத்தால் எங்களுக்கு ஒரு ஓட்டுதான் கிடைக்கும் ஒரு ஜனநாயக நாட்டில் மூன்று ஓட்டுகளுக்கெதிராக ஓர் ஓட்டு ஒன்றையும் சாதித்துவிடாது என்றார்கள். அதனால் சதா சர்வ காலமும் நாங்கள் உங்கள் தயவிலேயே வாழ்ந்திட வேண்டும் என எச்சரித்தார்கள். அதுதான் இன்றளவும் நிலை.

அதனால் தான் அன்று ஜின்னா அவர்கள் சிறுபான்மையினருக்கான எல்லா உரிமைகளையும் அரசியல் சாசனத்தில் எழுதிட வேண்டும். அதில் எந்த நிலையிலும் அரசோ, நாடாளுமன்றமோ, நீதிமன்றங்களோ தலையிடக்கூடாது என்ற உத்திரவாதத்தையும் வழங்கிட வேண்டும் வழங்கப்படும் உரிமைகள் பிடுங்கப்படுமேயானால் அதனைத் தீர்த்து வைக்கும் நீதிமன்றங்களாக பிரித்தானிய நீதிமன்றங்களே இருக்க வேண்டும் என்றார். இவையெல்லாம் ஏற்றுக்கொள்ளப்படுமேயானால் தனி நாடு என்ற கோரிக்கையைக் கைவிடத் தயாராக இருப்பதாகவும் கூறினார். கேபினட் மிஷன் பிளானுக்குப் பின் கைவிடவும் செய்தார். ஆனால் இந்த நாட்டை தங்களுக்கென வைத்துக் கொள்ள வேண்டும் என விரும்பிய காங்கிரஸில் ஊடுருவிய இந்து மகா சபையினர் தனி நாடு கோஷத்தை ஜின்னாவுக்கு முன்னரே எழுப்பி அதனை வளர்த்து இறுதியில் இந்தியாவை பிரித்தும் வைத்தார்கள். நாட்டைத் துண்டாடினார்கள். (Source: Partiton The Legend and Reality by H.M. Seervai)

# தூக்கிப் பிடிப்பானேன்?

பிற்றை நாட்களில் நிலைமை மிகவும் மோசமானது. மெத்த சிரமங்களுக்குப் பிறகு வரையப்பட்ட இந்திய அரசியல் சாசனத்தில் சிறுபான்மையினரின் உரிமைகள் வரையறுக்கப்பட்டன. அவை அடிப்படை உரிமைகள் அட்டவணையில் இணைக்கப்பட்டன.

இந்த அடிப்படை உரிமைகளில் யாரும் எந்த நிலையிலும் தலையிட கூடாது என உத்திரவாதம் வழங்கப்பட்டது. எடுத்துக்காட்டாக அடிப்படை உரிமைகள் 25-30 வரை உள்ள அரசியல் சாசன பிரிவுகள். ஆனால் அவை அனைத்தும் காற்றிலே பறக்க விடப்பட்டன. இன்று அவை ஒவ்வொன்றாகப் பிடுங்கப்பட்டு வருகின்றன. இப்படிச் சிறுபான்மையினர் உரிமைகள் பறிபோகும்போது நீதிமன்றங்கள் அவற்றைப் பாதுகாக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்திய ஜனநாயகம் ஒருதலைப்பட்சமாக ஆகிவிடாமல் நமது நீதிமன்றங்கள் பார்த்துக் கொள்ளும் என்ற உத்திரவாதமிருந்தது. ஆனால் அந்த உரிமைகளைப் பறிக்கும் கேந்திரங்களாக நீதிமன்றங்கள் இருந்தன. காலப்போக்கில் நீதிமன்றங்களின் மேல் இருந்த இறுதி நம்பிக்கையும் தகர்ந்தது.

இந்தியாவில் நீதிமன்றங்களின் வழி நீதியைத் தழைக்கச் செய்ய முடியும், ஜனநாயகத்தையும், மதச்சார்பின்மையையும் தக்க வைக்க முடியும் என உயிரைப் பணயம் வைத்துப் போராடிய டீஸ்டா செட்டல்வாட்டை போன்றவர்கள் விரக்தி வயப்பட்டு நிற்கின்றார்கள்.

ஏன் டீஸ்டா செட்டல்வாட்டையே பொய் வழக்கில் சிக்க வைத்தார்கள். நீதிமன்றங்களின் வழி நீதியைப் பெற்றுவிடலாம், ஜனநாயகத்தின் மேல், மதசார்பின்மையின் மேல், மக்களின் நம்பிக்கையை உறுதிபடுத்திடலாம் என்றெல்லாம் போராடிய அந்த வீரமங்கை தான் எப்போது வேண்டுமென்றாலும் கைது செய்யப்படலாம் என்ற கையறு நிலைக்குத் தள்ளப்பட்டார். ஆனாலும் தான் தொடுத்த பெரும் போரைக் கைவிடவில்லை.

பாபரி மஸ்ஜித் வழக்கில் அலஹாபாத் நீதிமன்றம் தந்த தீர்ப்பு மிச்சம் மீதி இருந்த நம்பிக்கைகளையும் தகர்த்துத் தவிடு பொடியாக்கி விட்டது. மோடி பொறுப்பேற்றப்பின் உச்ச நீதிமன்றம் இந்துத்துவ பேரவையாக ஆகிப்போனது. இனி என்ன எதிர்பார்ப்பதற்கிருக்கின்றது? இந்த முடிவுக்கு 1992 - இல் பாபரி மஸ்ஜித் தகர்க்கப்பட்ட போதே முஸ்லிம்கள் வந்து விட்டார்கள். ஆக ஜனநாயகம் தோற்றுபோன பின் இருப்பது ஒரு வழிதான். அது இஸ்லாம் வழங்கிய வழிகாட்டுதல்கள் தாம். இந்த வழிகாட்டுதல்களை வழிமுறையாகக் கொண்டவர்கள் ஆட்சியில் அமர்ந்திட வேண்டும்.

அதனால் தான் (கலீஃபா) இஸ்லாமிய ஆட்சித் தலைவர் உமர் பின் அல் கத்தாப்(ரழி) போன்ற ஒருவர் ஆட்சியில் அமர்ந்திட வேண்டும். அவர் சர்வதிகாரியாக இருந்தாலும் சரியே என காந்திஜி அவர்கள் விரும்பினார்கள். காரணம் அவர் இறைவனின் தண்டனைகளுக்கு அஞ்சி மக்களை பரிபாலித்தார். நீதியை நிலை நாட்டினார். அதன் மூலம் எல்லா மத நம்பிக்கை கொண்ட மக்களையும் நிம்மதியாக வாழ வைத்தார்.

“என் ஆட்சியின் கீழ் ஓர் ஆட்டுக்குட்டி இறந்து கிடந்தாலும், நான் இறைவனிடம் பதில் சொல்லிட வேண்டும்” எனப் பிரகடனப்படுத்திய உலகின் முதல் ஆட்சியாளர்.

இந்தப் பொன்னரிய வழிகாட்டுதலை கைவரப்பெற்றவர்கள், இந்த நிலையான ஆட்சியை இங்கே கொண்டு வந்திட வேண்டும். ஆனால் அவர்களோ வேறு திசைகளை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

***அல்லாஹ் பிரகடனப்படுத்துகின்றான்;***

***பூமியில் உள்ளவர்களில் பெரும்பாலோரை நீர் பின்பற்றுவீரானால் அவர்கள் உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டு வழிகெடுத்து விடுவார்கள். (ஆதாரமற்ற) வெறும் யூகங்களைத்தான் அவர்கள் பின்பற்றுகிறார்கள் இன்னும் அவர்கள் (பொய்யான) கற்பனையிலேயே மூழ்கிக்கிடக்கிறார்கள். (அல்குர்ஆன்:6:116)***

இந்த இறைவழியைத் தவிர்த்து ஏனைய எல்லா வழிகளும் நம்மை நீதியின் பக்கமோ, வெற்றியின் பக்கமோ இட்டுச் செல்லாது. ஆகவே இந்தப் பாதையில் தான் நாம் பயணம் செய்ய வேண்டும். நிறைய கூட்டம் சேருகின்றது என்பதனால் பாதை மாறி பயணம் செய்வதை விட, சரியான பாதையில் தனித்தே செல்வது சிறந்தது.

# தேர்தலும் தோற்றுப்போகும் மக்களும்!



கடந்த பல மாதங்களாக நாம் நமது வைகறை வெளிச்சத்தின் மூலம் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு சமூக விழிப்புணர்வு எது என்று பார்த்தால் வாக்காளர் பெயர் நீக்கமும் வாக்கு இயந்திரம் மோசடியுந்தான்.

தமிழகத்தில் முஸ்லிம் வாக்காளர்கள் பெயர் நீக்கப்பட்டதை அறிந்து ஆலிம்களின் துணையுடன் மக்களிடம் பெறும் விழிப்புணர்வு ஏற்படுத்த முடிந்தது. பல மக்கள் தங்கள் பெயர் விடுபட்டு இருப்பதை அறிந்து அதனை மீண்டும் சேர்த்த வண்ணம் இருந்தார்கள். நாடாளுமன்ற தேர்தலுக்கு இன்னும் குறைந்த நாட்களே இருக்கும் நிலையில் கூட வாக்காளர் இறுதி பெயர் பட்டியல் மட்டும் இன்னும் வெளிவராமல் இருப்பது சந்தேகமாக இருக்கிறது.

தாமதமாகும் இந்த நேரத்தில் செய்தித்தாள்களில் வந்து கொண்டிருக்கும் செய்தி என்னவென்றால் போலி வாக்காளர்கள் அதிகமாக சேர்க்கப்பட்டு விட்டதாகவும் அதனை கண்டறிந்து நீக்குவதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறது என்பவையாகும்.

ஒருவேளை நாடாளுமன்றத் தேர்தல் சில நாட்களுக்கு முன்பு வாக்காளர் பெயர் பட்டியல் வெளியாகி அதில் நீக்கப்பட்ட முஸ்லிம் பெயர்கள் சேர்க்கப்படவில்லை என்றால் என்ன செய்வது?

பாசிசம் எந்த அளவிற்கு அதிகாரத்தை கைப்பற்ற துடிக்கும் என்பதற்கு நடந்து முடிந்த 5 மாநில தேர்தலில் ஒரு சாட்சி. மக்கள் செல்வாக்கு சரிந்த நிலையில் கூட அவர்களது வாக்குவங்கி தக்க வைக்கப்பட்டுருப்பது அவர்களது கடின உழைப்பை காட்டத்தான் செய்கிறது.

**சத்தீஸ்கர்**

இந்த மாநிலத்தில் பிஜேபி படுதோல்வி அடைந்தது. இந்த மாநிலத்தில் காங்கிரஸ் தலைவரும் சில நாட்களுக்கு முன்பு பிஜேபியில் சேர்ந்தார் மேலும் முன்னாள் காங்கிரஸ் முதலமைச்சரும் தனிக்கட்சி தொடங்கினார். அத்தோடு நிற்காமல் மாயாவதி உடன் சேர்ந்து கூட்டணி வைத்து




மூன்றாவது அணியாக களம் கண்டார். எப்போதுமே பலமுனைப் போட்டி நடக்கும்போது அது பாஜகவிற்கு சாதகமாகவும் காங்கிரஸுக்கு பாதகமாகவும் தான் அமைந்திருந்தது.

ஒருவேளை இதையே பிஜேபி வெற்றியாகக் கருதி எந்த முறைகேடுகளிலும் செல்வதை தவிர்த்து இருக்கலாம் காரணம் எளிதாக வெற்றி பெற்று விடுவோம் என்ற எண்ணமே. ஆனால் முடிவு காங்கிரஸ் மிகப்பெரிய வெற்றி அடைந்தது. மூன்றாவது அணி பெருவாரியான வாக்குகளை பிரித்து இருந்தாலும் அது பாஜவிற்கு பலன் அளிக்கவில்லை. காரணம் பாஜகவின் வாக்கு வங்கி அதல பாதாளத்தில் சரிந்து விட்டது.

இதேபோல் மத்திய பிரதேசம் ராஜஸ்தானிலும் நடக்காமல் போனதற்கான காரணத்தை இப்போது பார்ப்போம்.

இந்த 3 மாநிலங்களில் பாஜக காங்கிரஸ் நேரடி போட்டி நடந்தது.

**மத்திய பிரதேசம்**

பாஜகவில் பெரும்பாலான தலைவர்கள் ஓரம் கட்டப்பட்ட நிலையில் மோடிக்கு சமமாக பார்க்கப்பட்ட தலைவர் யாரென்றால் மத்திய பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சவுகான்.


15 ஆண்டுகளாக பிஜேபி ஆளும் மாநிலம் மற்றும் ஆர்எஸ்எஸ் வலுவாக உள்ள மாநிலம் என்று பெயர் பெற்ற மத்திய பிரதேசத்தில் பிஜேபி வெற்றி பெற முடியாவிட்டாலும் காங்கிரசின் பெரும்பான்மையை அது தடுத்து விட்டது.

நீண்ட ஆட்சியால் ஏற்படும் வெறுப்பு மற்றும் விவசாயிகளின் ஏமாற்றம் வியாபம் ஊழல் இன்று எல்லா வகையிலும் விழுந்திருந்த பிஜேபி காங்கிரஸை விட சற்று அதிக வாக்குகளை பெற்றது பெரும் ஆச்சரியம்தான்.

தேர்தலில் வெற்றி பெற்ற பின் ராகுல் காந்தியின் அறிக்கை சற்று முக்கியத்துவம் பெறுகிறது. காங்கிரஸ் தேர்தலில் வென்றாலும் வாக்களிக்கும் எந்திரத்தின் நம்பகத்தன்மை இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது என்றார்.

மத்திய பிரதேசத்தில் விந்தியா பகுதி கிட்டத்தட்ட முப்பது தொகுதிகளைக் கொண்டது. கடந்தமுறை காங்கிரஸ் தோல்வி அடைந்த போதும் இங்கு 12 தொகுதிகளில் வெற்றி கண்டது. இம்முறை கிட்டதட்ட 30 இடங்களில் 20ல் இருந்து 25 வரை பெரும் என்று எதிர்பார்த்த காங்கிரஸ் 6 தொகுதிகளை மட்டுமே வென்றது. அவர்களின் முக்கிய தலைவர்கள் போட்டியிட்டு தோல்வி அடைந்தார்கள்.

அனைத்து பகுதிகளிலும் பெரும் வெற்றி கண்டு ஒரு பகுதியில் மட்டும் பெரும் தோல்வி அடைந்தது புதிராக உள்ளது. இந்தப் பகுதியில் தான் பல வாக்களிக்கும் இயந்திரங்கள் வேலை செய்யவில்லை என்ற குற்றச்சாட்டும் இருந்தன. காங்கிரஸ் இதை பொதுவெளியில் தெரிவித்ததுடன் இதனை விசாரணைக்கு உட்படுத்த போவதாகவும் அறிவித்துள்ளது. வாக்களிக்கும் இயந்திரம் ஒரு நாள் தாமதமாக அது சேமிக்கப்படும் இடத்திற்கு வந்து அடைந்ததும் இதே பகுதியில் தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இங்கு கண்காணிப்பு கேமரா கூட வேலை



செய்யவில்லையாம்.

இதனை வைத்து பார்க்கும் போது குறிப்பாக காங்கிரஸ் வலுவாக இருக்கும் இடங்களில் வாக்களிக்கும் இயந்திரங்களை தங்களுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்வது என்பது பாஜகவின் திட்டமாக இருந்திருக்கலாம்.

**ராஜஸ்தான்**

தேர்தல் கருத்துக்கணிப்பு தொடங்கியவுடனேயே பாஜகவை ஆதரிக்கும் அனைத்து தொலைக்காட்சிகளும் ஊடகங்களும் ராஜஸ்தானில் பாஜக தோல்வி அடையப் போவது உறுதி என்றே தெரிவித்தனர். மேலும் காங்கிரசின் வாக்கு வங்கி 50% இருக்கும் என்றும்

பாஜக தோல்வியை தவிர்க்க முடியாத நிலைக்கு சென்றுவிட்டதாகவும் தெரிவித்துக் கொண்டே இருந்தன.


தொலைக்காட்சியை மற்றும் ஊடகங்கள் இதனை வெளிப்படையாக கூறுவதற்கு காரணம் அங்கு ஏற்பட்ட ஆட்சியின் மீது மக்கள் அதிருப்தியே. 42 லட்சம் போலி வாக்காளர்கள் ராஜஸ்தானில் சேர்க்கப்பட்டு விட்டதாக காங்கிரஸ் தேர்தல் ஆணையத்திடம் முறையிட்டும் மேலும் உச்சநீதிமன்றம் வரை சென்றும் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

ராஜஸ்தான் முதல்வர் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ளும் போதெல்லாம் மக்களின் வெறுப்பையும் சம்பாதிக்க முடிந்தது என்பது அனைவரும் அறிந்ததே.

இவ்வளவு காரணங்கள் இருந்தும் காங்கிரஸ் வெற்றி பெறாமல் போனதற்கு காரணம் பாஜக மற்றும் மத்திய அரசின் பின் வேலைகள் தான் என்பதை உறுதியாகக் கூறலாம்.

சிபிஐ தலைவர் மோடியின் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்திய உடனேயே அவர் வேறு துறைக்கு மாற்றப்பட்டார். நீதிபதி லோயா அமித்ஷா நீதிமன்றத்திற்கு வரவேண்டும் என்று கூறிய பின்பு மர்மமான முறையில் இறந்து போனார். ஆர்பிஐ இயக்குனர் சொந்த காரணங்களுக்காக செல்கிறேன் என்று அவரே ராஜினாமா செய்து கொண்டார்.

இதையெல்லாம் வைத்து பார்க்கும் போது ஆட்சி அதிகாரத்தில் அகங்காரத்துடன் இருக்கும் இவர்கள் அதை தக்க வைத்துக் கொள்வதற்காக என்ன முறைகேடுகளை வேண்டுமானாலும் செய்ய தயாராக தான் இருப்பார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.




அனைத்துக் கட்சிகளும் வாக்களிக்க இயந்திரத்தின் மீது கேள்வி எழுப்பிய பின்னரும் இனிமேல் எந்த தேர்தலிலும் வாக்குச்சீட்டு பயன்படுத்த அனுமதிக்க முடியாது என்று தனக்கு கொடுக்கப்பட்ட கட்டளை தெளிவாக எடுத்துக் கூறுகிறார் புதிதாக பதவி ஏற்றுக்கொண்ட தேர்தல் ஆணையர் சுனில் அரோரா.

விரைவில் வாக்காளர் பட்டியல் பெற வேண்டும் மேலும் வாக்களிக்கும் இயந்திரங்களை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்பதே இப்போதுள்ள கோரிக்கையாகும் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இதையே செய்ய வேண்டும்.


**- அபூதாஹிர்**

**வைகறை வெளிச்சம் வாசகர்கள் தங்களது சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.**

# சிலுவைப் போர் 2.0

✍ JOHN FEFFER

✍ தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது. M.A.,




இன்றைய நாட்களில் மேலை நாட்டவர்கள், அமெரிக்காவின் தலைமையின் கீழ், இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம் நாடுகளின் மீதும் தொடுத்து வருவது ஒரு சிலுவைப்போர். இதற்கு மேலை நாட்டவர்கள் வைத்திருக்கும் பெயர் சிலுவைப் போர் 2.0. முதல் சிலுவைப் போர் 1095 - இல் தொடங்கி 1274 - இல் முடிந்தது. இவை 9 போர்களாக நடந்தன. சிலுவைப் போர்கள் என்பவை கிருஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் நடந்த போர். (கிருஸ்தவர்களின் கணக்குப்படி முதல் சிலுவைப் போர் 1274இல் முடிந்தது)

சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது போர்கள் 1991இல் தொடங்கின. என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதை முதல் GULF WAR - முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். (பார்க்க பின்குறிப்பு - 4)

இந்த சிலுவைப்போர் அதாவது இந்த இரண்டாவது சிலுவைப் போரை எப்படித் தொடங்கினோம்? அதன் கூறுகள் என்ன? எப்படி தொடர்ந்து கொண்டிருக்கின்றோம்? என்பனவற்றையெல்லாம் ஜான் பெப்ஃபர் என்பவர் ஒரு நூலாக தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WESTS RESURGENT WAR ON ISLAM. அதாவது சிலுவைப்போர் 2.0 - மேலை நாடுகளின் இஸ்லாத்தின் மேல் தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர். இந்த நூலின் தமிழ் வடிவமே இந்த தொடர். உலக நிகழ்வுகளின் பின்னணிகளைப் புரிந்திட இவற்றைப் படியுங்கள்.

**ஜான் பெஃபர் கூறுகின்றார்;**

நாங்கள் அதாவது அமெரிக்காவின் அணிதிரண்ட இஸ்லாத்தின் எதிரிகள், இஸ்லாத்தையும், சில அமைப்புகளையும் மிகப்பெரிய எதிரிகளாகக் காட்டியுள்ளோம்.(இதனை வைகறை வெளிச்சம் ஜனவரி இதழில் பட்டியலிட்டிருந்தோம்)

இந்த எதிரிகள் நமது (உலக மக்களின்) உயிர்களுக்கு மட்டும் எதிரிகள் அல்ல, மாறாக நமது ஐரோப்பியர்களின் கலாச்சாரத்திற்கும், எதிரிகள். எனக் காட்டினோம். மக்களின் ஆதரவு கிடைத்தது. இஸ்லாத்தைப் பற்றிய அச்சம், பயம், பீதி இவை மக்கள் மனதில் மெல்ல, மெல்ல குடி புகத் தொடங்கின.

**இஸ்லாமோபோஃபியா - இஸ்லாமிய அச்சம்**

“இஸ்லாத்தைப் பற்றிய அச்சம்” என பொருள் படும் “இஸ்லாமோபோஃபியா” என்ற சொல்லை பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த ETIE NNE DINET - எற்றினி டைநைட் என்பவர் தான், 1922இல் அறிமுகப்படுத்தினார். இந்தச் சொல்லாட்சியை மக்கள் மனதில் அழுத்தமாகப் பதிய வைக்கும் பொறுப்பை பல அறக்கட்டளைகள் ஏற்றுக்கொண்டன. இவை அனைத்தும் ஐரோப்பிய நாட்டைச் சார்ந்தவை. (பார்க்க பின்குறிப்பு - 1)

இந்த வெறுப்பை அல்லது இஸ்லாம் - முஸ்லிம்கள் என்றவுடனேயே மக்கள் அலறித்துடிக்க வேண்டும், அஞ்சி நடுங்க வேண்டும் என்ற திசையில் செயல்பட்ட முதல் அறக்கட்டளை RUNNYMEDE TRUST - ருண்ணிமிடி அறக்கட்டளை. இது லண்டன் மாநகரை தலைமையகமாகக் கொண்டது.

இந்த அறக்கட்டளை 1977ஆம் ஆண்டு “ISLAMOPHOBIA, A CHALLENGE TO US ALL - இஸ்லாமிய பயம்

எல்லோருக்கும் ஒரு சவால்" என்றொரு நூலை **1977**இல் வெளியிட்டு தனது பிரச்சாரத்தைத் தொடங்கியது.

இந்தக் காலகட்டங்களில் ஆங்கில மொழியில் இந்த இஸ்லாமிய பயம் பற்றிய கட்டுரைகளை எழுதிக் கொண்டிருந்த FRANK LAMBERT - பிராங் லாம்பர்ட் என்பவர் தனது கட்டுரைகளின் வழி ஒரு கருத்தை இடைவிடாமல் பரப்பிக் கொண்டே இருந்தார். அவர் பிரயோகப்படுத்திய சொற்கள்: "Jihad and the rifle alone. No negotiation no conferences and no dialogues" அதாவது; "இஸ்லாம் என வந்து விட்டால் ஜிஹாத் துப்பாக்கிகள் இவை மட்டுந்தான் விட்டுக் கொடுக்கும் பேச்சுக்கள் கிடையாது. மாநாடுகள் கிடையாது. பிரச்சனைகளை பேசித் தீர்க்கும் பழக்கங்களும் கிடையாது."

"பிராங் லேம்பர்ட் - இன் இந்த வரிகள் ஐரோப்பாவைச் சுற்றி கொண்டே வந்தன. இதனை அவர் எழுதிய THE BARBARY WARS - "காட்டு மிராண்டி யுத்தங்கள்" என்ற நூலிலும், அவர் அளித்த பேட்டிகளிலும் திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருந்தன. எந்த அளவுக்கென்றால் பிரசித்திப் பெற்ற சிந்தனையாளர் ஜான் எக்ஸ்போசிட்டோ - JOHN EXPOSITO, இந்த வரிகளை அடிக்கடி தன்னுடைய கட்டுரைகளிலும், பின்னர் தான் நடத்திய விவாத அரங்குகளிலும் குறிப்பிட்டார். இறுதியாக அவர் எழுதி வெளியிட்ட நூலிலும் குறிப்பிட்டார். அந்த நூல் ISLAMOPHOBIA IN THE WEST - மேலை நாடுகளில் இஸ்லாமிய பீதி என்ற நூலிலும் வந்தது. ("JOHN ESPOSITO" (ஜான் எஸ்போசிஸ்டோ என்ற எழுத்தாளரைப் பற்றி பின் குறிப்பு இரண்டில் பார்க்கவும்.)

இஸ்லாம் ஒரு பெரும் அபாயம் என்ற பிரம்மையைப் பிரச்சாரங்களின் வழி விற்பனை செய்தவர்கள் எந்த சமரசத்திற்கும் தயாராக இல்லை. அவர்களின் எழுத்துக்கள் - பேச்சுக்கள் - முஸ்லிம்கள் அனைவரும் பூமி பந்திரிலிருந்து துடைத்தெறியப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தின. "They want to steer clean of Muslims"

மார்டின் அமின் என்றொரு எழுத்தாளர். இவர் கதைகள் வழி மக்களை கவர்ந்திழுப்பவர். இவர் இஸ்லாமியப் பீதியால் ஆட்கொள்ளப்பட்டவர். இவர் தொடர்ந்து இஸ்லாத்திற்கெதிராகவும் முஸ்லிம்களுக்கெதிராகவும் எழுதிக் கொண்டே இருந்தார். அவர் தன்னுடைய எழுத்துக்களில், 'A phobia is an IRRATIONAL FEAR SOMETHING THAT SAYS IT WANTS TO KILL YOU".

இதன் பொருள்; "போஃபியா என்பது அறிவற்ற அச்சம். ஆனால் உன்னை கொலை செய்ய வரும் ஒரு தத்துவத்தைப் பற்றி அச்சம் கொள்வது அறிவற்ற அச்சமாகாது. (பார்க்க பின்குறிப்பு - 3)

இதச் சொல்லிவிட்டு சொல்கின்றார்; நாம் ஏன் அச்சப்பட வேண்டும். அந்தக் கொள்கையைக் கொண்டவர்களை நாம் விட்டு வைத்திடக் கூடாது. அவர்களுக்கு எந்த உரிமையையும் கொடுத்துவிடக் கூடாது. மேலும் முஸ்லிம்களை என்னென்ன செய்து விட வேண்டும் என்பதை இப்படிப் பட்டியல் போடுகின்றார்;

1. Not Letting them to Travel! - அவர்களைப் பயணம் செய்திட அனுமதிக்கக் கூடாது.

2. இங்கே ஐரோப்பியாவில் வந்து குடியேறியர்வர்களை அவர்களின் நாட்டிற்குத் திருப்பி அனுப்பிட வேண்டும். (Deportation)

3. சாலைகளில் அவர்களைக் கண்டால் அவர்களை சாலைகளிலிருந்து அகற்றிட வேண்டும். Pulling them off the Roads, if Seen in Roads.

4. அவர்களின் சுதந்திரங்களைக் குறைத்திட வேண்டும். - CURTAILING THEIR FREEDOMS.

5. அவர்களைக் காணுமிடமெல்லாம் அவர்களின் துகிலுரித்து சோதனைகளைச் செய்திட வேண்டும். (Strip them to Cheek them)

மார்ட்டின் அமிஸ் - ஐ சில பத்திரிகையாளர்கள் பேட்டிக் கண்டார்கள். அதில் சில கேள்விகள்;

**கேள்வி**: நீங்கள் ஓர் இஸ்லாமியாபோபியா - இஸ்லாமியப் பீதி தலைக்கேறியவர், ISLAMOPHOBE என்கின்றார்களே? நீங்கள் இதற்கு என்ன சொல்கின்றீர்கள்?

**பதில்**: Better SAY ANTI ISLAMIST - என்னை இஸ்லாமிய பயத்தால் பீடிக்கப்பட்டவன் என்பதை விட , இஸ்லாத்திற்கு எதிரானவன் எனச் சொல்வதே சிறந்தது. (எனப்பதில் சொன்னார்.)

**கேள்வி**: முஸ்லிம்கள் எல்லோரும் தீவிரவாதிகள் அல்ல, அப்படி இருக்க நீங்கள் ஏன் மொத்த முஸ்லிம்களின் மேலும் பாய்கிறீர்கள்?

**பதில்**: THE MUSLIM COMMUNITY WILL HAVE TO SUFFER, UNTIL IT GETS ITS HOUSE IN ORDER - மொத்த முஸ்லிம் சமுதாயமும் கஷ்டப்பட வேண்டும். அவர்கள் தங்களை சரி செய்து கொள்ளும் வரை.

முஸ்லிமல்லாதவர்கள் இப்படி வெறுப்பைக் கொட்டினால் போதாது. இதில் சில முஸ்லிம்களையும் பயன்படுத்திட வேண்டும், அப்போது மட்டுமே இஸ்லாத்தைப் பற்றிய அச்சம் வலுப்பெறும் என முடிவு செய்தோம். அந்தப் பின்னணியில் சில முஸ்லிம்களையும் தயார் செய்தோம். இஸ்லாத்தின் மீது பாய்ந்திட! அவர்கள்........? இன்ஷா அல்லாஹ் தொடரும்.

**சிலுவைப் போர் 2.0 - பின்குறிப்புகள்**

*1.* ஜான் பெப்ஃபர் அவர்கள் இங்கே குறிப்பிடுவது சில அறகட்டளைகளைத்தான். இஸ்லாத்தின் மீது மேலைநாட்டவர்களுக்கு எந்த அளவுக்கு வெறுப்பு என்றால் இஸ்லாத்தின் மீதுள்ள வெறுப்பை கோபத்தை மக்களிடையே உண்டாக்கிட அறக்கட்டளைகளே முன்வருகின்றன. அதே போல் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் உள்ள வெறுப்பை வளர்ப்பதற்கு ஆய்வு களை மேற்கொண்டிட சில அறக்கட்டளைகள் நிறுவப்படுகின்றன. இவற்றிற்கு எல்லா திசைகளிலிருந்தும் நன்கொடைகள் வந்து குவிகின்றன. இவற்றால் இஸ்லாத்திற்கு எதிரான பிரச்சாரம் - நிலை கொள்கிறது நிரந்தர மாக்கப்படுகின்றன.

*2.* "JOHN ESPOSITO" ஓர் ஆய்வாளர் - எழுத்தாளர். இவருடைய எழுத்துக்கள் தாம் முஸ்லிம்களுக்கு எதிரான அமெரிக்காவின் பிற்கால போர் திட்டங்களுக்கு மிகவும் உதவியாக இருந்தன. இவருடைய எழுத்துக்களில் மிகவும் பிரபல்யமானது. "VOICE OF RESURGENT ISLAM" இஸ்லாமிய மீட்சியின் குரல்கள். இந்த நூல் *1982*களில் வெளி வந்தது. இந்த நூல் இஸ்லாமிய எழுச்சியை மையமாகக் கொண்டு சிந்திக்கின்ற பல இயக்கங்கள் இந்த மண்ணிலே தோன்றியுள்ளன. அவையெல்லாம் இஸ்லாமிய ஆட்சி இந்த மண்ணிலே நிறுவப்பட வேண்டும், இஸ்லாம் இழந்த கீர்த்திகளை மீண்டும் பெற்றிட வேண்டும் என்று ஏங்கும் இளைஞர்களையும் சிந்தனையாளர்களையும், கொண்ட இதனை தடுத்தாக வேண்டும். இல்லையென்றால் நாமும் இஸ்லாத்தால் ஆட்கொள்ளப்படுவோம் - அழிந்து போவோம், என்றொரு அபாயச் சங்கை ஊதினார்.

இதே ஜான் எஸ்போசிட்டோ *1987* - இல் வெளியிட்ட பிரிதொரு ஆய்வு ஒன்றில், "இஸ்லாம் நிச்சயமாக மேலை நாட்டவர் களுக்கும், அவர்களின் கலாச்சாரத்திற்கும் ஒரு பெரும் சவாலாக இருக்கும்" எனக் குறிப்பிட்டார். அந்த நூலின் பெயர் "ISLAMIC THREAT MYTH OR REALITY - இஸ்லாமிய அபாயம் வெறும் பிரம்மையா அல்லது உண்மையா?

ஆக எல்லா முஸ்லிம்களையும், மக்கள் - குறிப்பாக மேலைநாட்டவர்கள் வெறுக்க வேண்டும் என்பதற்காக நிலையான நிறுவனங்கள் தோற்று விக்கப்படுகின்றன. அவற்றில் பல அறக்கட்டளைகள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அபாயமாகக் காட்டிடும் இலக்கியங்கள் தாராளமாக பிரவாகமெடுத்து ஓடுகின்றன. மாவீரர் டாக்டர் ஜாஹிர் நாயக் அவர்கள் ஒருக் கட்டத்தில் இஸ்லாத்திற்கு எதிராக *49,000* - நாற்பத்து ஒன்பதாயிரம் தலைப்புகளில் இலக்கியங்கள் உலாவருகின்றன என்றார். இது ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர். புதுப்புது பழிகளைக் கண்டுபிடித்து முஸ்லிம்கள் மீதும் இஸ்லாத்தின் மீதும் போடுகின்றார்கள். அதற்காக ஆய்வுகள் நடத்தப்படுகின்றன.

நாளிதழ்கள், வார, மாத, இதழ்கள் இவற்றில் கட்டுரைகள் எழுதப்படுகின்றன. ஆய்வுகள் வெளியிடப்படுகின்றன. அவற்றை எழுதுவதற்கும் பிரசுரிப்பதற்கும், பெருந்தொகை தரப்படுகின்றது. இந்த வெறுப்புப் பிரச்சாரத்தை இடைவிடாமல் செய்வதற்கு பணம் தரும் நிறுவன்ங்களின் பட்டியலை நாம் இந்தத் தொடரின் தொடக்கத்தில் வெளியிட்டிருந்தோம். வாசகர்கள் அதனை படிக்கும் படி கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

முஸ்லிம்கள் ஒன்றை நினைவில் நிறுத்த வேண்டும். நாம் சதாசர்வ காலமும் ஒரு வெறுப்புப் பிரச்சாரத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றோம் என்பதே! இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

*3.* இப்போது ஐரோப்பிய நாடுகளில் ஒரு சொல் புழக்கத்தில் இருந்து கொண்டிருக்கின்றது. அது, "ISLAMIPHOBE" இஸ்லாமிய பீதியால் பீடிக்கப்பட்டவர்களை அவர் ஓர் இஸ்லாமியோ போஃப் என்று முத்திரை குத்தி விடுகிறார்கள். இந்த முத்திரையை ஒருவர் பெற்றுவிட்டால், "அவர் அப்படித்தான்" என்றாகிவிடுகின்றது. வேரை இது முஸ்லிம்களின் அயராத உழைப்பு சாதித்தது.

*4.* அமெரிக்கர்கள் கணக்குப்படி சிலுவைப்போர் *2.0 : 1951*லேயே தொடங்கி விட்டது. இந்த ஆண்டில் தான் அமெரிக்க உளவுத்துறையிடம் CRUSADE FOR FREEDOM - விடுதலைக்கான சிலுவைப்போர் என்றொன்றை வடிவமைக்கும் பணி அமெரிக்க அரசால் ஒப்படைக்கப்பட்டது.

(Source: Timeline of CRUSADE by John Febber)


**தாருஸ் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் நடத்தும் நிகழ்ச்சிகளின் வீடியோக்களை வைகறை வெளிச்சம் முகநூல் பக்கத்தில் கண்டு பயன் பெறுங்கள்**

# மதமாற்றம் அபூபக்கர்(ரழி) இல்லையே!




***நூல்*** : ***மதமாற்றம் அபூபக்கர்(ரழி) இல்லையே!***

***ஆசிரியர்*** : பேராசிரியர். ***அபுல் ஹசன் ஆலிம் ஃபாஸி*** M.A.,

***பக்கங்கள் : 160***

***விலை*** : ***130. ரூபாய்***

***வெளியீடு : சிராத்துல் முஸ்தகீம் பதிப்பகம் - சென்னை - 1***

***போன் : 044-25211981 - 98949 07531 - 044 42167320 - 9600012039***

மௌலானா அலீ மியான் எனப்படும் அபுல் ஹசன் அலீ நத்வீ (ரஹ்) அவர்கள் சர்வதேச இஸ்லாமியப் பேரறிஞர். ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சிந்தனையாளர். மிகச் சிறந்த அரபு இலக்கியவாதி. அப்பழுக்கற்ற இஸ்லாமிய செயல் வீரர்.

மெட்டீரியலிசம் எனப்படும் பொருள்முதல்வாத உலகாதாயத்திற்கெதிராக பெரும் சிந்தனைப் போராட்டங்களை முன்னெடுத்தவர். அவரின் ஆழிய அரபி மொழிப்புலமை பெரும் பேரையும் புகழையும் அவருக்குப் பெற்றுத் தந்தது.

இதனால் இஸ்லாமிய நாடுகளிலுள்ள புகழ் மேவிய பல்கலைகழகங்களுக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார். அங்கே அவர் ஆற்றிய உரைகள் அறிஞர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. மார்க்க அறிஞர்களால் பெரிதும் விரும்பப்பட்டன. அவரின் உரைகள் மகத்தான சிந்தனையைப் புரட்சியை அவர்களிடம் உருவாக்கிற்று.

ஜாமிஆ உம்முல் குரா (மக்கா முகர்ரமா), மதீனா பல்கலைகழகங்களில் பலமுறை நுண்ணிய தலைப்புகளில் உரையாற்றியவர் அலீ மியான் (ரஹ்).

1963 ஆம் ஆண்டு மதீனா இஸ்லாமிய பல்கலைகழகத்தில் அவர் ஆற்றிய உணர்ச்சிப்பூர்வமான இரு உரைகளின் எழுத்து வடிவம் தான் இந்நூல். வாசகர்களை ஈர்க்கும்படி வசீகரமான தலைப்பைத் தருவதில் அலீ மியான் (ரஹ்) கெட்டிக்காரர். சொல்ல வரும் கருத்தை அழகிய மொழிநடையில் நேர்த்தியாக சொல்வதில் வல்லவர்.

வரலாற்றுச் சம்பவங்களை இஸ்லாமிய கோணத்தில் அணுகுவதில் அலாதியானவர். தனது உரையிலும், நூலிலும் அவற்றைப் பொருத்தமான இடத்தில் கூறி வாசகர்களை வியப்பில் ஆழ்த்துவது அவரது பாணி.

இடையிடையே பழமொழிகள், உதாரணங்கள், கவிதைகள் என அடுக்கிக் காட்டி வாசகர்களின் வாசிப்புத் திறனை மேல்நோக்கி உயர்த்துவது அவரின் வழிமுறை.

இந்நூல் ஒரு சீரியசான சப்ஜக்ட் குறித்துப் பேசுகிறது.

மனித வாழ்க்கைக்குத் தேவையான எல்லாவற்றையும் நிறைவாகக் கொண்டிருக்கும் முழு மார்க்கமான இஸ்லாத்தை தனது வாழ்க்கை நெறியாக ஏற்று வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்கள் சோசலிசம், ஜனநாயகம், கம்யூனிசம்,

முதலாளித்துவம், மதச்சார்பின்மை, பின்நவீனத்துவம், மெட்டீரிலியசம் போன்ற மனித மூளையில் உதித்த இஸங்களில் மயங்கி, அதன் வெளிப்புறக் கவர்ச்சியில் மனதைப் பறிகொடுத்து மதியிழப்பதை 'மதமாற்றம்' என்ற பெரிய சொல்லில் விமர்சிக்கின்றார்.

இந்த இஸ்லாமிய மார்க்கத்தினை மறுத்து இதர மதங்களின் வழிபாட்டுத்தலங்களுக்குச் செல்லத் தொடங்கிவிட்டவனை விடவும் இஸங்களில் மயங்கியவன் ஏன் ஆபத்தானவன்? அவன் எவ்வளவு ஆபத்தானவன்? அவனிடமுள்ள உளவியல், அதன் விநோதம் ஆகியவற்றை அழகுபட விவரிக்கின்றார்.

இவ்வகை மதிமயக்கமும், அதன் விளைவாக ஏற்படும் மதமாற்றமும் ஏன் ஏற்படுகிறது? என்பதையும், அதனை அறிஞர்கள் எப்படி எதிர்கொள்ள வேண்டும்? என்பதையும் கூறும் இந்நூல், 'ரித்தா' (மதமாற்றம்) வினால் முஸ்லிம் உலகம் சந்தித்த அவலங்களையும் விளக்குகின்றது.

முஸ்லிம்களின் இதயத்தில் மதமாற்றச் சிந்தனையை விதைப்பதில் மேற்கத்திய கல்வியின் பங்கு, அதன் விபரீத போதனைகள், அரச குடும்பத்தினர்களிடமும் இதர குடிமக்களிடமும் அவை ஏற்படுத்திய பாதிப்புகள் ஆகியவற்றைக் கோபத்துடனும் நெஞ்சகக் கொதிப்புடனும் பதிவு செய்கிறார் அலீ மியான் (ரஹ்).

அக்பர், கமால் அதாதுருக், கதாஃபீ, ஹபீப் போர்கிபா போன்ற முர்தத்துகளை மேற்கோள்காட்டி வரலாற்றில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள அழைக்கின்றார்.

எச்சில் உணவுக்கு ஆசைப்பட்ட இளவரசன் (பக்கம்:113) , எல்லோரின் தலையும் வழுக்கைத் தலையாக ஆகிட ஆசைப்பட்ட வழுக்கைத் தலையன் (பக்:78) , உலோபியின் விருந்துக்குச் சென்ற அநாதைகள் (பக்:134), என்று உவமானங்களையும் இடையிடையே கூறிச் செல்வது நூலின் உள்ளடக்கத்தை மனதில் இருத்திட உதவுகிறது. இருபத்தோறு தலைப்புகளைக் கொண்டு மூலநூல் அமைக்கப்பட்டிருப்பது வாசிப்பை எளிமைப்படுத்துகிறது. இவ்வகை பிரச்சினைக்குத் தீர்வு சொல்ல வந்த நூலாசிரியர் இப்படிச் சொல்கிறார்.

"ஒரு நாடும் மற்றொரு நாடும் மக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு வாய்ப்பு இருந்ததெனில், ஏதேனும் ஒரு இஸ்லாமிய நாட்டிலிருந்து இஸ்லாமிய கொள்கைகளுக்குப் பங்கம் ஏற்பட்டிருக்கும் இந்நாடுகளுக்கு முஸ்லிம்கள் செல்ல வேண்டும். அப்படிச் செல்வோரில் நான் முன்வரிசையில் நிற்பேன்." (பக்கம்:97).

"நம் கல்வி அமைப்பையே முழுமையாக மாற்றி அமைக்க வேண்டும். பாடத்திட்டத்தை மாற்றுவது என்றால், இஸ்லாமிய பாடங்கள் மேற்கத்திய பாடங்கள் இரண்டையும் கலந்து ஒன்றை உருவாக்குதல் என்று விளங்கிவிடக் கூடாது. இக்லாஸ் எனும் மனத் தூய்மை யானவர்களின் விருப்பங்களும், பலவீனமான நல்லவர்களின் முயற்சிகளும் மட்டுமே அதனை அகற்ற உதவாது. " (பக்கம் :120).

"இஸ்லாமிய பிரச்சாரம் காலத்திற்கேற்ப நவீனப்படுத்தப்பட வேண்டும்." (பக்கம்:138).

மொத்தத்தில் மார்க்க அறிஞர் ஒவ்வொருவரும் ஓர் அபூபக்கர் (ரழி) யாக மாற வேண்டும் என்கிறார்.

நடைமுறையிலுள்ள ஜனநாயகத்தை இஸ்லாத்தின் மற்றொரு வடிவமாகவும், திருத்தப்பட்ட மறுவடிவமாகவும் காட்ட முயற்சிப்பவர்களின் கண்களை இந்நூல் திறக்கும்.

இந்நூலை மொழிபெயர்த்துள்ள மௌலவி அபுல் ஹசன் ஃபாஸி, நிகழ்காலத்துடன் நூலின் உள்ளடக்கத்தை பொருத்தும் முயற்சியாக பிற்சேர்க்கையில் கூறும் விஷயங்களும் வாசிக்க வேண்டிய தகவல்களைக் கொண்டிருக்கிறது.

மூலநூலில் இறுக்கமாகவும், சுருக்கமாகவும் கூறப்பட்டிருக்கும் அரபுச் சொற்களை ஓரிரு வார்த்தைகள் அதிகரித்தாலும் பரவாயில்லை என்று விரிவாக மொழிபெயர்த்திருப்பது வாசிப்பதற்கு உதவியாக இருக்கின்றது.

ஆலிம்களும். இஸ்லாமியவாதிகளும் வாசிக்க வேண்டிய நூல். அலீ மியான்(ரஹ்) இன் கருத்துக்கள் தமிழகத்தில் ஒரு சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்திட இந்நூல் உதவும்.

**-இல்யாஸ் ரியாஜி**

**இந்த புத்தகம்**
**இலங்கையிலும் கிடைக்கும்**
**Islamic Book Center**
**65, Demaltagoda Road, Colombo - 09**
**&**
**210/11, Main Street, Akurana 20/A-3,**
**Seymonds Road, Maradana.**
**&**
**Maradana, 215, Granpass Road,**
**Colombo -14**



# குஜராத்தில் வீரப் பெண்மணி!

**மகளிர் மன்றம்**

வடிகட்டின முட்டாள் தனத்தைப் பலர் தங்கள் தலை மேல் சுமந்து செல்கின்றார்கள். அது இஸ்லாத்தில் பெண்களுக்கு உரிமையே இல்லை என்ற கூப்பாடு! கடந்த காலங்களில் ஆஃப்கானிஸ்தானில் ஓர் அறிவிப்பு. அது, "முந்தைய ஆட்சிகளில் பெண்கள் கல்வி கற்றுக் கொள்வதற்குரிய உரிமைகள் வழங்கப்படவில்லை. இந்த அறிவிப்பை செய்திருப்பவர் அமெரிக்காவால் ஆஃப்கானிஸ்தானில் ஆட்சியாளராக அமர்த்தப்பட்ட ஹமீது கர்சாய்" என்பவர்.

இஸ்லாமிய வரலாற்றில் பெண்கள் ஆற்றிய பென்னம் பெரிய வரலாற்றை அறியாதவர்கள் மட்டும் தான் இது போன்றதொரு அறிவிப்பைச் செய்திட இயலும். இஸ்லாம் என்ற பேரியக்கத்தின் வளர்ச்சியில் பெண்கள் வெற்று உரிமைகளுக்காகப் போராடவில்லை. கொடிபிடித்து, கோஷம் போடும் வேஷங்களுக்கு அங்கே வேலை இருக்கவில்லை.

அதுமட்டுமல்ல. நமது சகோதரிகள் உரிமை கேட்டு ஊர்வலங்கள் சென்று கொண்டிருக்கவில்லை. அவர்கள் இஸ்லாம் என்ற பேரியக்கத்தின் வளர்ச்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, தியாகங்களைச் செய்தார்கள். இறைவனின் வழிவில் தங்கள் கணவனைத் தந்தார்கள். இறைவனின் வழியில் தங்கள் குழந்தைகளைத் தந்தார்கள். ஏன், தங்களையே தந்தார்கள். இப்படி நமது தீன்குல பெண்மணிகள், இஸ்லாத்தின் கண்மணிகள் தியாகங்களைச் செய்ததும், தியாகிகளை ஈன்றுத் தந்ததும் இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் காலத்தில் மட்டும் தான் நடந்தது என்றில்லை.

1948ல் இஸ்ரேல் என்றொரு நாடு ஐ.நா. சபையால் முஸ்லிம்களின் இருப்பிடத்தின் மேல் திணிக்கப்பட்டது. அதனை எதிர்த்து நடந்த போரில் (ஜிஹாதில்) எகிப்திலுள்ள இஹ்வானுல் முஸ்லிமூன் என்ற இஸ்லாமிய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டார்கள். இந்த இயக்கத்தைச் சார்ந்த பெண்கள் செய்த தியாகங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது இமாம் ஹஸன் அல் பன்னா ஷஹீத்(ரஹ்) அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார்கள்.

"அந்தப் பெண்கள் தங்களது வாழ்க்கைத் துணைவர்களை அல்லாஹ்வின் பாதையில் தந்தார்கள். அத்தோடு தங்களது உருப்படிகளை அணிமணிகளை சுழற்றித் தங்கள் துணைவர்களின் கைகளில் தந்து ஆயுதங்கள் வாங்கிட நிதி உதவியும் செய்தார்கள். அவர்கள் தங்கள் துணைவர்களை அல்லாஹ்வின் வழியில் தந்தமைக்காக ஒரு கூலியும், ஆயுதங்கள் வாங்கிட தங்கள் அணிமணிகளைத் தந்தமைக்காக இன்னொரு கூலியும் அல்லாஹ்விடம் பெறுவார்கள்."

"எல்லோரும் ஒரு வகையில் அல்லாஹ்விடம் சன்மானம் பெறும்போது இந்தப் பெண்கள் அல்லாஹ்விடம் இரண்டு வகைகளில் கூலிகளைப் பெறுவார்கள்."

இப்படி அந்தப் பெண்களைப் பற்றி இமாம் ஹஸன் அல் பன்னா ஷஹீத்(ரஹ்) அவர்கள் பெருமைப்பட்டார்கள். இப்படியொரு வரலாற்றையல்ல நித்திய நடப்பை, நிகழ்வை நமது பாலஸ்தீன சகோதரிகள் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாமறிவோம்.அதேப்போல குஜராத்தில் ஓரிரு இடங்களில் படையெடுத்துப் பயங்கரமாகப் பாய்ந்து வந்த ஃபாசிஸ்டுகளை நமது சகோதரிகள் எப்படி விரட்டியடித்தார்கள் என்பதையும் சென்ற

இதழில் பார்த்தோம். அந்த வகையில், இன்னொரு வரலாறு இப்போது நமக்கு குஜராத்திலிருந்து கிடைக்கின்றது.

குஜராத்தில் இனப்படுகொலைகளில் ஈடுபட்டவர்கள் இப்போது சுதந்திரமாகச் சுற்றிக் கொண்டிருக் கின்றார்கள். பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சியில் நரேந்திர மோடியின் பயங்கர நிர்வாகம் இங்கே கொடி கட்டிப் பறக்கின்றது.

பெண்களை கற்பழித்தவர்கள், “நான்தான் இவளை.....” எனப்பேசித் திரிந்திடும் அளவிற்கு அங்கே குற்றம் புரிந்தவர்கள் – இனப்படு கொலைகளைச் செய்தவர்கள் – மகிழ்ச்சியாக உலா வந்து கொண்டிருக்கின்றனர். (வெட்கமும் மானமுமில்லாத ஒரு சமுதாயம்!)

சிலபல சகோதரிகள் தங்களைக் கட்டிப் போட்டுக் கட்டாயப்படுத்திக் கெடுத்தவர்களைத் தண்டித்தேயாக வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள். இப்படி உறுதியாக இருக்கும் சகோதரிகளுக்கு பயங்கர கொலை மிரட்டல்கள். அவர்கள் தனியாகக் கிடைத்தால் கொலையும் செய்து விடுகின்றார்கள். இன்னும் சில சகோதரிகளைப் பற்றிய தகவல் கொடுத்தால் தகுந்த சன்மானம் கிடைக்கும் என்ற அறிவிப்புகளும் தாராளமாக உலா வருகின்றது.

இதில் ஒரு சகோதரி (இந்தச் சகோதரியின் மாற்றுப் பெயர் ஒன்றை ஃப்ரண்ட் லைன் ஆங்கில சஞ்சிகை தந்துள்ளது) தன்னிடம் தகாத முறையில் நடந்து கொண்டவர்களைப் பற்றிய புகாரைப் பதிவு செய்துவிட்டாள். தன்னை தகாத செயலுக்கு உட்படுத்தியவர்கள் மீது விசாரணை வரும். கண்டிப்பாகச் சாட்சியம் சொல்லிட வேண்டும். அவர்களுக்கு தண்டனை வாங்கித் தந்தேயாக வேண்டும் என்பதில் உறுதி பூண்டு நிற்கின்றாள் அந்தச் சகோதரி. இதனால் ஃபாசிஸ்டுகளின் கைகளில் சிக்காமல் தலைமறைவாக வாழ்ந்து வருகின்றாள். இந்தத் தலைமறைவு வாழ்க்கையில் பயங்கர இன்னல்களைச் சந்தித்து வருகின்றாள்.

குஜராத் இனப்படுகொலைகள் நடக்கும் போது அவள் கர்ப்பிணி, இந்தத் தலைமறைவு வாழ்க்கையிலேயே குழந்தையையும் பெற்றெடுத்திருக்கின்றாள். அவள் தன் கண்ணெதிரே தன் மகளும் இன்னும் 14 குடும்ப உறுப்பினர்களும் கொல்லப்படுவதைக் கண்டாள். அவளது கணவன் வயல்வெளிக்கு வேலை செய்யச் சென்றார். காணாமல் போய்விட்டார். கலவரத்தின் போது எப்படியோ பிழைத்து வந்து தன் மனைவியுடன் சேர்ந்து கொண்டார்.

இதில் வேதனை என்னவென்றால் அவள் தலைக்கு ரூபாய் ஐந்து லட்சம் அறிவித்திருந்தார்கள் ஃபாஸிஸ்டுகள். குஜராத் ஒரு மாநிலமா அல்லது காட்டு மிராண்டிகளின் கூடாரமா? எனக் கேட்கத் தோன்றும்.

“நான் பத்து பேர் மீது புகார் கொடுத்துள்ளேன். அவர்களில் டாக்டர், வக்கீல், பணக்காரர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆகியோர் உண்டு. இவர்களில் பலர் விஷ்வ இந்து பரிஷத்தைச் சார்ந்தவர்கள். இவர்களில் யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை” என்கின்றாள் அந்தச் சகோதரி.

இப்படி என்ன விலை தந்தும், அவர்களுக்குத் தண்டனை வாங்கித் தந்திடுவேன் என உறுதி பூண்ட இந்தச் சகோதரி, அன்றைய இஸ்லாமிய வீராங் கனைகளின் வரலாற்றை நமது நினைவுக்குக் கொண்டு வருகின்றாள். இப்படி நமது தீன்குலப் பெண்மணிகள் இஸ்லாம் என்ற கொள்கையின் வளர்ச்சியில் ஆற்றிய பங்கினை நாம் பெருமையோடு பேசிக் கொண்டிருக்கும் போது, நமது பெண்கள் கல்வி கற்க மார்க்கம் தடையாக இருந்தது எனப் பேசிடும் பச்சோந்திகளும் முளைத்து தான் இருக்கின்றார்கள்.

நமது பெண்மணிகள் கல்வி கற்றார்கள் என்பது மட்டுமல்ல, அவர்கள் கல்விக் கூடங்களை நடத்தினார்கள் என்ற பெரிய வரலாறும் நமக்குண்டு.

நம்பிக்கையாளர்களின் தாய் ஹழ்ரத் ஆயிஷா(ரழி) அவர்கள் தங்கள் வாழ்க்கையின் பிந்தைய காலத்தை குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் கல்வி கற்றுத் தருவதிலேயே கழித்தார்கள். மார்க்கத்தீர்ப்புகளைத் துல்லியமாகத் தரும் அவர்கள் அரபு வரலாற்றிலும் ஆழ்ந்த ஞான முடையவர்கள். அந்த வகையில் அரபுக்களின் வரலாற்றையும் அந்த மக்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். ஏறத்தாழ 2210 நபிமொழிகள் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் 174 நபிமொழிகள் கலீஃபா அபூபக்ர்(ரழி) அவர்களியாலும் ஊர்ஜிதம் செய்யப்பட்டவை.

நபிமொழித் தொகுப்பான புஹாரியில் 58 நபிமொழிகள் ஆயிஷா(ரழி) அவர்களே அறிவிப்பாளர் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. முஸ்லிம் என்ற நபிமொழித் தொகுப்பில் இடம் பெற்றுள்ள 68 நபிமொழித் தொகுப்பிற்கு நம்பிக்கையாளர்களின் தாய் ஆயிஷா(ரழி) அவர்களே அறுதியான அறிவிப்பாளர் ஆவார்கள். சில மார்க்க அறிஞர்களின் கணிப்பின் படி ஷரீஅத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்புகளில் நான்கில் ஒரு பங்கு ஆயிஷா(ரழி) அவர்களின் தீர்ப்பாகும்.

வெறும் மார்க்கத் தீர்ப்புகளைத்தான் ஆயிஷா(ரழி) அவர்கள் வழங்கிக் கொண்டிருந்தார்கள் என்றில்லை. அப்போது வளர்ந்து கொண்டிருந்த விஞ்ஞானம், மருத்துவம் இவற்றைப் பற்றியும் நன்றாக அறிந்திருந்தார்கள்.

இப்படி எத்தனையோ பெண்மணிகள் இஸ்லாமிய வரலாற்றில் கல்வி நிலையங்களை நடத்தி நல்லறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்திருக்கின்றார்கள்.

இந்தப் பின்னணியில் வளர்ந்த நமது சகோதரிகளுக்குக் கல்வி கற்க உரிமையில்லை என சில அமெரிக்க ஏஜண்டுகள் சொல்லும் போது அவர்களின் அறிவின்மையைக் கண்டு நகைக்காமல் நாம் இருக்க இயலுவதில்லை.

**எம்.ஜி.எம்**

**7**

# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?

## தமிழகத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சாதாரண முஸ்லிம்களின் வரலாறு




# சுதா (எ) நுஸ்ரா ஃபாத்திமா

இந்த உலகம் தோன்றியதிலிருந்து செயல்களால் மிக அழகானவர் கண்மணி நாயகம் முஹம்மத்(ஸல்) அவர்கள் தாம். அவர்களின் சொற்களும், செயல்களும் மிகவும் அழகானவை, நேர்த்தியானவை. அவர் வாழ்ந்த காலத்தில் அவர்களின் செயல்களையும், நற்பண்புகளையும் பார்த்து இந்த மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட மனிதர்கள் எண்ணிலடங்காதர்வர்கள்.

அதே போல அந்த நற்பண்புகளின் முழு வடிவமான நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வழிமுறையை அப்படியே அடிப்பிசுராமல் பின்பற்றி வாழ்ந்த சத்திய சஹாபாக்களின் செயல்களைப் பார்த்தும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட நபர்கள் ஏராளம்.

ஆனால் நவீன உலகில் வாழும் முஸ்லிம்களில் சிலர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் செயல்களை பின்பற்றுவதைக் கூட விவாதப் பொருளாக மாற்றி விட்டார்கள். “சுன்னத்து தானே அதைக் கடைபிடிப்பதில் ஒன்றும் அக்கறை வேண்டாம்! கடைமைகளை மட்டும் செய்தால் போதும்” என்று நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கையை ஒதுக்கிவிட்டு வாழக்கூடிய பகுத்தறிவு முஸ்லிம்களை நாம் பார்கின்றோம்.

இந்த சூழ்நிலையில் உலகத்தின் அருட்கொடையான நபி(ஸல்) அவர்களின் சுன்னத்துகளில்–செயல்களில், எல்லாம் வல்ல இறைவன் எவ்வளவு பெரிய பாக்கியத்தை வைத்திருக்கின்றான் என்று நம் சகோதரி சுதாவின் அனுபவத்தில் புரிந்துக் கொள்ளலாம்.

ஆம்! நாம் அலட்சியமாக கருதும் அந்த மாநபியின் சுன்னத்துதான் இந்த சகோதரியை அல்லாஹ்வின் மார்க்கமான தீனுல் இஸ்லாத்தில் நுழைத்தது. நாம் வேண்டாம் என்று ஒதுக்கிய அந்த அருட்கொடையின் சுன்னத்துதான் இந்த சகோதரிக்கு மனிதர்களிலேயே உயர்ந்த அந்தஸ்த்தான மூஃமின் என்ற அந்தஸ்த்தைப் பெற்றுத் தந்தது.

அதனால் தான் எல்லாம் வல்ல இறைவன் முஹம்மத்(ஸல்) அவர்களைப் பற்றி தனது திருமறையில் குறிப்பிடும் போது “இந்த நபி அகிலத்திற்கோர் அருட்கொடை” எனக் கூறுகின்றான். அல்ஹம்துலில்லாஹ்! வாருங்கள் இந்த சகொதரியின் அனுபவத்தில் பயணிப்போம்.

என்னுடைய பெயர் சுதா. நான் இந்து மதத்தில் பிராமண சமுதாயத்தைச் சார்ந்த பெண். என்னுடைய தந்தை கோவிலில் "குருக்களாக" பணியாற்றி வருகிறார்கள்.

பொதுவாகவே எனக்கு இஸ்லாம் என்றால் என்ன? முஸ்லிம்கள் என்பவர்கள் யார்? என எதுவுமே தெரியாது. கிருஸ்தவம் மற்றும் இந்து மதம் பற்றி கூட ஓரளவுக்கு தெரியும். ஆனால் இஸ்லாம் பற்றி எனக்கு எதுவுமே தெரியாமல் இருந்தது. தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புகளும் எனக்கு கிடைக்கவில்லை.

**கல்லூரி வாழ்க்கை**

இந்த சூழலில் நான் ஸ்ரீவில்லிப்புத்தூரில் உள்ள ஒரு மகளிர் கல்லூரியில் மேற்படிப்பிற்காக சேர்ந்தேன். அந்த கல்லூரியில் எனக்கு நிறைய இஸ்லாமிய தோழிகள் கிடைத்தார்கள். அது மட்டு மில்லாமல் அங்குள்ள இஸ்லாமிய தோழிகளிடம் அதிகமாக நேரம் செலவழிக்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது. அவர்களின் நட்பு கிடைத்தவுடன் அவர்களின் செயல்கள், அவர்களின் நடவடிக்கைகள் எல்லாம் எனக்கு மிகவும் பிடித்து போனது.

ஒருமுறை எல்லோரும் அமர்ந்து காபி குடித்துக் கொண்டிருந்தோம். அப்போது காபி சூடாக இருந்ததால் நான் ஊதிக் குடிக்க ஆரம்பித்தேன்.

இதை கவனித்த எனது தோழி வஹிதா, "இதுபோல ஊதி குடிக்கக் கூடாது" என்று என்னிடம் கூறினாள்.

அதற்கு நான் அவளிடம் கோபமாக, "சூடா இருந்த ஊதிதா குடிப்பாங்க வேற எப்டி குடிப்பாங்க" என்று கூறிவிட்டேன்.

ஆனால், அவர்கள் நான் ஆத்திரப்பட்டது போல் என் மேல் கோபப்படவில்லை. மிகவும் நிதானமாக நடந்து கொண்டார்கள்.

அருகில் இருந்த என்னுடைய இன்னொரு தோழி ஃபாத்திமா என்னிடம் "அவ்வாறில்லை எந்த சூடானப் பொருளையும், பாணத்தையும் ஊதிக் குடிப்பதை எங்கள் மார்க்கத்தில் தடை விதிக்கப்பட்டிருக்கிறது" என்று பொறுமையாக கூறினாள். நானும் அவள் கூறியதை கேட்டு விட்டு அமைதியாக இருந்து விட்டேன்.

இதே போல இன்னொரு நாள் நாங்கள் அனைவரும் அமர்ந்து உணவருந்தி கொண்டிருந்தோம். அப்போது என்னுடைய தோழி வஹீதா அனைவரின் முன்னிலையிலும் விரல்களை சூப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். இதை கவனித்த நான் அவளிடம் "உன்னக்கென்ன கொஞ்சம் கூட அறிவில்லையா? இங்க இவ்வளவு பேர் இருக்கிறார்கள் அசிங்கமாக விரல்களை சூப்பி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாய்" என்று மிகவும் கோபமாக கத்தி விட்டேன்.

ஆனாலும் அவர்கள் மிகவும் நாகரீகமாக நடந்து கொண்டார்கள். மிகவும் நிதானமாக அருகில் இருந்த ஃபாத்திமா என்னிடம் "விரல் சூப்பி சாப்பிடுவது எங்கள் மார்க்கத்தில் சுன்னத்(நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கற்றுத் தந்த வழிமுறை)" என கூறினாள். நானும் அதைக் கேட்டு விட்டு அமைதியாக இருந்து விட்டேன்.

**யார் உண்மையான கடவுள்?**

ஒரு நாள் நாங்கள் கடவுளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் போது என் தோழி ஃபாத்திமா என்னிடம்,

நீங்கள் வணங்குவது எல்லாம் வெறும் கல் தான். அதற்கு எந்த சக்தியும் இல்லை. அது வெறும் சிலைதான் எனக் கூறினாள். முஸ்லிம்களாகிய நாங்கள் வணங்குவதுதான் உண்மையான இறைவன்! என்று கூறிவிட்டாள்.

அவள் இதை சர்வ சாதாரணமாக என்னிடம் சொல்லிவிட்டு சென்று விட்டாள். ஆனால் நான் அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன். என்னுடைய இன்னொரு நெருங்கிய தோழியிடம் இதைப் பற்றி கூறி மிகவும் கவலைப்பட்டேன். அதற்கவள், "சரி விடு. தெரியாமல் கூறியிருப்பாள்" என என்னை சமாதனப்படுத்தினாள்.

ஆனால் என் மனம் சமாதானம் அடையவில்லை. அதெப்படி அவள் இவ்வாறு கூறலாம்? எல்லாக் கடவுளும் ஒன்றுதானே? அவர்கள், அவர்களின் கடவுளைக் வழிபடுவதைப் போல நானும் என்னுடைய கடவுளை சிலைகளில் வழிபடுகிறேன்! என்று என் மனம் குமுறிக் கொண்டே இருந்தது.

பின் ஒரு நாள், நாங்கள் தங்கியிருந்த அறையில் திருக்குர்ஆன் இருப்பதைக் கண்டேன். நான் என் தோழிகளிடம் சென்று, "அது என்ன? இது தான் குர் ஆனா? நான் இதை பார்க்கலாமா?" என்று கேட்டேன். அதற்கவர்கள், "இல்லை குர்ஆனை சுத்தமில்லாமல் தொடக்கூடாது" என கூறிவிட்டார் கள். சரி என கூறிவிட்டு அமைதியாக இருந்து விட்டேன்.

அந்த குர்ஆனை எப்படியாவது படிக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் இருந்தது. அதன் படியே ஒரு நாள் வெள்ளிக்கிழமையன்று யாருமில்லா நேரத்தில் அவர்களுக்கு தெரியாமல் அந்த குர்ஆனை எடுத்து ஒரு சில பக்கங்களை வாசித்து விட்டு வைத்து விட்டேன். அதன் பின் நான் இதைபற்றி யோசிக்கவுமில்லை. இதைப்பற்றி அவர்களிடம் பேசிக்கொள்ளவுமில்லை. கல்லூரிப் படிப்பும்

நல்லப்படியாக முடிந்தது. நான் கல்லூரியை விட்டு விடைப்பெற்று வெளியில் வந்து திருநெல்வேலியில் பணியில் சேர்ந்தேன். அங்கேயும் எனக்கு ஒரு இஸ்லாமிய தோழி கிடைத்தாள்.

### டாக்டர் ஸாகிர் நாயக்

அவள் மூலம் டாக்டர். ஸாகிர் நாயக் அவர்களின் வீடியோக்களை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த வீடியோவில் டாக்டர் ஸாகிர் நாயக் அவர்கள் பைபிளில் இயேசு(அலை) அவர்களை எங்குமே இறைவன் என்று குறிப்பிடவில்லை. அவர் ஒரு இறைத்தூதர் தான் என்று பைபிளில் இருந்தே ஆதாரங்களை எடுத்துக் காட்டி பேசிக் கொண்டிருந்தார்.

அதன் பின் டாக்டர். ஸாகிர் நாயக்கின் இன்னொரு பேச்சுரையான "இந்து மதத்திற்கும் இஸ்லாத்திற்கும் உள்ள ஒற்றுமைகள்" எனும் வீடியோவை பார்ப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அந்த பேச்சுரையை அவர் ஆரம்பித்த விதமே என்னை மிகவும் ஈர்த்தது! அந்த ஆரம்ப உரையில் அவர்;

"நான் இங்கு இந்து மதத்திற்கும் இஸ்லாத்திற்கும் உள்ள ஒற்றுமைகள் எனும் தலைப்பில் இஸ்லாமியர்கள் சஜ்தா செய்கிறார்கள், இந்துக்களும் கோவில்களுக்கு சென்று சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்குகிறார்கள் என்பதைப் போன்ற விடயங்களைப் பற்றி பேசப்போவதில்லை. மாறாக இந்து மதத்தின் வேதங்களுக்கும், இஸ்லாமிய மதத்தின் வேதாமான குர்ஆனுக்கும் உள்ள ஒற்றுமைளைப் பற்றி நான் பேசப் போகிறேன்" என்று ஆரம்பித்தார்.

அப்போது தான் எனக்கு வேதங்களை அறிய வேண்டும் என்ற ஆர்வம் உண்டாயிற்று. மேலும் அந்த பேச்சுரையில் அவர் "அல்லாஹ் என்றால் யார்?" என்ற விளக்கத்தையும் கொடுத்தார்.

### அல்லாஹ் என்றால் யார்?

பொதுவாகவே எங்களைப் போன்ற முஸ்லிமல்லாத மக்களிடம் அல்லாஹ் என்பதன் புரிதல் எவ்வாறு இருக்கும் என்றால், "எப்படி இந்துக்களுக்கு ஒரு கடவுளோ, கிருஸ்தவர்களுக்கு ஒரு கடவுளோ, அது போல முஸ்லிம்களுக்கும் ஒரு கடவுள் உண்டு. அந்த கடவுள் பெயர் தான் அல்லாஹ்" என்பது தான் அல்லாஹ்வைப் பற்றின புரிதல் இருக்கும். மேலும் அல்லாஹ் என்பது அரேபியத் தேசத்துக் கடவுள் என்ற அளவில் தான் எங்களுக்கு அல்லாஹ்வைப் பற்றின புறிதல் இருந்தது.

ஆனால் அல்லாஹ் என்ற வார்த்தையையும், அதன் உண்ணதத்தையும் நான் புரிந்து கொண்ட போது எனக்கு உண்மையில் மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அல்லாஹ் என்பது அரேபியத் தேசத்துக்கு மட்டுமே சொந்தமான பெயரோ அல்லது முஸ்லிம்களுக்கு மட்டுமே சொந்தமான பெயரோ அல்ல. அது இறைவனுக்கான ஒரு பொதுவான பெயர்.

உதாரணத்திற்கு கடவுளை தேவன் - தேவி, என்றோ பகவான் - பகவதி என்று அழைக்கும் போது அந்த வார்த்தையை பெண் தன்மைக்கு மாற்றக் கூடிய வாய்ப்புகள் இருக்கிறது. அதே போல கடவுளை கடவுள்கள் என்று பண்மையில் அழைக்கும் வாய்ப்புகளும் உண்டு. ஆனால் அல்லாஹ் எனும் இறைவனின் பெயரை ஆண் தன்மையாகவோ, பெண் தன்மையாகவோ, பண்மையாகவோ மாற்ற முடியாது. இதுவே ஒரு அற்புதம்! எனக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

### இறைவனின் இலக்கணம்

மேலும் இஸ்லாம் இறைவனுக்கு கொடுத்திருக்கும் இலக்கணமும் என்னை கவர்ந்தது. ஆம் உதாரணத்திற்கு நீங்கள் இந்து மதத்தை கவனியுங்கள்! அதில் சிவன்-பார்வதி பிரதான கடவுளாக இருப்பார்கள். அவர்களின் பிள்ளைகளாக முருகன் - பிள்ளையார் இருந்தார்கள் என்றும் இந்து மதம் கடவுளைப் பற்றி கூறுகிறது. மேலும் இந்து மதத்தில் எண்ணிலடங்கா கடவுள்கள் அவர்களுக்கு எண்ணிலடங்கா உறவினர்கள்.

இந்து மதத்தில் இறைவனை மனிதனின் தோற்றத்தில் சித்தரிக்கிறார்கள். ஏன் இறைவன் மனிதனைப் போன்று இருக்க வேண்டும்? அப்படியென்றால் மனிதனைப் போன்று தான் இறைவனா? நம் கண் முன்னே ஒரு சிலையை செதுக்குகிறார்கள். பின் அந்த சிலையை கடவுள் என்று வழிபடுகிறார்களே? அந்த சிலை என்றாவது நம்மிடம் வந்து வாயைத் திறந்து பேசியிருக்கின்றதா? நாம் படைக்கும் பொருட்களை அது சாப்பிட்டிருக்கின்றதா? எத்தனையோ கோவில்களில் உண்டியலை உடைத்து திருடுகிறார்களே அப்போது அந்த சிலை அந்த திருட்டை தடுத்திருக்கின்றதா? இது என்ன ஒரு முட்டாள் தனம் என்று எனக்கு நானே கேள்விகளை எழுப்பிக் கொண்டேன்.

பின்பு இறைவன் மனிதனாக இருக்க முடியாது. அவனுக்கு இணையாக யாரும் இருக்க முடியாது. அவனுக்கு மனைவியோ, பிள்ளைகளோ இருக்க முடியாது. என்ற இஸ்லாத்தின் இறைவனைப் பற்றிய இலக்கணம் எனக்கு விளங்கியது. அதன் பின் எல்லாம் வல்ல இறைவனை ஏற்றுக் கொண்டு இஸ்லாத்தை என் வாழ்க்கை நெறியாக ஏற்றுக் கொண்டேன். அல்ஹம்துலில்லாஹ்.

**ஹிஜாபிற்குள் நான்!**

இஸ்லாத்தை ஏற்ற பின் எனக்கு ஹிஜாப் அணிய வேண்டும் என்று நீண்ட நாள் ஆசையாக இருந்தது. ஆனால், நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை பகிரங்கமாக வெளிப்படுத்தாததால் நான் புர்கா அணிவதை தவிர்த்து வந்தேன்.

ஒரு நாள் துணிச்சலாக புர்கா அணிந்துக் கொண்டு சென்றேன். அப்போது என்னுடைய அத்தையின் மகன் அவன் என்னுடன் தான் படித்து வந்தான். அவனிடம் என்னுடைய தோழிகள் என்னைப் பற்றி தவறான முறையில் கூறியுள்ளனர். அவன் உடனே என்னை போனில் தொடர்பு கொண்டு கோபமாக

“உனக்கெல்லாம் அசிங்கமாகவே இல்லையா? இந்த முஸ்லிம் ஹிஜாபை போட்டுகிட்டு வந்து ஏன் என்னை அசிங்கப்படுத்துர” என்று பயங்கரமாக திட்டிவிட்டான். நான் அதிலிருந்து அவனிடம் பேசுவதையே நிருத்தி விட்டேன்.

நான் என்ன அப்படி பெரிய தவறு செய்தேன்? ஒரு பெண் இன்றைய சூழ்நிலையில் சாதாரன உடையில் வீதியில் நடந்து சென்றால் கூட அந்த பெண்களை ஒரு காட்சிப் பொருளாகத்தான் பார்க்கிறார்கள்.

பெண்களாகிய நாம் நினைக்கின்றோம்! நாம் அழகாக உடை உடுத்த வேண்டும். அது மற்றவர்களை கவரும் வகையில் இருக்க வேண்டும் என்று. அனால் நாம் என்னதான் உடை அணிந்தாலும் நம்மை ஒரு கேவலாமான பொருட்காட்சிப் பொருளாகத்தான் இந்த சமூகம் பார்க்கின்றது. எனக்கு என் தோழிகளையெல்லாம் பார்க்கும் போது பாவமாக இருக்கும். ஆம்! அவர்கள் அழகாக உடை உடுத்திக் கொண்டு வெளியில் செல்வார்கள் ஆனால் பார்ப்பவர்களின் கண்களுக்கு அந்த அழகான உடை மட்டும் தெரியாது என்று அவர்களுக்கு தெரியவில்லை!

ஆனால் நம் உடலை முழுமையாக மறைத்துக் கொண்டு இஸ்லாமிய ஹிஜாபில் சென்று பாருங்கள். நம்மை யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள். இது அல்லாஹ்வால் வழங்கப்பட்ட நமக்கான பாதுகாப்பு.

**அன்பான முஸ்லிம்களுக்கு**

நாம் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தக்கூடிய மக்களாக இருக்கிறோமா? என்ற ஒரு கேள்வியை நமக்குள் நாம் எழுப்ப வேண்டும். நாம் அல்லாஹ்வை தொழுதாலும், தொழாவிட்டாலும் நமக்கான கடமைகளையும், நன்மைகளையும் அல்லாஹ் நமக்கு கொடுக்கின்றான். அப்பேற்பட்ட அல்லாஹ்விற்கு நாம் நன்றி செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

மேலும் எல்லாம் வல்ல இறைவன், மனித சமுதாயத்திற்கு யாருக்கும் கொடுக்காத ஒரு பாக்கியத்தை நமக்கு கொடுத்திருக்கின்றான். அதுதான் இறுதி வேதமான அல்குர்ஆன். இந்த குர்ஆனை முஸ்லிம்களாகிய நாம், நம் தாய் மொழியில் படித்து விளங்க வேண்டும்.

எங்களைப் போன்றவர்கள் கூட வாழ்க்கையின் பாதியில் தான் இஸ்லாத்திற்குள் வருகின்றோம். ஆனால் முஸ்லிம்களாகிய நீங்கள் பிறந்ததிலிருந்தே இந்த மார்க்கத்தில் இருக்கிறீர்கள். ஆனால் இந்த மார்க்கத்தை விளங்காமல் இருக்கிறீர்கள் என்பதுதான் வேதனை. ஆதலால் புரிந்து கொள்ளுங்கள் இந்த மார்க்கத்தை பின்பற்றுங்கள். நம் செயல்களைப் பார்த்துத்தான் பல பேர் இஸ்லாத்தை விளங்கிக் கொள்வார்கள்.

நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்;

“உண் அண்டை வீட்டுக்காரன் பசியோடு இருக்கும் போது நீ வயிறு முட்ட உண்ணக்கூடாது” என்று.

ஆனால் முஸ்லிம்களாகிய நமக்கு நம் அண்டை வீட்டார் யார் என்று கூட தெரியவில்லை. அப்படியே தெரிந்தாலும் அவர்களிடையே இந்த மார்க்கத்தை எடுத்து வைக்கும் பணியை செய்ய தவறி விடுகின்றோம்.

அல்லாஹ் தனது இறுதி வேதத்தில் “இறையச்சம் உடையோர்க்கு மட்டும் தான் என்னுடைய உதவி கிடைக்கும்” என்று கூறுகிறான். நாமெல்லாம் இறையச்சம் உள்ள முஸ்லிம்களாக இருக்கின்றோமா? என்று நம்மை நாமே சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நம் மேல் அதிகம் அன்பு வைத்திருப்பவர்களை நாம் இந்த உலகைவிட அதிகமாக நேசிக்கின்றோம். ஆனால் நம்மை படைத்த இறைவன் நம் மேல் தாயை விட எழுபது மடங்கு அதிகமாக அன்பு வைத்திருக்கின்றான். ஆனால் அவன் மேல் நம் பாசம் வைக்க மறுக்கின்றோம். அவனுக்கு கட்டுப்பட மறுக்கின்றோம்.

ஆதலால் முஸ்லிம்களாகிய நாம் நம்மைப் படைத்த அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டு வாழ்ந்து அவனுக்கு நன்றி செலுத்தக் கூடிய மக்களாக மரணிப்போம். இன்ஷா அல்லாஹ்.

Source:
https://www.youtube.com/watch?v=vbyXALLuS6E&list=PLicc_SB5rYoeY6spZntW6UFPtF_4RjWQR&index=7

**- த. அஷ்ரஃப் இஸ்லாம்**

# பிப்ரவரி மாதம் முதல் நாள்

# உலக ஹிஜாப் நாள்




பெண்கள் தங்களை முழுமையாக மறைத்துக் கொள்ளும் பர்தாவுக்கு எதிராக மொத்த பெண்ணியவாதிகளும் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறார்கள்.

பிரான்ஸ் என்ற நாட்டில் பர்தாவுக்கு தடை சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அமெரிக்கா தொடக்கக் காலம் தொட்டே இஸ்லாத்திற்கு எதிராக வரிந்துக் கட்டிக் கொண்டு நிற்கின்றது. அமெரிக்காவில் புர்காவிற்கு தடையில்லை. ஆனால் புர்கா அணிந்து செல்லும் பெண்கள் கடுமையான கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்றார்கள்.

அவர்கள் பயணிக்கும் பேருந்துகள், அவர்கள் கல்வி கற்கும் கல்விக் கூடங்கள், கல்லூரிகள், பணி செய்யுமிடங்கள், இப்படி அங்கிங்கெனாதபடி எங்கும் கெடுபிடிகள். குரூரம் நிறைந்த வார்த்தைகளைக் கொட்டி அவர்களின் இதயங்களை குத்திப் பிளப்பது, அவர்களை நிலைகுலையச் செய்வது என ஹிஜாப் அணிந்த பெண்களின் வாழ்வை ரணமாக்கி வந்தார்கள்.

இதையெல்லாம் தனது வாழ்க்கையில் எதிர்கொண்ட பெண்மணி தான் நஸ்மா கான்.

அமெரிக்காவை வசிப்பிடமாகக் கொண்ட இந்த நஸ்மா கான், 9/11 என் அடையாளப்படுத்தப்பட்ட அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்ப்பிற்கு பின், எதிர்கொண்ட ஏளனங்களும் ஏகடியங்களும் ஏராளம்! தாராளம்!!

இவையெல்லாம் பெரும் அதிர்வுகளை அந்த சகோதரியிடம் ஏற்படுத்தினாலும், அவர் மனம் சோர்ந்து போகவில்லை. எழுந்து நிற்பது என்றும் எதிர்த்து போராடுவது என்றும் முடிவு செய்தார்.

நாள் ஒன்றை தேர்ந்தெடுத்து அதை ஹிஜாப் நாள் என அறிவித்தாள். அந்த நாள் பிப்ரவரி 2013ஆம் ஆண்டில் தொடங்கி அதனை இன்றளவும் திறம்பட நிறைவேற்றி வருகின்றார்.

இந்த உலக ஹிஜாப் தினத்தின் முக்கியக் கூறுகள்

“ஹிஜாப் (என்ற பெண்களின் உடலை முழுமையாக மறைத்திடும் ஆடையை) அணியும் பெண்கள், இந்த ஹிஜாப் நாங்கள் தேர்ந்தெடுத்துக்



கொண்ட ஆடைதான். யாரும் எங்கள் மீது இதை திணித்திடவில்லை. இது எங்கள் உரிமை. இதில் தலையிட யாருக்கும் அனுமதியில்லை" என்பதை உரக்க முழங்கிட வேண்டும்.

ஹிஜாப் தான் பெண்களின் பெருமையையும் கண்ணியத்தையும் பேணுவது, காப்பது, என்பதை உலகம் அறிந்திட செய்திட வேண்டும்.

பிப்ரவரி ஒன்று - இந்த உலக ஹிஜாப் நாளில், இதர மத நம்பிக்கைகளைக் கொண்ட பெண்களும் ஹிஜாப் அணிந்து, எங்களுடன், தங்கள் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் காட்டிட வேண்டும். அதன் மூலம் பெண்கள் தங்கள் உடலை முழுமையாக மறைப்பதின் முக்கியத்துவத்தை உலகறிந்திட செய்திட வேண்டும்.

இதர மத நம்பிக்கையை உடையவர்கள், உலக ஹிஜாப் நாள் அன்று ஹிஜாப் நாள் அன்று ஹிஜாப் - ஐ அணிந்து வெளியே வரும் போது பல அனுபவங்கள் ஏற்படும் அதில் ஒன்று ஹிஜாப் அணிந்த பெண்கள் படும் அல்லல்களை அனுபவ ரீதியாக, உணர்வார்கள். இதனால் ஹிஜாப் அணிந்த பெண்களை ஏளனம் செய்பவர்களுக்கு எதிராக அணிதிரளும் பெண்களின் எண்ணிக்கை பெருகும். இந்த ஏளனங்கள் இப்போது குறையும், பின்னர் ஒரு முடிவுக்கு வரும்.

இந்த நாளை நாமும் ஹிஜாப் நாளாக அனுஷ்டிப்போம். உலக மங்கைகளுக்குக் கண்ணியமான ஆடைகளை அணிந்திட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவோம்.

"மஜ்லிசு நிசா"

சென்னை

சாதனை மங்கை நஸ்மாகான் அவர்களின் முயற்சிகள் 2013ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றவை. இந்த முயற்சிகள் பலவிதமான அனுபவங்களைப் பெற்றுத் தந்துள்ளது.

பல பெண்கள் - சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இந்த நாளில் ஹிஜாப் அணிந்து, ஹிஜாப்பிற்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

இந்த ஒரு நாளில் ஹிஜாப் அணிந்து பின்னர் வாழ்க்கை முழுவதும் ஹிஜாப் அணிந்து வாழும் சகோதர சமுதாயத்து பெண்கள் பலர். இவர்களில் சிலர் இஸ்லாத்தை ஏற்றுள்ளார்கள்.

இந்த வருடம் உலக ஹிஜாப் நாளில் பிப்ரவரி 1இல் நியூ மெக்ஸிகோ பல்கலைக் கழக மாணவிகள் கலந்து கொள்வதாக முடிவெடுத்துள்ளார்கள். சென்ற ஆண்டும் இந்தப் பல்கலைக் கழக மாணவிகள் பெருவாரியாகக் கலந்து கொண்டார்கள்.

முஸ்லிம் மாணவிகள், சகோதர சமுதாயத்தைச் சார்ந்த மாணவிகளை ஹிஜாப் அணிய செய்து செல்ஃபி எடுத்து சமூக வலைதளத்தில் போடச் செய்கிறார்கள்.

ஹிஜாப் அணிந்த சார ரிவாலி என்ற முஸ்லிமல்லாத பெண்மணி "நான் ஹிஜாப் - இல் மிகவும் அழகாக இருக்கின்றேன் என்று மகிழ்ச்சிடைகிறாள்.

இந்த வருடம், சென்ற வருடத்தைப் போல் வெர்ஜினியா எனுமிடத்தில் உள்ள புரூஃபீல்டு கல்லூரி மாணவிகளும் இதில் கலந்து கொள்ள உள்ளார்கள்.

**- எம்.ஜி.எம்.**

# 10 இஸ்லாம்

## அரசியல் | அதிகாரம் | அரபுலக எழுச்சி

ஆட்சியிலிருந்து முபாரக் வெளியேற்றப்பட்ட பின் நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை இராணுவம் ஏற்றுக்கொண்டது. குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியையும் அளித்தது. 2011 ஜனவரி 28- இல் புரட்சியை ஆதரிக்கின்றோம் என்று அறிக்கை விட்டது MBH. ஆரம்பத்தில் மக்களோடு கலந்து நின்ற MBH உறுப்பினர்கள், பின்னர் போராட்டதை வழி நடத்தினர். எதிர்கால தேசிய அரசியல் விவாதத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்பதற்காக தங்களுடைய உறுப்பினர்களை தொடர்ந்து இராணுவத்திடம் அனுப்பியது MBH.

சிறையிலிருக்கும் தங்கள் உறுப்பினர்களை விடுவிக்க வேண்டும், புதிய தேர்தலை நடத்த வேண்டும், அரசியல் சீர்திருத்தம் வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை ஆரம்பத்தில் MBH வைக்கவில்லை. பின்னர், முன்னாள் பிரதம மந்திரி அஹ்மது சபீக், துணை ஜனாதிபதி சுலைமான் உட்பட முபாரக்கின் நெருங்கியவர்கள் அனைவரும் அதிகாரத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்று இஸ்லாமியவாதிகள் கோரிக்கை விடுத்தனர். நேர்மையான முறையில் தேர்தல் நடந்தால் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்று நம்பிக்கை கொண்டிருந்தது MBH.

மக்கள் விரும்பியபடி அரசியலமைப்பின் சில பிரிவுகளில் திருத்தங்கள் கொண்டு வருவதற்காக தாரிக் பசர் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது ஆயுத படைகளின் சுப்ரீம் கவுன்சில் (Supreme Council of Armed Forces SCAF).

முதலில் அரசியலமைப்பில் மாற்றங்களை கொண்டு வர வேண்டுமா அல்லது முதலில் தேர்தலை நடத்த வேண்டுமா என்று முடிவு செய்ய ஓட்டெடுப்பும் நடந்தது. புதிய அரசியலமைப்பை கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையே பலர் முன் வைத்தனர். ஆனால் இந்த கோரிக்கை MBH-ஆல் நிராகரிக்கப்பட்டது. தேர்தலை முன்கூட்டியே நடத்த வேண்டும் என்று விரும்பியது MBH. தேர்தலில் நிச்சயமாக பெரும்பான்மையை பெற்று விடுவோம் என்று உறுதியுடன் இருந்தது MBH. எனவே தேர்தலுக்கு பின் அரசியலமைப்பை தங்களின் முடிவின் படி வடிவமைக்கலாம் என்று MBH விரும்பியது பலரும் அறிந்த ஒன்றே. மற்ற அரசியல் கட்சிகள் இதனாலேயே அரசியலமைப்பை முதலில் கொண்டு வரவேண்டும் என்று விரும்பினார்கள்.

தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்திடலாம் என்ற முழு முனைப்புடனும் வேகமாகவும் செயல்பட்டு இராணுவத்திற்கு அழுத்தத்தை கொடுத்தது MBH. ஆனால் நாட்டின் அரசியல் விவகாரங்களில் கவனம் செலுத்த விருப்பம் இல்லை என தொடர்ச்சியாக கூறி வந்தது இராணுவம். நாட்டில் இயல்பு நிலையும் அரசியல் நிலைத்தன்மையும் திரும்பிய பின்னர் எங்கள் பணிகளுக்கே சென்று விடுவோம் என்று ஒரு தனிப்பட்ட உரையாடலில் கூறினார் SCAF-இன் தலைவர் தன்தாவி.

ஏப்ரல் 6 இயக்கம் நடத்திய போராட்டங்களில் பங்கெடுக்க வேண்டாம் என்று ஆரம்பத்தில் தங்களுடைய உறுப்பினர்களுக்கு கண்டிப்பாக சொல்லியது MBH. ஆனால் எராளமான MBH இளைஞர்கள் போராட்டங்களில் பங்கெடுத்து இருந்தனர். சிலர் அணி வகுப்புகளுக்கு தலைமையும்


தாங்கினர். அரசுடன் எந்தவிதமான பேச்சு வார்த்தைகளிலும் தலைமை ஈடுபட வேண்டாம் என்று இளைஞர்கள் விரும்பினர். ஏனெனில் போராட்ட கூட்டத்தின் இதய, நாடி துடிப்பாக அவர்களும் இருந்தனர். அரசியல் லாபங்களுக்காக தேசத்தின் நலனை அடகு வைப்பதாக மூத்த தலைவர்களை குற்றம் சாட்டினர். MBH - இன் இளைஞர்கள் மூத்த தலைவர் களுக்கும் இளைஞர்களுக்கும் இடையே தலைமுறை வேறுபாடு பகிரங்கமாக தெரிந்தது. இளைஞர்களை திருப்திபடுத்தும் விதமாக, தனது முந்தைய முடிவில் இருந்து பின்வாங்கியது MBH. அதாவது, இராணுவத்திடம் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். குறிப்பாக, புதிய துணை ஜனாதிபதி உமர் சுலைமானிடம் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்ற முடிவில் இருந்து பின்வாங்கியது.

உமர் சுலைமானுடன் இரகசிய பேச்சு வார்த்தையில் MBH ஈடுபட்டது என்று கூறி அதன் முக்கிய தலைவரான ஹைத்தம் அபு கலீல் MBH-லிருந்து வெளியேறினார். முபாரக்கின் வெளியேற்றத்திற்கு பின், அரசியல் நடவடிக்கைகளில் ஆழமாக இறங்கியது MBH. Freedom and Justice party என்ற அரசியல் பிரிவை ஆரம்பிப்பதாக அறிவித்தது MBH. முஹம்மது முர்சி, முஹம்மது ஹுசைன், முஹம்மது கத்தானி ஆகிய மூன்று பேரை தலைமையாக கொண்டு FJP ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், இயக்கத்தில் அரசியல் பிரிவு தனியாகவும் சமய விவகாரங்கள் தனியாகவும் செயல்படுவதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பேருக்கு பதிலாக மற்றவர்களை நியமிக்க FJP தேர்தலையும் நடத்தியது.

இஸ்லாமியவாதிகளை தோற்கடிப்பதற்காக எதிர்தரப்பினர் பலர் இணைந்து செயல் பட்டனர். ஏதோ இதுவரை உலகில் இஸ்லாமிய வாதிகள் ஆட்சி செய்யாதது போலவும், அவர்களின் ஆட்சியில் மக்கள் நன்றாக வாழாதது போலவும் இஸ்லாமியவாதிகள் ஆட்சியில் வந்து விட்டால் நாடு பின்னடையும் என்றும் சிலர் கருத்து கூறினர்.

இத்தருணத்தில் தான், MBH - இன் தலைவர்களுள் ஒருவரான சத்தார் அமைதியான முறையில் அதிகார மாற்றம் ஏற்படும் என்றும் குடிமக்களுக்கு MBH செய்ய வேண்டிய கடமையையும் வலியுறுத்தினார்.

“நிறுவனங்களை உருவாக்ககூடிய, சட்டங்களின் மீது மதிப்பு ஏறபடுத்தக் கூடிய, மனித உரிமைகள், சிறுபான்மையினர் உரிமைகளை பாதுகாக்கக் கூடிய, நீதிமன்றங்கள் சுதந்திரமாக இயங்கக்கூடிய ஒரு நவீன ஜனநாயக அமைப்பை ஏற்படுத்துவதே



சத்தார்

எங்களின் குறிக்கோள். இவையனைத்தும் இன்று வளர்ந்த நாடுகளில் காணப்படும் வெளிப்படையான தன்மையின் அடிப்படையில் அமையும்” என்றார் சத்தார்.

அரசியல் மற்றும் சித்தாந்த அடிப்படையில் MBH - இக்குள்ளேயே பிளவுகள் உண்டானது. பிளவுபட்ட அணியினர் தமக்குள் ஒன்று சேர்ந்து கொண்டு ஒருவர் மற்றவரை குற்றம் சாட்டினர். டாக்டர் இப்ராஹிம் ஃஸ்ப்ரானி இன்னாதா என்ற தனிக்கட்சியை தொடங்கினார். 1970-80களில் MBH-இன் சீர்திருத்தங்களை கொண்டு வந்த முக்கிய தலைவர்களில் அவரும் ஒருவர்.

எகிப்தின் துணை ஜனாதிபதி சுலைமானுடன் இரகசியமாக ஆலோசனையை MBH நடத்தியது ஏற்று கூறி ஹைத்தம் அபுகலீல் இயக்கத்திலிருந்து வெளியேறி அல் ரியாதா என்ற புதிய கட்சியை நிறுவினார். அதே வேளையில் இஸ்லாமிய அரசை நிறுவுவதே MBH - இன் அடுத்த இலக்கு என அரசியலமைப்பு சீர்திருத்த கமிட்டியின் ஒரு உறுப்பினரும் MBH-இன் உறுப்பினருமான சாலிஹ் கூறினார். அவர் இப்படி கூறியபின் பல தரப்பிலிருந்தும் கண்டனங்கள் எழுந்ததையடுத்து வலுக்கட்டாயமாக மன்னிப்பு கோர வைக்கப்பட்டார் அவர்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்

**- அபூஹாசின்**



# தலைமைத்துவமில்லாத உம்மத்தும்! இஸ்லாமிய இயக்கங்களின் கடமையும்!!

முஸ்லிம் நாடுகளில் பெரும்பானமையின்ராக வாழும் முஸ்லிம்களதும், அந்நிய நாடுகளில் சிறுபான்மையினராக வாழும் முஸ்லிம்களதும் முக்கிய பிரச்சினை அவர்களுக்கென்று ஒரு தலைமை இல்லாததாகும்.

முஸ்லிம்களாகிய நாம் உலக ஜனத்தொகையில் மிகவும் பெரும்பான்மையினராக இருந்த போதிலும் இதை செய்யுங்கள் என்றோ, செய்யாதீர்கள் என்றோ அல்லது குரல் எழுப்புங்கள் என்றோ, வாய்மூடி மௌனமாக இருங்கள் என்றோ அல்லது இடப் புறமாக நகருங்கள் என்றோ கட்டளையிட்டு நம்மை இயங்கச் செய்யும் ஒரு தலைமைத்துவம் நமக்கில்லை இப்போது!

இஸ்லாமிய அகீதாவின் அடிப்படையில் நம்மை ஒரு கொடியின் கீழ் வாழவைக்கும் ஒரு கிலாபத் அமைப்பு எங்களுக்கு இருந்தது. ஒரே உம்மத்தவர்கள் என்ற முறையில் எங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு மத்திய நிலையாக அது விளங்கியது.

ஆனால் முஸ்லிம்கள் அனைவரையும் ஒரே உம்மத்தாக ஒன்றிணைத்து வந்த அந்த கிலாபத் அமைப்பை தகர்க்க எதிரிகள் செய்த சதிகள் நிறைவேறி உலகளாவிய நமது பலமான கோட்டையைத் தகர்ப்பதில் அவர்கள் வெற்றி கண்ட போது நாம் சிதறிவிட்டோம். அன்று முதல் நம்மை ஒரு தலைமைத்துவத்தின் கீழ் கொண்டு வருவது அல்லது நம்மை ஒரே கொடியின் நிழலில் ஒன்று கூட்டுவது சாத்தியப்படவில்லை!

ஆம்! நாம் கிலாபத்தை இழந்துவிட்டோம். அதற்குப் பிரதியீடாக இதுவரை நம்மால் எதையும் உருவாக்க முடியவில்லை. எனவே நாம் தலைமைத்துவமின்றி வாழ்ந்து வருகிறோம்!

கிறிஸ்தவர்களுக்கு அவர்கள் ஏற்றுக் கொண்ட ஒரு தலைமைத்துவம் உள்ளது. சமய அடிப்படையில் அமைந்த அந்த தலைமைத்துவத்தின் கீழ் அதை தூக்கிப் பிடித்துள்ள பல நிறுவனங்களும் அவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் மனிதர்களும் அமெரிக்காவிலும் இடதுசாரி நாடுகள் சிலவற்றிலும் இருப்பதைப்

போன்ற பலமான பொருளாதார வளமும் உண்டு. முஸ்லிம் உலகம் உட்பட உலக நாடுகள் அனைத்திலும் மிக உற்சாகமாகவும் திட்டமிட்ட முறையிலும் செய்யப்படும் மிஷனரிகளும் அவர்கள் மத்தியில் காணப்படுகின்றன.

ஆனால் நமது நிலை என்ன? எங்களைக் கட்டுப்படுத்தும் கலீபாவுமில்லை. அவர்களைப் போல எங்களை வழி நடத்தும் ஒரு மதத் தலைவரும் இல்லை. நமது நிலை அற்பர்கள் கையில் அகப்பட்ட அநாதைகளைப் போன்று பரிதாபரகரமானது!

ஒரு காலத்தில் முஸ்லிம்களிடையே "ஷைகுல் இஸ்லாம்" - இஸ்லாமியத் தலைவர் என்ற பெயரில் ஒரு தலைமைத்துவம் இருந்தது. இவ்விதமான ஒரு புரோகித அமைப்பு இஸ்லாத்தில் உள்ளதல்ல ஆயினும், சில அறிஞர்கள் அவர்களது அறிவு பண்பாடு, சீரிய நடத்தை, தியாகங்கள் என்பனவற்றின் காரணத்தால் முஸ்லிம் பொதுமக்களால் இவ்வாறு கவுரவிக்கப்பட்டார்கள். ஆனால் இன்று அவ்விதமான அமைப்பு நமக்கில்லை.

உலமாக்கள் ஆட்சியாளர்களின் அடிவருடிகளாகவும், சத்தியத்தை தூக்கிப் பிடிப்பதை கைவிட்டதுமின்றி அசத்தியத்துக்கு வக்காலத்து வாங்குபவர்களாகவும் மாறிவிட்டனர். எனவே, "இவர் தான் ஷைகுல் இஸ்லாம்" என்று பெயருக்கேனும் இருவரை காண்பதற்கில்லை. இந்நிலைக்கு விதிவிலக்காக உள்ள உலமாக்கள் எவராவது எங்காவது காணப்பட்டால் ஆட்சியாளர்கள் அவர்களை விலை கொடுத்து வாங்கி தமது கைப்பொம்மைகளாக்கிக் கொள்கின்றனர்.

இவர்களில் எவராவது அவர்களின் வலைகளில் சிக்காவிட்டால் அவர்கள் மீது சேற்றை வீசி அவமானப்படுத்தி விடுகிறார்கள். அல்லது பொல்லாத பழி பாவங்களைச் சுமத்தி, மானபங்கப்படுத்தி பொதுமக்களை விட்டும் அவர்களைத் தனிமைப்படுத்திவிடுகின்றார்கள்.

எனவே உம்மத் இழந்துவிட்ட உண்மையான கிலாபத் அமைப்பு உருவாகும் வரை ஒவ்வொரு நாட்டிலும் உள்ள இஸ்லாமிய இயக்கம் அங்கு வாழும் முஸ்லிம்களின் தலைமைத்துவ வெற்றிடத்தை நிரப்பவேண்டும்.

இதற்காக உலமாக்களின் நன்மதிப்பையும் உம்மத்தவரின் கீழ்படிதலையும் பெற்ற, பிரச்சினைகளின் போது அவரின் வழிகாட்டுதலையும் கட்டளைகளையும் மனப்பூர்வமாக எல்லா மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடியவரான உண்மையான ஒரு ஷைகுல் இஸ்லாம் உருவாகும் வரை இஸ்லாமிய இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு மத்தியில் உள்ளவர்களில் மிகவும் பொருத்தமான ஒருவரைக் கொண்டு இப்பதவியை அலங்கரிக்கச் செய்து சமூகத்தில் கட்டுப்பாட்டை நிலவச் செய்ய வேண்டும்.

இது தற்காலத்தில் இஸ்லாமிய இயக்கங்கள் மீது சார்ந்துள்ள மிகவும் முக்கியமான பொறுப்பாகும்.

எனவே, சர்வதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் காலத்தின் தேவைகளை உணர்ந்து உம்மத்தவர்களின் வளங்களை இஸ்லாமிய இயக்கங்கள் மதிப்பிட்டு அவற்றை ஒன்று திரட்டி இஸ்லாம் விரும்பும் உன்னதமான ஓர் எதிர்காலத்தை உருவாக்கும் முயற்சியில் முழுமையாக உழைக்க வேண்டும்.

"யா அல்லாஹ் எமது நேற்றைய தினத்தை விட இன்றைய தினத்தை சீராக்குவாயாக; எங்களது நாளைய தினத்தை இன்றைய நாளை விட சிறந்ததாக தருவாயக; எமது அனைத்து காரியங்களின் முடிவையும் அழகானதாக ஆக்குவாயாக!"

என்பதே இஸ்லாமிய இயக்கங்களின் பிரார்த்தனையாக இருக்க வேண்டும்.

**டாக்டர். யூசுஃப் அல் கர்ளாவீ**


**சகோதர சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கு இலவச**

# திருக்குர்ஆன்

**தமிழ் பிரதியைப் பெற கீழ்கண்ட முகவரிக்கு எழுதவும்.**

52/1, **மண்ணடி தெரு,**
**மண்ணடி, சென்னை** - 600001.

**தொலைப்பேசி:**

**81481 29887**

**இந்த இலவசம் முஸ்லிம்களுக்கு கிடையாது.**

# நெருக்கடிக்குள்ளாக்கப்படும் பள்ளிவாசல்கள்



கடலூர் மாவட்டம் பரங்கிப் பேட்டையில் கடந்த 4.01.2019 (வெள்ளிக்கிழமை) அன்று ஜூம்ஆ தொழுகைக்கு பின், வாத்தியாப்பள்ளி நிர்வாகத்தில் உள்ள ஒருவர் எங்களிடம் வந்து இரவு நேரங்களில் பள்ளியில் அமர வேண்டாம் என்று நான் முன்னதாக சொல்லியிருந்தேன். இதை நான் சொன்னால் தவறாக நினைப்பீர்கள் என்று சொல்லி கடலூரிலிருந்து CID அலுவலகத்திலிருந்து என்னை தொடர்புக் கொண்டார்கள்.

அவரிடம் பேசியதை நீங்களும் கேளுங்கள் என்று சொல்லி வாய்ஸ் ஆடியோ ஒன்றை போட்டுக் காட்டினார். இந்த பள்ளிவாசலின் கட்டிடங்கள் புதிதாக கட்டப்பட்டதா?, நிருவாகிகள் மாறி விட்டார்களா?, இரவு நேரங்களில் பள்ளிவாசலில் யாராவது அமர்கின்றார்களா? அமரக் கூடாது என்றதற்கு பள்ளி நிர்வாகத்தை சார்ந்தவர் பதில் கொடுத்துள்ளார்.

அந்த ஆடியோவை ஒருவரிடம் காட்டி இனி இரவு நேரங்களில் (அதாவது இஷா தொழுகைக்கு பின்) பள்ளிவாசல்களில் யாரும் அமர வேண்டாம் என்று சொல்லியுள்ளார் இதை கேட்டவர் எங்களிடம் சொன்னார். வேறு பள்ளிவாசல்களில் சொன்னார்களா என்று விசாரித்தோம். அப்பா பள்ளி நிர்வாகியிடம் பேசும்போது, ஆமாம் என்னையும் தொடர்புக் கொண்டு பேசினார்கள் என்றார்.

மேலே கேட்கபட்ட கேள்விகளே கேட்டுள்ளனர். நானும் பதில் கொடுத்துவிட்டேன் என்றார். ஏன் இதை நீங்கள் இப்படி விட்டடீர்கள் விசாரிக்க வில்லையா என்றேன். நானும் விசாரிக்க சொல்லிருக்கிறேன் என்றார். முன்னர் இதுபோன்ற நெருக்கடியின் போது வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் சார்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டோம்.

பின்னர் பரங்கிப்பேட்டை உளவுத்துறையைச் சார்ந்த பரந்தாமன் என்கிற அதிகாரியை தொடர்புக் கொண்டபோது அவர் எங்களிடம் அப்படி ஏதும் இருக்காது, இருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்றார். நான் இதை விசாரித்து சொல்கிறேன் என்றார். இன்றுவரை எந்த பதிலையும் அவர் சொல்லவில்லை. இவரை மூன்று முறை தொடர்புக் கொண்டும் சரியான பதிலை தரவில்லை. இதை பார்க்கும்போது, இதன் பின்னணி என்ன என்று புரியாத புதிராக உள்ளது. பிறகு ஒருநாள் இவரைத் தொடர்புக் கொண்டு பேசும்போது, ஊர் இளைஞர்கள் மத்தியில் இது பெரிய பிரச்சனையாக பார்க்கபடுகின்றது வாட்ஸ்ஆப்களில் இதை பற்றி எழுத சொல்கின்றார்கள் என்றேன். அப்போது அவர், நீங்கள் இதைப் பற்றி ஏதும் தவறாக எழுதிவிட வேண்டாம் நான் விசாரித்து சொல்கிறேன் பிறகு எழுதுங்கள் என்றார். இவரின் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்து அமைதி காத்தோம் இவர் சொல்லியதை செய்தாரா? இல்லை. அதன்பின்னும் பலமுறை இவரை தொடர்புக் கொண்டபோது, நான் நாளை விசாரித்து சொல்கிறேன், அங்கே சென்றுவிட்டேன், இன்று ஒருவரை விசாரிக்க சொல்லியிருக்கிறேன் என்றார். எந்த பதிலையும் கொடுக்கவில்லை.

நாங்கள் பரங்கிப்பேட்டை காவல் நிலையம் சென்று எங்களுக்கு வந்த மொபைல் நம்பரைக் கொடுத்து கேட்டோம். காவல்துறையினர் இது கடலூர் CID உளவுத்துறை அலுவலக நம்பர்தான் என்றார்கள். தமிழகத்தில் இருக்கும் பள்ளிவாசல்களை குறிவைத்து CID, SP CID உளவுத்துறை அதிகாரிகள் நெருக்கடிகளை கொடுக்க காரணம் என்ன? பள்ளி நிர்வாகிகளின் கவனத்திற்கு இதுப் போன்ற பிரச்சனைகளை நீங்கள் எதிர்க் கொள்ளும்போது இதை நிர்வாக பிரச்சனையாக பார்க்காமல் சமுதாய பிரச்சனையாகவும், ஊர் பிரச்சனையாகவும் பார்க்க வேண்டும்.

விஸீப்புணர்வுடன் இருப்போம் பள்ளிவாசல்களை பாதுகாப்போம்.

ப.பேட்டையிலிருந்து **ந.நி.,**



# ஓம் சக்தி

# இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை

**20-6-20, ஞாயிற்றுக்கிழமை மாலையில், பொட்டல் புதூரிலே தெற்குப் புது மனைத் தெருவில், எல்லா வகைகளிலும் பெருமை பொருந்திய ஒரு முஸ்லீம் ஸபையின்முன்னே, ‘‘இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை‘‘ என்ற விஷயத்தைக் குறித்து ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி செய்த பிரசங்கத்தின் ஸாரம்.**

*இன்று மாலை எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றிப் பேசு முன்பு, நான் அல்லாவின் மீது பாடிக்கொணர்ந்திருக்கும் தமிழ்ப் பாட்டை இங்கு வாசித்துக் காட்ட அனுமதி தரும்படி வேண்டுகிறேன். ஏற்கெனவே அரபி பாஷையில் “பாத்திஹா” (ஜபம்) ஓதி முடிந்து விட்டது. அதற்கு அனுஸரணையாக இந்தத் தமிழ்ப் பாட்டைப் பாடுகிறேன்:*

**பல்லவி**: *அல்லா, அல்லா, அல்லா!*

**சரணங்கள்**

*1. பல்லாயிரம் பல்லாயிரம் கோடி கோடி யண்டங்கள் எல்லாத் திசையிலுமோ ரெல்லை வெளி வானிலே நில்லாது சுழன்றோட நியமஞ் செய்தருள் நாயகன், சொல்லாலு மனத்தாலுந் தொடரொணாதபெருஞ்ஜோதி (அல்லா, அல்லா, அல்லா!)*

*2. கல்லாதவராயினும் உண்மை சொல்லாதவராயினும் பொல்லாதவ ராயினும் தவமில்லாதவ ராயினும் நல்லாரை நீதியின்படி நில்லாதவ ராயினும் எல்லோரும் வந்தேத்துமளவில்யமபயங் கெடச்செய்பவன் (அல்லா, அல்லா, அல்லா!)*

*எனக்கு முதல் முதல் இஸ்லாம் மார்க்கத்திலே அன்புண்டானதின் காரணம் பின்வருமாறு:*

*பல வருஷங்களின் முன்பு நான் ஒரு ஆங்கிலேய பண்டிதர் எழுதிய புஸ்தகமொன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் முஹம்மது நபியின் சரித்திரத்தைக் குறித்த சில விஷயங்கள் காணப்பட்டன. அவற்றைப் படித்துப் பார்த்தபோது, நான் அற்புதமுண்டாய்ப் பரவசமடைந்தேன். மக்கா நகரத்தில், பூஜாரிகளின் ஸபை கூடியிருக்கிறது. பிரமாண்டமான ஸபை. நாட்டிலுள்ள பூஜாரிகள் அத்தனை பேரும் சேர்ந்து கூடும் வருஷாந்தரக்கூட்டம் திருவிழாக் காலத்தை ஒட்டி நடந்தது;*

*முஹம்மது நபி மேற்படி பூஜாரிகளின் வம்சத்தில் பிறந்தவர். அரபி தேசத்து ஜனங்கள் அந்தக் காலத்தில் விக்ரஹாராதனையிலும் பல தேவ உபாஸனையிலும் தற்காலத்தில் தணிந்த ஜாதி ஹிந்துக்கள் எத்தனை மூழ்கிக் கிடக்கிறார்களோ, அத்தனை மூழ்கிக் கிடந்தார்கள். அவர்களிடையே முஹம்மது நபியின் குடும்பத்தாரகோவிற் குருக்களையும் பட்டர்களையும் ஒத்திருந்தனர். இவர்களுடைய வைதிகக் கோஷ்டியின் ஸபைக்கு நடுவே முஹம்மது நபி எழுந்து நின்று சொல்லுகிறார்:*

*நான் அல்லாவை நேரே பார்த்திருக்கிறேன். அவர் என்னைத் தமது முக்கிய பக்தராகவும் பிரதிநிதியாகவும் நியமனம் செய்திருக்கிறார். நீங்கள் இனிமேல் அவரைத் தொழுங்கள். அவரை மாத்திரம் தொழுதால் போதும். கடவுள் ஒருவர்தான் இருக்கிறார். பல ஈசுவரர் இல்லை. ஈசனைத் தவிர ஈசன்*

வேறில்லை. லா இலாஹா இல் அல்லா. அல்லாவைத் தவிர வேறு அல்லா கிடையாது. (அரபி பாஷையில் அல்லா என்ற பதத்திற்குக் கடவுள் என்று அர்த்தம்.)அவர் நம்மைப்போல தோலுடம்பும் கைகால் முதலிய உறுப்புக்களு முடையவரல்லர். அவரைச் சிலைகள் வைத்துத் தொழுவதிலும் அவருக்கு உங்களுடைய ஆகாரங்களை நைவேத்தியம் பண்ணுவதிலும் பயனில்லை.

அவர் எல்லாவற்றையும் படைத்து எல்லா வற்றையும் இயக்கிக்காத்து எல்லாவற்றையும் வடிவுமாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் எல்லாவற்றையும் தம்முடைய உடம்புகளாகவும் தம்முடைய ரூபங்களாகவு முடையவர். அறிவு வடிவமாக நிற்பவர். அருள் வடிவமாக நிற்பவர். அவரை மனமாகிய கோயிலில் நிறுத்தி, வீரியம் பக்தி என்ற பூக்களால் அர்ச்சிப்பதேசரியான பூஜை. இடைவிடாமல் அசையாமல் அவரிடம் தீராதமாறாத பக்தி செலுத்துங்கள். அவ்விதமான பக்தி "இஸ்லாம்" என்று சொல்லப்படும். இந்த இஸ்லாமைத் தரித்திருப்போர் நித்தியானந்த வாழ்க்கையாகிய முக்தி வாழ்க்கையை எய்துவார்கள்.ஆதலால், நீங்கள் இந்தப் புராதனக் கிரியைகளையும் கொள்கை களையும் விட்டுவிட்டு என் மதத்தில் சேர்ந்து அல்லாவின் திருவடி நிழலை அடைந்து வாழ முற்பட்டு வாருங்கள்" என்று முஹம்மது நபி யாண்டவர் திருவாய் மலர்ந்தருளினார்.

இதைக் கேட்ட மாத்திரத்தில் அங்கிருந்த பெருச்சாளிக் குருக்களெல்லோரும் தங்கள் சிஷ்யர் ஸஹிதமாக முஹம்மது நபியைப் பரிஹாஸம் பண்ணினார்கள். அந்தச் சமயத்தில் முஹம்மது நபி (ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம்) அவர்களின் மருமகனாகிய அலி என்பவர் எழுந்து "மாமா, உங்கள் கொள்கையை யார் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, நான் நம்புகிறேன். லா இலாஹா இல் அல்லா முகம்மதூர் ரஜூல் உல்லா, அல்லாவைத் தவிர வேறு கடவுளில்லை. அவருக்குச் சிறந்த நபி முஹம்மது" என்று பிரதிக்கினை செய்து கொடுத்தார். இது ஒரு செய்தி.இரண்டாவது செய்தி, முஹம்மது நபியைத் தமது குமஸ்தாவாகப் பல வருஷம் வைத்திருந்த பிறகு அவருக்கு மாலையிட்டவராகிய கதீஜா பீவியம்மை அவருடைய மதத்தில் சேர்ந்து கொண்டது. ஒருவன் தான் நேரே கடவுளைப் பார்த்ததாகவும் அதனின்றும் தெய்வங்கள் தன்னிடத்தில் விளங்குவதாகவும் வெளியூராரிடம் சொல்லி, அவர்களை நம்பும்படி செய்தல் எளிது.

இரவு பகல் கூடவேயிருந்து, நீ நோய் வேதனை பொறுக்க மாட்டாமல் அழுவதையும் இன்னும் உன்னுடைய பலஹீனங்கள், அதைர்யங்கள், அச்சங்கள், அநீதிகள், குரூரங்கள், பொறாமைகள், அதர்மங்கள், குறைகள் எல்லாவற்றையும் ஸஹிப்போராகிய உன் சுற்றத்தாரும், அத்யந்த நண்பர்களும், பக்கத்து வீட்டாரும் உன்னைக் கடவுளின் அருளும் அம்சமும் அடைந்த மஹானென்று நம்பவேண்டுமானால், நீ உண்மையிலேயே தெய்வத்தைக் கண்டால் தான் முடியும். மற்றபடி ஏமாற்றலினாலும், வேஷங்களாலும், நடிப்புகளாலும் இவர்களை நம்பும்படி செய்தல் சாத்தியமில்லை. இதுபற்றியே,இங்கிலீஷில் எந்த மனிதனும், தன் சொந்த ஊரில் தீர்க்கதரிசியாக மாட்டான் என்றொரு வசனம் சொல்லுகிறார்கள்.

முஹம்மது நபியை முதல் முதல் அலியும், அதை காட்டிலும் ஆச்சர்யந் தோன்றும்படி, கதீஜாபீவியும் கடவுளின் முக்கிய பக்தனென்றும் தெய்வ அருள் பெற்ற வரென்றும் பூமண்டலத்தில் கடவுளுடைய பிரதிநிதியாக அவதரித்தமஹா னென்றும் அங்கீகாரம் செய்து கொண்டதைக் கவனிக்குமிடத்தே, அவர் நிகரில்லாத ஞானி யென்பதும் பக்தகுல சிரோமணி யென்பதும் மிகத் தெளிவாக விளங்குகின்றன. மக்கத்தில் முஹம்மது நபிக்கு அநேகர் சீடராகச் சேர்ந்து விட்டார்கள். அவருடைய மதம் நாளுக்கு நாள் பிரபலமாகத் தொடங்கிவிட்டது. இதைக் கண்டு பழைய விக்ரஹாராதனைக்காரருக்குப் பொறாமையும் அச்சமும்மிகுதிப்படலாயின. மக்கத்து அதிபதி, நபியவர்களையும் அவருடைய முக்கிய நண்பர்களையும் சீடரையும் பிடித்துச் சிறையிலிடும்படி, தன் சேவகரிடம் கட்டளையிட்டான்.

இந்தச் செய்தி நபி ஆண்டவனுடைய செவிக்கு எட்டி விட்டது. இது 622 கி.பி. வருஷத்தில் நடந்தது. அப்பால், சில நண்பரின் வேண்டுகோளுக்கும் அல்லாவின் உத்தரவுக்கும் இணைந்த முஹம்மது ஒரே ஒரு சீடருடன் மதினாவுக்குப் புறப்பட்டார். போகிற வழியில் காடு; இவ்விருவரும் தனியே சென்று கொண்டிருந்தனர். இவர்கள் ஊரை விட்டுத் தப்பிய செய்தியறிந்து, மக்கத்து அதிபதி இவர்களின் பின்னே ஒரு குதிரைப் படையை அனுப்பினான்.

இவ்விருவரும் காட்டுவழியே போகையில், பின்னே குதிரைப்படைவரும் சத்தம் இவர்களுடைய காதிற் பட்டது. அங்கொரு புதருக்குள்ளே போய்ப் பதுங்கிக் கொண்டார்கள். குதிரைப் படையின் பாத ஒலி மிகவும் சமீபத்தில் கேட்டது. அப்போது நபியுடன் இருந்த சீடர்; "ஐயோ, இனி என்ன செய்யப் போகிறோம்? ஏது, நாம் தப்புவது கிடையாது. நம்மை இவர்கள் பார்த்துதான் போடுவார்கள். மக்கத்திற்குப் போனால் நம்மை வெட்டிக் கொல்வார்களோ, தூக்குத்தான் போடுவார்களோ!" என்று சொல்லிப் பலவாறு பரிதபிக்கலானான். அப்போது முஹம்மது நபி (ஸல்லல்லா ஹூ அலைஹி வஸல்லம்) அவர் சொல்லுகிறார்;

“கேளாய், நண்பனே; நான் இந்த உலகத்தில் அல்லாவின் காரியஸ்தனாக வேலை செய்து வருகிறேன். அல்லாவினால் எனக்கு மானுஷ லோகத்தில் நிறை வேற்றும்படி விதிக்கப் பட்டிருக்கும் காரியங்களெல்லாம் நிறைவேறி முடியும் வரை, என்னைஉலகத்து மனனர் களெல்லோரும் ஒன்றுகூடிக் கொல்ல விரும்பினாலும் எனக்கொரு தீங்கும் வரமாட்டாது. என் தலையில் ஆயிரம் இடிகள் சேர்ந்து விழுந்தபோதிலும் எனக்கு மரணம் நேரிடாது. அல்லா ஸர்வ வல்லமை யுடையவர். அவருடைய சக்திக்கு மேற்பட்ட சக்தி இந்தஜகத்தில் வேறில்லை. ஆதலால் எனக்குப் பயமில்லை. என்னுடன் இருப்பதனால் உனக்கும் ஆபத்து வராது. நீயும் பயப்பட வேண்டிய அவசியமில்லை” என்றார்.

அப்பால் அந்தக் குதிரைப் படை அவர்களைப் பாராமலே போய்விட்டது. இந்தச் சமாசாரத்தை நான் வாசித்துப் பார்த்தவுடனே என் மனதில் முஹம்மது நபியிடமிருந்த மதிப்பு ஆயிரம் மடங்கு மிகுதியாயிற்று ஸாதாரண காலங்களில் தைர்யத்துடனிருப்பது ஸுலபம். ஆபத்து நேரே தலையை நோக்கிவரும்போது “கடவுள் துணை செய்வார். எனக்குப் பயமில்லை” என்று மனதுடன் சொல்வோன் உண்மையான தெய்வ பக்தன்.

தெய்வ பக்தி ஒன்றைத் தவிர வேறெந்த சக்தியும் மனிதக் குண்டின் முன்னே தைர்யம் கொடுக்காது. சீறி வரும் பாம்பை நோக்கி அஞ்சாமல் நகைக்கவல்ல தீரர் கடவுளின் கருணை பெற்றோரேயாவர். மற்றப்படி வேறெந்த பலமும் அவ்விதமான தைர்யத்தைத் தராது. “பாம்பென்றால் படையும் நடுங்கும்.” இன்னும், மதீனாவுக்கு நபி சென்ற பிறகு இதுவரை பல தடவைகளில் மக்கத்தாரின் கொரேஷ் படைகள் எதிர்த்து வந்தன. முஹம்மது நபியிடம் சேர்ந்தவர்கள் தக்க ஸைன்யப் பயிற்சி பெறவில்லை. பயிற்சி பெற்று வந்த படைகளைப் பயிற்சியற்ற மனிதர்களைத் துணைக்கொண்டு முஹம்மது நபி வென்றார். ‘கலங்காத நெஞ்சுடைய ஞான தீரமும் அழியாத நம்பிக்கையும்’ அவரிடத்தே யிருந்தன. ஆதலால் அவருக்கு

எடுத்த காரியம் யாவினும் வெற்றி எங்கும் வெற்றி எதனிலும் வெற்றி விடுத்தவாய் மொழிக் கெங்கணும் வெற்றி வண்டும் முன்னர் அருளினர் அல்லா. இடையிடையே நான் என் மனத்திற்குள் முஹம்மது நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களைப்பற்றிச் சித்திரம் போட்டுப் பார்ப்பது வழக்கம். நடுப்பாலை வனத்தில், நள்ளிரவிலே தனி மணல் வெளியிலே, ஒட்டகையின் மீது தனியாக ஏறிக்கொண்டு போகிறார்.அல்லது, அங்கொரு குன்றின் மேல் ஏறி நிற்கிறார். கேள்வியாலும், நெடுங்காலத்துப் பக்தியாலும், நிகரற்ற அன்பினாலும், ஞானத்தினாலும் பக்குவப் பட்ட இவருடைய ஹ்ருதயம் அப்படிப்பட்ட இடத்தில் அல்லாவை நாடுகிறது. வேறு நினைப்புக்கு இடமில்லை.

அப்போது அங்கு ஞானவொளி வீசிற்று; நபி அல்லாவைக் கண்டார். சுகப் பிரம்ம ரிஷிக்கு நேர்ந்த அனுபவம் முஹம்மது நபிக்கு எய்திற்று.

அங்கமே நின் வடிவமான சுகர் கூப்பிட நீ எங்கும் ஏன் ஏன் என்ற தென்ன, பராபரமே

என்று தாயுமானவர் பாடியிருக்கிறார்.

இந்தக் கதை எப்படியென்றால், சுகப் பிரம்ம ரிஷி காட்டு வழியாகப் போய்க் கொண்டிருக்கையில் கடவுளைப் பார்க்க வேண்டுமென்ற தாகமேலீட்டால், “கடவுளே கடவுளே” என்று தறிக்கொண்டு போனாராம்.

அப்போது காட்டிலிருந்த கல், மண், மணல், நீர், புல், செடி, மரம், இலை, பூ, காய், காற்று, ஜந்துக்கள் எல்லாவற்றினின்றும்,”ஏன், ஏன்” என்ற மறுமொழி உண்டாயிற்று.

அதாவது, கடவுள் ஞானமயமாய் எல்லாப் பொருள்களிலும் நிரம்பிக் கிடப்பதைச் சுக முனிவர் கண்டார் என்பது இக்கதையின் பொருள்.

முஹம்மது நபி மஹா ஸுந்தர புருஷர், மஹா சூரர், மஹா ஞானி, மஹா பண்டிதர், மஹா பக்தர், மஹா லௌகீக தந்திரி, வியாபாரமானாலும், யுத்தமானாலும் முஹம்மது நபிகவனித்தால், அந்த விஷயத்தில் வெற்றி மிகவும் உறுதி. ஆதலால் அவர் மிகவும் அபிமானிக்கப்பட்டார்.

எனினும், புதிய மதமொன்று கொண்டு வந்ததினின்றும் அவர் சுற்றத்தாரும் அத்யந்த நண்பர்களும் பகைமை செலுத்தலாயினர்.

ஆனால், நபி பொருட்டாக்கவில்லை முஹம்மது நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள், உலகத்தின் பொது நன்மைக்கும் தர்மத்திற்கும் நீதிக்கும் ஸத்தியத்திற்கும் அல்லாவிற்கும்முன்னே, தம்முடைய சொந்த ஸுகங்களையும், ஸௌகர்யங்களையும், வாழ்வையும், செல்வத்தையும், அதனால் விளையும் பெருமைகளையும், இன்பங்களையும், ரக்ஷணைகளையும், உயிரின் பாதுகாப்பையுங் கூடச் சிறிய பொருளாகக் கருதினர்.

இவரிடத்தில் இத்தனை உறுதியான பக்தியிருப்பதைநோக்கியே, அல்லா இவரைத் தமக்கு மிகவும் பிரியமான நபியாகத் தெரிந்தெடுத்தார். இங்கு ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி முஹம்மது நம்பியவர்களின் சரித்திரத்தைச் சுருக்கமாகஎடுத்துரைத்தார்.

ஆனால் ரவண ஸமுத்திரத்திலே இஸ்லாம் மதத்தின் மஹிமையைக் குறித்துச் செய்த உபன்யாஸத்தில், அவ்விஷயம் சொல்லப்பட்டு ஏற்கனவே மித்திரனில் வெளிப்பட்டு இருப்பதால், இங்கு மீண்டும் ப்ரசுரம் செய்யவில்லை.

# அன்பகத்தின்

## அன்பான வேண்டுகோள்!

அன்பார்ந்த வாசகர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

எமது இஸ்லாமியப் பிரச்சாரப் பணிகள் 37 ஆண்டுகளைக் கடந்து, 38ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்.

ஒரு நீண்ட நெடும் காலம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும், எங்கள் பிரச்சாரங்கள் தொடந்து நடந்து வருகின்றன. அல்லாஹ் எங்கள் வழி பல பிரபல்யங்களுக்கு நேர்வழியைக் காட்டினான் அல்ஹம்துலில்லாஹ்.

அப்படி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இஸ்லாத்தின் செயல்முறைகளையும் இஸ்லாத்தின் அனைத்துப் பகுதிகளையும் கற்றுத் தருவதற்கென மூன்று கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் மார்க்க கல்வியை கற்று சென்றுள்ளார்கள். அவ்வாறு நிறுவப்பட்ட மூன்றாவது கல்விக்கூடமே அன்பகம். அதுவும் தன் 10ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கல்வி கற்றுச் சென்றுள்ளார்கள். அன்பகம் கடந்த பத்து ஆண்டுகளாக ஒரு வாடகைக் கட்டிடத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதையும் அடிக்கடி மாற்றிட வேண்டிய நிலை.

இன்ஷா அல்லாஹ் அதனை ஒரு சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு உங்கள் நிதி உதவிகளை தாராளமாக வழனுகும் படி அன்புடன் வேண்டுகிறோம்.

அல்லாஹ் உங்களுக்கு அளப்பரிய கூலிகளை வழங்கிடப் போதுமானவன்.

இவண்,

மு. குலாம் முஹம்மது, பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி, ஹாஜி. அப்துல் ரவூஃப்

செக், டி.டி. அனுப்புவோர்

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்

52/1, மண்ணடி தெரு, 4வது மாடி, அறை எண் 7, மண்ணடி, சென்னை - 600 001.

Please draw your cheques / DD infavour of **DARUL ISLAM FOUNDATION TRUST**
**CANARA BANK A/c. 1287101017301** branch St,mary's Road, R.A.puram, Chennai.
and send to: 52/1, Mannady Street, 4th Floor, Room No.7, Mannady, Chennai-600001
**Mobile : 81481 29887,** website: www.darultrust.in, Email: darultrust@yahoo.com,



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002